ஸ்ரீ

திருப்பத்தூர்

திரு. கா. அ. ஷண்முக முதலியார்

அவர்களின்

வாழ்க்கைக் குறிப்பு



1978

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

247

திருப்பத்தூர்

திரு. கா. அ. ஷண்முக முதலியார்

அவர்களின்

வாழ்க்கைக் குறிப்பு

1978



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். — திருமறை.

'ஷண்முக நிலையம்'

செங்குந்தர் தெரு, திருப்பத்தூர், வ. ஆ.

635 601.

ஸ்ரீ

முன்னுரை

எங்கள் தந்தையார் திரு. கா. அ. ஷண்முக முதலியார் அவர்கள் ஓரளவு வசதியுடைய குடும்பத்தில் பிறந்தார். சிறு வயது முதல் இறுதி வரை உழைத்துச் செல்வம் ஈட்டினார்; தம் செல்வத்தைப் பல்வேறு துறையில் பலருக்கும் வழங்கினார்; ஈத்துவக்கும் இன்பம் பெற்றார்; வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தார். அவர் வாழ்க்கை புகழோடு விளங்கியது.

எங்கள் தந்தையார் பெருஞ் செல்வராகத் திகழவில்லை; ஆயினும் பெருஞ் செல்வர்க்கு உரிய செயல்களையெல்லாம் செய்ய முனைந்தார்; அவற்றைச் செவ்வனே செய்து முடித்தார்.

ஒரு குடும்பத்தில் தொடர்ச்சியாக எட்டுத் தலைமுறையினர் இந்நூலுள் குறிக்கப்பட்டுள்ளனர்.

எங்கள் தந்தையார் நினைவு ஆற்றல் பெரிதும் பெற்றவர். அவர் அவ்வப்போது தம்முடைய நினைவுத் திரைகளிலிருந்து பல செய்திகளைக் கூறி வந்தார். அவற்றையெல்லாம் விரிவாக எழுதிவைத்துக் கொண்டோம். அவற்றிலிருந்து ஒரு சிலவற்றை மட்டும் எடுத்து, எங்களுக்குத் தெரிந்த சிலவற்றையும் இணைத்து இந்த நூலை உருவாக்கியுள்ளோம்.

எங்கள் குடும்பப் பெருந் தலைவராகத் திகழ்ந்த எங்கள் தந்தையார் அவர்களை எல்லோரும் 'பெரியவர்' என அன்புடன் குறிப்பிடுவர். இத்தகைய பெரியாரின் வாழ்க்கைக் குறிப்பு பிறர்க்கும் ஊக்கம் அளிக்கும், நன்முறையில் பயன்படும் என்று எண்ணி இதனை வெளியிடுகின்றோம்.

'ஷண்முக நிலையம்,'
திருப்பத்தூர், வ. ஆ.,
30-7-1978.

அன்புள்ள,
கா. அ. ஷ. பத்மநாபன்,
கா. அ. ஷ. ரகுநாயகன்.

பொருளடக்கம்

			பக்கம்
1	மூதாதையர்	...	1
2	காளியப்ப முதலியார் குடும்பம்		
3	அருணாசல முதலியார் குடும்பம்	...	2
4	தோற்றம்		
5	மூத்த தம்பி		
6	இளைய தம்பி	...	3
7	தங்கையர்		
8	இளமைக் கல்வி	...	4
9	குடும்பத் தொழிலில் ஈடுபடுதல்		
10	முதல் திருமணம்	...	5
11	பெரிய தாயார்		
12	தமிழ்க் கல்வி	...	6
13	வீடு கட்டுதல்	...	7
14	தந்தையாரின் மகிழ்ச்சியும் ஏக்கமும்		
15	ஷண்முகர் பெயருக்கு விலாசம் மாற்றம்		
16	இரண்டாம் திருமணம்	...	8
17	பொதுவாழ்வில் ஈடுபடுதல்		
18	ஜில்லா போர்டு, நகர் மன்றம்		
19	தாலுக்கா போர்டு	...	9
20	காந்தியடிகள் தரிசனம்		
21	சட்டமன்றம்	...	10
22	குலப் பணி	...	11
23	அரசியல் பணி		
24	மிட்டாதார்		
25	கோவை மில் தொடர்பு	...	12
26	திருப்பூர் மில் தொடர்பு		

27 நூல் விற்பனை ஏஜன்சி ... 13

28 பருத்தி அறவை ஆலை

29 நூற்பு ஆலை

30 (1) திருமகள் மில்ஸ் ... 14

(2) திருமகள் மில் கோயில் ... 16

31 குடியேற்றம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் ... 17

32 திருமகள் கல்விச் செல்வம் ... 18

33 திருமகள் கலைக் கல்லூரி

34 வடநாட்டுப் பயணம்

35 பம்பாய்ப் பயணம் ... 19

36 சமய நெறி

37 பஜனை மன்றம் ... 20

38 ஸ்ரீ ராம நிலையம் ... 21

39 கல்வி நன்கொடைகள் ... 23

40 இதர நன்கொடைகள் ... 24

41 திருப்பதி-திருமலையில் சங்குமிட்டா குடில்

42 ஷண்முகர் இயற்றி வெளியிட்டவை ... 25

(1) நளாயினி வெண்பா

(2) திருமால் போற்றி அகவல் ... 26

(3) இராகவன் புகழ் அறுபது

(4) திருமால் அவதாரம் ... 27

(5) திருவேங்கட மாலை

(6) நூற்றெட்டுத் திருப்பதி போற்றி அகவல் ... 28

(7) திருமால் வெண்பா மாலை ... 29

(8) இராகவன் புகழ் மாலை ... 30

(9) திருவேங்கடப்பெருமான் திருப்பள்ளி எழுச்சி ... 31

(10) சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ... 32

(11) திருமால் அருச்சனை நூல் ... 33

(12) புத்தாண்டு வாழ்த்துக்கள்

43	ஷண்முகர் செய்துவைத்த திருமணங்கள் ...	33
44	சுற்றத்தாருக்கு உதவுதல் ...	34
45	மணிவிழா	
46	80 நிறைவு விழா ...	35
47	பொன்னீராட்டு விழா	
48	பெற்ளுருக்குச் செய்த கடன் ...	36
49	ஷண்முகருக்கு மக்கள் ஆற்றிய கடன்	
50	மூத்த மகன் எதிராஜரின் குடும்பம்	
51	இரண்டாவது மகன் பத்மநாபனின் குடும்பம்	37
52	மூன்ருவது மகன் ரகுநாயகனின் குடும்பம் ...	39
53	மூத்த மகள் ஜானகிஅம்மாள் குடும்பம் ...	40
54	இரண்டாவது மகள் சொர்ணம்மாள் குடும்பம்	41
55	மூன்ருவது மகள் கமலநாயகியின் குடும்பம் ...	42
56	கடைசி மகள் செல்வநாயகியின் குடும்பம் ...	43
57	ஆல்போல் தழைத்தல்	
58	ஷண்முகர் கொண்ட உறவுகள்	
59	நாள் பார்த்துக் கொடுத்தல் ...	45
60	கோயில்களும் கும்பாபிஷேகமும் ...	46
	(1) ஸ்ரீ தண்டபாணி கோயில்	
	(2) ஸ்ரீ ராம நிலேயம் ...	47
	(3) குடியேற்றம் திருமகள் மில் கோயில்	
	(4) குடியேற்றம் ஈசுவரன் கோயில் ...	48
	(5) கரகப்பட்டி ஜோதி விஞயகர் கோயில்	
	(6) கோட்டை ஸ்ரீ பிரம்மேசுவரர் ஆலயம் ...	49
	(7) மடவாளம் ஸ்ரீ அங்கநாதீசுவரர் கோயில்	
	(8) வாணியம்பாடி விஞயகர் கோயில்	
	(9) ஆதியூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் ...	50
	(10) ஊத்தங்கரை ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோயில்	

(11) கோட்டை
ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில் ... 50
(12) ஸ்ரீ சுந்தரவீர ஆஞ்சநேயசுவாமி
கோயில் ... 51
61 சேஷய்யர் ... 52
62 இராகவேந்திராச்சார்
63 ஜோலார்பேட்டை வி. வரதராஜமுதலியார் ... 53
64 டாக்டர். ஜேசுதாசன் — பேற்றன் ... 54
65 மிஸ். ஹோம்ஸ் அம்மையார் ... 56
66 டாக்டர் மு. வ.
67 காரைக்குடி ராய. சொ. ... 57
68 மோ. வே. கோவிந்தராஜ அய்யங்கார் ... 58
69 பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்
70 குடும்பத்தின் ஆசாரிய சுவாமிகள் ... 59
71 திருமுருக கிருபானந்தவாரியார்
72 டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் ... 60
73 டாக்டர் இராஜேந்திர பிரசாத் ... 61
74 டாக்டர் சுப்பராயன் ... 62
75 மூதறிஞர் இராஜாஜி ... 63
76 பெருந்தலைவர் காமராஜ் ... 64
77 காக்கங்கரை அப்துல் மஜீத் சாயபு ... 65
78 சின்னகரகப்பட்டி சி. வெ. சின்னப்ப நாயுடு
79 பெரியகரகப்பட்டி
இஜாராதார் சி. எ. வேங்கடப்ப நாயுடு ... 66
80 பள்ளத்தூர் சின்னத்தாய் அம்மாள்
81 கஜ்ஜல்நாயக்கம்பட்டி
கே. வி. இராமசாமி செட்டியார் ... 67
82 ஷண்முகரின் நண்பர்கள் ... 68
83 மு. வ. நோக்கில் ஷண்முகர் ... 71
84 திரு. வி. க. நோக்கில் ஷண்முகர்



ஷண்முகர் - தம் இரு மனைவியருடன் (திருமதி எல்லம்மாள் - திருமதி பழனியம்மாள்)

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

திரு. கா. அ. ஷண்முக முதலியார்

அவர்களின்

வாழ்க்கைக் குறிப்பு

மூதாதையர் :

வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் தானப்ப முதலியார் வாழ்ந்து வந்தார். இவர் 1760ஆம் ஆண்டில் பிறந்திருக்கக்கூடும். இவருடைய குமாரர் தாண்டவ முதலியார், 1790இல் பிறந்திருக்கலாம். இவரை ஊத்தங்கரை தாண்டவ முதலியார் என்று குறிப்பிடுவார்கள். இவர் சிலகாலம் ஊத்தங்கரைக்குச் சென்று அங்கு வாழ்ந்திருக்கக்கூடும். அதனுல் அவரை அவ்வாறு குறிப்பிட்டிருப்பார்கள். தாண்டவமுதலியார் மனைவியின் பெயர் நஞ்சம்மாள். தாண்டவ முதலியாருடைய குமாரர் காளியப்ப முதலியார் 1817இல் பிறந்தார். இவர் திருப்பத்தூர் செங்குந்தர் தெரு — இப்போது 6 எண் உள்ள வீட்டில் வாழ்ந்திருந்தார். இந்தக் குடும்பத்தை, இவர் முதற்கொண்டு காளியப்ப முதலியார் குடும்பம் என்று அழைப்பார்கள்.

காளியப்ப முதலியார் குடும்பம் :

காளியப்ப முதலியார் ஆதியூர் திருநாத முதலியாரின் சகோதரி பச்சமுத்தம்மாளை மணம் செய்து கொண்டார். காளியப்ப முதலியாருக்கு ஆண் மக்கள் மூவரும் பெண்மக்கள் இருவரும் பிறந்தார்கள். 1842இல் அருணுசல முதலியாரும் 1845இல் ஆறுமுகமுதலியாரும் 1848இல் வையாபுரிமுதலியாரும் 1851இல் உண்ணுமுலைஅம்மாளும், 1854இல் திருத்தணி அம்மாளும் பிறந்தார்கள். காளியப்ப முதலியார் 1857இல் தம்முடைய 40ஆவது வயதில் காலமானுர். அப்போது 15 வயதான அருணுசல முதலியாரும், 12 வயதான ஆறுமுக முதலியாரும் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டியவர்கள் ஆனுர்கள்.

விட்டில் இரு தறிகளிலும் எட்டுச் சேலைகளுக்குண்டான பாவு மட்டுமே இருந்தது. சிறு வயதில் அருணாசலமுதலியாரும், ஆறுமுக முதலியாரும் கடுமையாக உழைத்து முன்னேறி வந்தார்கள்.

அருணாசல முதலியார் குடும்பம் :

குடும்ப வேலைகளை அருணாசல முதலியாரின் தாயார் பச்சமுத்தம்மாவினால் செய்வது கடினமாகஇருந்ததால் அருணாசல முதலியாருக்குப் பதினேழு வயதில் திருமணம் செய்தார்கள். செலந்தம்பள்ளி மங்கைத்தாயம்மாள் என்பவரை அருணாசல முதலியார் மணந்தார். மங்கைத்தாயம்மாள் ஐந்து பெண் மக்களை ஈன்றார். அவர்கள் பச்சையம்மாள், சின்னத்தாயம்மாள், வள்ளியம்மாள், வேலாயம்மாள், பழனியம்மாள் ஆவார்கள். அருணாசல முதலியாருக்கு ஆண் சந்ததி உண்டாகவில்லையே என்ற கவலை மிகுந்தது. அவர் தம்முடைய நண்பர் குடியேற்றம் மா. சின்னு முதலியார் என்பவரின் ஆலோசனையின்படி நாற்பது வயதில் முத்துவேடியம்மாளை இரண்டாம் மனைவியாக 1883இல் மணந்து கொண்டார்.

தோற்றம் :

அருணாசல முதலியாருக்கு ஆண் மகவு வேண்டி அருந்தவம் செய்தார்கள்; மடிப் பிச்சை ஏந்தினார்கள்; திருவேங்கடமுடையானை வேண்டினார்கள்; பழனி ஆண்டவனுக்குக் காவடி எடுத்தார்கள். மூன்று ஆண்டுகள் கடந்த பின்னர் முத்துவேடியம்மாள் தம் மூத்த மகன் ஷண்முகரை ஈன்றெடுத்தார். ஷண்முகர் 1885ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாள் (பார்த்திப ஐப்பசி 18) திங்கட்கிழமை, பூர நட்சத்திரம், கும்பலக்கினத்தில் பிறந்தார். கா. அ. ஷண்முக முதலியாருடன் ஆண்மக்கள் இருவரும் பெண்கள் மூவரும் பிறந்தனர். அவர்கள் பழனிசாமி முதலியார், காளியப்ப முதலியார், லட்சுமியம்மாள், பச்சமுத்தம்மாள், தெய்வானையம்மாள் ஆவார்கள்.

மூத்த தம்பி :

பழனிசாமி முதலியார் 1888இல் பிறந்தார். ஷண்முகரும் பழனிசாமி முதலியாரும் ஒற்றுமையாக ஒரே குடும்பமாக வாழ்ந்தார்கள். "இராம லட்சுமணர்போல் அண்ணன் தம்பி

இருவரும் வாழ்கின்றார்கள்" என்று ஊரார் பாராட்டுவார்கள். அண்ணன் சொல்லுக்கு எதிர்சொல் பேசாத அன்புடையவராகப் பழனிசாமி முதலியார் வாழ்ந்தார். பழனிசாமி முதலியார் ஷண்முகருடன் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்ததால், ஷண்முகர் பொதுவாழ்வில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டது. பழனிசாமி முதலியார் தம் தமக்கை சின்னத்தாயம்மாளின் மகள் மங்களம் மாளை மணந்து கொண்டார். அவர் வயிற்றில் பிறந்த மக்கள் மூவர். ஆண்கள் இருவர்; பெண் ஒருவர். சடகோப முதலியார், திருநாத முதலியார், மதுரைவல்லி ஆகிய மூவரா வர். ஆண்டவன் அவருக்கு ஆயுளை வழங்கவில்லை. அவர் 1930ஆம் ஆண்டில் தம்முடைய நாற்பத்திரண்டாவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

இளைய தம்பி :

காளியப்ப முதலியார் 1896இல் பிறந்தார். இவர் 1924 ஆம் ஆண்டில் பொதுக் குடும்பத்திலிருந்து விலகிக் கொண்டார்; தமக்கையார் சின்னத்தாயம்மாளின் பேத்தி பர்வதம்மாளை மணந்தார். தாசரதியும், அரவிந்தவல்லியும் அவர் வயிற்றில் பிறந்தார்கள். 1944 ஆம் ஆண்டில் பர்வதம்மாள் காலமான பின்னர் வாணியம்பாடி லட்சுமியம் மாளை இரண்டாவதாக மணந்தார். கோமளவல்லி, இராமா நுஜன், நாதமுனி ஆகிய மூவரும் அவர் வயிற்றில் பிறந்தார்கள். லட்சுமியம்மாள் 1976 ஏப்ரலில் காலமானார்.

தங்கையர் :

ஷண்முகரின் உடன் பிறந்த பெண்கள் மூவரில் முதல் இருவரும் உள்ளூரிலேயே வாழ்க்கைப் பட்டார்கள். இரண்டா வது தங்கை பச்சமுத்தம்மாளும் அவருடைய கணவர் திரு. கு. வேலாயுத முதலியாரும் குடும்பத் தொழிலுக்கு உதவியாக இருந்தார்கள். பச்சமுத்தம்மாள் தறிகளுக்கான பாவு ஓடிக் கொடுப்பார்கள். வேலாயுத முதலியார் சாயம் தோய்க்கும் வேலையில் உதவியாக இருந்தார். மூன்றாவது தங்கை தெய்வானை அம்மாளைக் குடியேற்றம் மா. ஆ. வேலாயுத முதலி யார் இரண்டாம் தாரமாக மணந்தார்.

இளமைக் கல்வி :

ஷண்முகருக்கு ஐந்து ஆண்டு நிறைந்த பின்னர் பெற்ரோர்கள் அவரைப் பள்ளியில் சேர்த்தனர். ஆஞ்சநேயர் கோயில் நாகப்ப நாயுடு திண்ணைப் பள்ளியில் ஷண்முகர் சில நாள் பயின்ருர்; மாரியம்மன் கோயில் பள்ளியில் சில ஆண்டுகள் படித்தார்; பின்னர் சாமி செட்டித் தெருவில் அக் காலத்திருந்த கலியாணராமய்யர் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கலானுர். ஷண்முகருக்குப் பத்து வயதானபோது, பிரைமரித்தேர்வு நடந்தது. அந்தத் தேர்வில் ஷண்முகர் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறவில்லை. அடுத்த ஆண்டு, ஆங்கிலத் தேர்வுக்குச் செல்லும் தருவாயில் ஷண்முகர் உடல் நலிவுற்ருர். ஆங்கிலத்தின் இடையூறே ஷண்முகர் மேலும் படிக்கத் தடையாய் இருந்தது. ஷண்முகரின் பள்ளிப் படிப்பு அத்துடன் முடிவுற்றது.

குடும்பத் தொழிலில் ஈடுபடுதல் :

பதிஞேராவது வயதில் ஷண்முகர் தம் குடும்ப வேலைகளில் ஈடுபடலானுர். பள்ளியில் பயின்று வந்த போதும், வாரச் சந்தை நாளான திங்கட்கிழமைகளில் பிற்பகலில் ஷண்முகர் பள்ளிக்குச் செல்வதில்லை; வீட்டிலிருந்து வாணிபத்தில் தந்தையாருக்கு உதவி வந்தார். இவர் தொழிலுக்கு வந்த பின்னர் சந்தைகளுக்குச் சென்று ஜவுளி விற்பனை செய்தல், விட்டிலிருக்கும் போது நூல் விற்றல், வெளியில் சென்று பாக்கி வசூல் செய்தல் ஆகிய வேலைகளைச் செய்து வந்தார். 1899இல் திருப்பத்தூரில் முதன் முறையாக 'பிளேக்' வந்துற்றது. வேலையாட்கள் எல்லோரும் பிளேக்கிலிருந்து தப்பிப் பிழைக்க வெளியூர் சென்றனர். ஷண்முகருக்கு அப்போது வயது பதிஞன்கு. வேலையாட்கள் செய்து வந்த வண்டி ஓட்டுதல், மூட்டை தூக்குதல் முதலான வேலைகளையும் ஷண்முகரே செய்யலானுர். ஷண்முகர் தம் தந்தையாருடன் பல ஆண்டுகள் சந்தைகளுக்குச் சென்று வியாபாரம் செய்து வந்தார். தந்தையார் மறைவுக்குப் பிறகு ஷண்முகர் சந்தைக்குப் போவதில்லை. வீட்டில் இருந்து மற்ற தொழில்களைக்

கவனித்து வந்தார். அப்போது இவருடைய தம்பி திரு. பழனிசாமி முதலியார் சந்தைகளுக்குப் போய் வரலானார். ஒவ்வோர் ஆண்டிலும் பொங்கல் சமயததில் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு ஷண்முகரும் சந்தைக்குச் சென்றுவருவது வழக்கம். இந்தப் பழக்கம் 1938 ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது. 1939 இல் திருமகள் மில் வேலை செய்யத் தொடங்கியபிறகு ஷண்முகருக்குச் சந்தைக்குச்செல்லும் வாய்ப்பு ஏற்படவில்லை.

முதல் திருமணம் :

1902ஆம் ஆண்டு ஷண்முகருக்கும், எல்லம்மாளுக்கும் திருமணம் நடந்தது. அப்போது அவருக்குப் பதினாறு வயது முடிந்து பதினேழாவது வயது நடந்து கொண்டிருந்தது. எல்லம்மாள் ஷண்முகருக்குத் தாயுறவில் வந்தவர். ஷண்முகரின் தாயார் முத்துவேடியம்மாளை அருணாசல முதலியார் மணப்பதற்கு வாணியம்பாடி நஞ்சப்ப முதலியார் ஆதரவாக இருந்தார். நஞ்சப்ப முதலியாரின் பேத்தி எல்லம்மாளை மணந்து கொள்வது அவருக்குச் செய்யும் கைம்மாறாகக் கருதப்பட்டது.

பெரிய தாயார் :

ஷண்முகர் சிறுவயது முதலே தம் பெரிய தாயார் மங்கைத் தாயம்மாளிடம் வளர்ந்தவர். மங்கைத்தாயம்மாள் ஷண்முகரிடம் பெரிதும் அன்புடையவராக இருந்தார். அவர் சிறிதும் வேறுபாடு காட்டாமல் தம் வயிற்றில் பிறந்த மகவாகவே ஷண்முகரைப் பேணி வளர்த்தார். மங்கைத்தாயம்மாளின் வயிற்றில் பிறந்த பெண்மக்களும் அவ்வாறே ஷண்முகரிடம் அன்பு காட்டினார்கள். மங்கைத்தாயம்மாள் காலம் சென்ற பின்னர் எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக ஷண்முகர் தம் பெரிய தாயாருக்கு ஆண்டுதோறும் தவறாமல் திவசம் செய்து வந்தார். அவர்களுக்கு இவ்வாறு பல ஆண்டுகள் திவசம் செய்வது குறித்து ஷண்முகர் பெருமிதம் கொண்டு மகிழ்வார்; அவர்களுடைய அன்பை எண்ணி எண்ணி மனம் நெகிழ்வார்.

தமிழ்க் கல்வி :

ஷண்முகர் தம்முடைய பதினேழாம் வயதில் ஆழ்வார்களின் அருட் பாடல்களைப் படித்துச் சுவைத்தார். ஷண்முகருக்குப் பதினெட்டு வயதான போது, நல்லியாங்குளத்துப் பாகவதர் என்பவருடைய பாரதப் பிரசங்கத்தைக் கேட்க நேர்ந்தது. அந்தப் பேச்சில் இவர் மனம் ஈடுபட்டது. அவரைப் போலவே தாமும் படித்து அறிஞராக வேண்டும் என்னும் எண்ணம் இவருக்குத் தோன்றியது. திருப்பத்தூரில் அக்காலத்து வாழ்ந்திருந்த தமிழாசிரியர் ஆதியூர் திரு. க. குமாரசாமி முதலியார் என்பவரை நாடினர். இவருக்குப் பாரதம் சொல்லித்தர அவரும் உடன்பட்டார்; பாரதம் கற்பிக்கும் முன்னர், "அருணகிரி அந்தாதி" என்னும் நூலை ஒரு வாரம் பாடம் நடத்தினர். இருபத்தொரு வெண்பாக்கள் சொல்லி முடிந்தன. ஷண்முகரும் அவற்றை மனப்பாடம் செய்து விட்டார்.

முத்துவேடியம்மாள், தம் மகன் தமிழ் நூல்களைக் கற்க முனைந்திருக்கும் செய்தியை அறிந்தார். அது துறவிகள் படிப்பு என்று தவருக எண்ணி அஞ்சி, ஷண்முகர் தமிழ் கற்பதைத் தடுத்துவிட்டர்ர். ஓராண்டு கழித்துக் குமாரசாமி முதலியார் ஷண்முகரைக் காண நேர்ந்தபோது, தொடர்ந்து தமிழ் படிக்க வருமாறு அன்புடன் அழைத்தார்; நைடதமும், நிகண்டும் சொல்லிக்கொடுத்தார். 'அரிசமய தீபம்' என்றநூலில் அறுபது பாடல்களையும் சொன்னர். அவரிடம் பாடம் கேட்பது அந்த அளவில் நின்றுவிட்டது. பின்னர், குமாரசாமி முதலியாரின் மகன் தமிழாசிரியர் திரு. ஆ. கு. முருகைய முதலியார் என்பவரிடம் ஷண்முகர் தொடர்ந்து பாடம் கேட்டார்; குசேலோபாக்கியானம், திருவரங்கத்தந்தாதி, மீனுட்சி பிள்ளைத் தமிழ் ஆகிய மூன்று நூல்களையும் அவரிடம் பாடம் கேட்டார். ஷண்முகரின் இருபத்தொன்ருவது வயதுடன் பாடம் கேட்பது முடிந்தது.

வீடு கட்டுதல் :

அப்போது ஷண்முகரின் குடும்பத்தினர் குடியிருந்த வீடு பழைய வீடு; மூதாதையர்கள் வாழ்ந்தது. ஒரு நாள் பெருமழை வந்தபோது, வாசலில் நீர் நிறைந்து தண்ணீர் வீட்டுக்குள் புகுந்துவிட்டது. விற்பனை ஜவுளிகள் மழைத் தண்ணீரில் நனைந்து போயின. இதனைக் கண்ட அருணாசல முதலியார் மனம் வருந்தினார். அதனை அறிந்த ஷண்முகர் தமது இருபத்தொன்றாம் வயதில் புதிய வீட்டைக் கட்டத் தொடங்கினார். வேறு எவருடைய உதவியுமின்றி அவரும், அவருடைய தம்பி பழனிசாமி முதலியாரும் சேர்ந்து உழைத்து வீட்டைக் கட்டி முடித்தார்கள். 1908ஆம் ஆண்டில் புது மனையில் குடி புகுந்தார்கள்.

தந்தையின் மகிழ்ச்சியும், ஏக்கமும் :

தம்முடைய மகன் இவ்வளவு இளைய வயதில் அழகான வீட்டைக் கட்டி முடித்த சாதனையைக் கண்டு அருணாசல முதலியார் பெருமிதமும் மகிழ்ச்சியும் கொண்டாராயினும், வீட்டைக் கட்டியதில் பெரும் பணம் செலவாய்விட்டதே என்றும், அவ்வளவு பணத்தை மீண்டும் சம்பாதிக்கப் பல ஆண்டுகள் உழைக்க வேண்டுமே என்றும் கருதினார். இதனை ஷண்முகர் அறிந்தார்; அன்று முதல் வீட்டுச் செலவை மிக மிகச் சுருக்கினார்; தம் தொழிலில் முன்னைவிடப் பேருக்கம் கொண்டு உழைத்தார்.

ஷண்முகர் பெயருக்கு விலாசம் மாற்றம் :

வீடு கட்டி முடித்த ஆண்டில் தம்பி பழனிசாமி முதலியாருக்கும், தங்கை பச்சமுத்தம்மாளுக்கும் திருமணங்கள் நடைபெற்றன. இரண்டு ஆண்டுகள் கழித்து ஷண்முகர் கணக்குப் பார்த்தார். வீடு கட்டிய செலவு, இரு திருமணங்களுக்கான செலவு, வீடு கட்டத் தொடங்கியது முதல் நான்கு ஆண்டுகள் குடும்பச் செலவு எல்லாம் போக, நான்காயிரம் ரூபாய் மிச்சப்பட்டிருந்தது. தந்தையாரிடம் ஷண்முகர் கணக்கைக் காட்டினார். அருணாசல முதலியார் மகிழ்ந்தார். அன்று முதல் (1910) தம் குடும்ப வரவு செலவுக் கணக்குகளைத் தம் மூத்த மகன்

பொறுப்பில் விட்டுவிட்டு அவர் ஒய்வு பெற்றுக்கொண்டார்; 1912இல் தம்முடைய வாணிபத்தை மூத்த மகன் ஷண்முகர் பேரில் மாற்றி விட்டார்.

இரண்டாம் திருமணம் :

அருணாசல முதலியாரின் மூத்த மனைவி மங்கைத்தாயம்மாளின் வயிற்றில் பிறந்த வள்ளியம்மாள், செலந்தம்பள்ளி என்னும் அருகிலுள்ள கிராமத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தார்கள். வள்ளியம்மாள் வயிற்றில் பிறந்த பெண் பழனியம்மாள். அருணாசல முதலியார், தம் மகள் வயிற்றுப் பிறந்த பேத்தியான இந்தப் பழனியம்மாளைத் தம் மருமகளாகத் தம் வீட்டுக்குக் கொண்டு வர வேண்டுமென்று ஆவல் கொண்டார். தந்தையாரின் விருப்பத்துக்கு இணங்க, ஷண்முகர் தம் 23ஆவது வயதில் (1908ஆம் ஆண்டில்) பழனியம்மாளைத் தம் இளைய மனைவியாக மணந்து கொண்டார்.

பொதுவாழ்வில் ஈடுபடுதல் :

1915 ஆம் ஆண்டில் திருப்பத்தூரில் முதன் முதலாக பெஞ்ச் மாஜிஸ்திரேட் கோர்ட் ஏற்பட்டபோது, அப்போது இந்நகரில் துணையாட்சித் தலைவராக (Sub-Collector) இருந்த திரு. தாம்போ, ஐ. சி. எஸ். என்பவர், ஷண்முகரை ஒரு கௌரவ பெஞ்ச் மாஜிஸ்திரேட்டாக நியமித்தார். ஐந்து ஆண்டுகள் அப்பணியை ஆற்றிய பின்னர் 1920 இல் ஷண்முகர் முதல் வகுப்பு பெஞ்ச் மாஜிஸ்திரேட்டாக நியமனம் பெற்றார்.

ஜில்லா போர்டு, நகர் மன்றம் :

1924 இல் அப்பதவியிலிருந்து விலகி ஜில்லா போர்டு அங்கத்தினர் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். 1927 இல் திருப்பத்தூர் நகர் மன்றத்துக்கு ஓர் உறுப்பினராக இவரை நியமித்தார்கள். அந்த ஆண்டிலேயே அம்மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நகர் மன்றத் தலைவராக இருந்த காலத்தில், 1930 இல், திருப்பத்தூர் நகரில் இரண்டாவது முறையாக 'பிளேக்' வந்தது. நகர் மக்கள் பெரும்பாலோர் தங்கள் வீடுகளைக் காலி செய்துவிட்டு வெளியூர்

சென்று விட்டார்கள். பிளேக் நோயினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் வீடுகளையும் ஷண்முகர், நகர் மன்றத் தலைவர் என்ற முறையில் நேரில் சென்று பார்வையிட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருவார். மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர், 1930 இல் மீண்டும் நகர மன்றத் தேர்தலில் நின்று வெற்றிபெற்றார்.

தாலுக்கா போர்டு :

1930ஆம் ஆண்டு முதல் திருப்பத்தூர் தாலுக்கா போர்டில் அங்கம் வகித்து வந்தார்; 1933இல் அந்த போர்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அந்த ஆண்டிலேயே ஜில்லா போர்டு தேர்தலிலும் நின்று வெற்றிபெற்றார். 1936ஆம் ஆண்டுடன் ஜில்லா போர்டு உறவு முடிந்தது.

காந்தியடிகள் தரிசனம் :

1927 இல் காந்தியடிகள் கஸ்தூரிபாவுடன் குடியேற்றம் விஜயம் செய்திருந்தார்; நகராட்சிப் பயணிகள் விடுதியில் தங்கி இருந்தார். ஷண்முகர் அப்போது அங்குச் சென்று முதன் முதலாகக் காந்தியடிகளைச் சந்தித்து மாலை அணிவித்து வணங்கினார்.

ஷண்முகர் திருப்பத்தூர்நகராட்சி மன்றத்தின் தலைவராக இருந்தபோது, சுமார் 1929 இல் ஒருநாள் திருப்பத்தூர் துணை ஆட்சித்தலைவர் திரு. இராமச்சந்திரன், ஐ. சி. எஸ். அவர்கள் ஷண்முகரைத் தம்மிடம் வருமாறு அழைத்தார். ஷண்முகரும் அவ்வாறே அன்று மாலை துணையாட்சித் தலைவரின் அலுவலகத்துக்குச் சென்றார். துணையாட்சித்தலைவர் அப்போது நகர் மன்றத்தின் நிருவாக விஷயங்களைப்பற்றி ஷண்முகரிடம் பேசிய பின்னர், காந்தியடிகளைப் பற்றிப் பேசினார். "காந்தி நாட்டில் பிரிட்டிஷ் அரசாட்சிக்கு விரோதமாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்; இராஜாங்கத்துக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்யும்படி மக்களைத் தூண்டி விடுகிறார். அவர் செய்வது இராஜத்துரோகமாகும். அவரை மக்கள் ஆதரிக்கக் கூடாது; 'அவருக்கு எதிர்ப்பாக இராஜாங்கத்தை ஆதரித்து அங்கங்கேயுள்ள பெரிய மனிதர்களைக் கொண்டு மக்களிடம் பிரச்சாரம் செய்யவேண்டும்'

என்று அரசாங்கம் உத்தரவு அனுப்பியிருக்கிறது. நீங்கள் இந்த ஊரின் சேர்மனுக இருப்பதால், அரசாங்க உத்தரவிற் கிணங்க அவ்வாறு பிரச்சாரம் செய்ய வேண்டும் " என்று திரு. இராமசந்திரன் சொன்னுர். அதற்கு ஷண்முகர், அது தம்மால் இயலாது என்று நயமாக பதில் சொன்னுர். " ஏன்? " என்று துணையாட்சித் தலைவர் கேட்டார். ஷண்முகர், " காந்திஜியை நான் தெய்வமாக நினைக்கிறேன்; அவர் மக்களுக்குத் தீமையான எதையும் செய்யமாட்டார். மக்களுக்கு நன்மை செய்பவரை இராஜாங்க துரோகம் செய்பவராக எண்ணக்கூடாது" என்ருர். அப்போது துணையாட்சித் தலைவர், " அரசாங்க உத்தரவுப்படி நீங்கள் செய்தாக வேண்டும். நீங்கள் ஒரு முனிசிபல் சேர்மன் என்பதை மறந்துவிட முடியாது " என்று அதிகார தோரணை யோடு சொன்னுர். ஷண்முகர், " துரை அவர்கள் மன்னிக்க வேண்டும்; என்னுல் செய்ய முடியாததை வற்புறுத்தாதீர்கள் " என்று பணிவாகக் கேட்டுக்கொண்டார். " அப்படியானுல் உங்கள் சேர்மன் பதவியை ராஜினுமா செய்து விடுங்கள்" என்று துணைஆட்சித் தலைவர் சொன்னுர். " சரி அப்படியே செய்து விடுகிறேன் " என்று ஷண்முகர் விடைபெற்றுத் திரும்பினுர். ஷண்முகர் தம்பதவியை ராஜினுமா செய்யவுமில்லை; அதைப் பற்றித் துணையாட்சித் தலைவர் மீண்டும் கேட்கவுமில்லை; எப்போதும்போல அவர் அதன் பின்னரும் ஷண்முகரிடம் சுமுக மாகவே பழகினுர்.

சட்ட மன்றம் :

1937 ஆம் ஆண்டில், சென்னை மாநிலச் சட்டப் பேரவைக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஷண்முகர் வேட்பா ளராக நிறுத்தப்பட்டார். பீபிள்ஸ் பார்ட்டி, ஜஸ்டிஸ் பார்ட்டி ஆகிய இரு கட்சிகளும் இத்தொகுதியில் போட்டியிட்டன. மும்முனைப் போட்டியினுல், தேர்தல் விருவிருப்பாக நடந்தது. மூன்று மாதங்களுக்குத் தேர்தல் வேலைகள் நடைபெற்றன. இறுதியில் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றியடைந் தார். நாட்டில் அரசியல் கொந்தளிப்புக் காரணமாக 1941 இல் சென்னை மாநிலச் சட்டப் பேரவை கலைக்கப்பட்டபோது, இவர் தம் எம். எல். ஏ. பதவிக் காலம் முடிந்தது.

குலப்பணி :

இவர் தோன்றிய செங்குந்த குலமக்களின் முன்னேற்றத்தில் இவர் இளமை முதல் ஆர்வம்காட்டி வந்துள்ளார். இந்த இனத்தினர் பெரும்பாலோர் ஏழைகள்; நெய்தல் தொழிலே மேற்கொண்டு வாழ்பவர்கள். தறி நெய்கின்றவர்களுக்கு நூல் கொடுத்துச் சேலே வாங்கி வாணிபம் செய்வது இவர் குடும்பத் தொழிலாகையால், அவர்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட வாய்ப்பு உண்டானது. 1934இல் திருவாரூரில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டில், வர்த்தக மாநாட்டுத் திறப்பாளராகவும் 1937இல் மதுரையில் கூடிய செங்குந்தர் மாநாட்டுத் தலேவராகவும், 1955இல் திருச்செங்கோட்டில் கூடிய செங்குந்தர் மாநாட்டில், சமூக மாநாட்டின் தலேவராகவும் இவர் பங்கேற்ருர். திருவாரூர் திரு. தி. நா. ச. சபாபதி முதலியாருக்குப்பின், 1953ம் ஆண்டு முதல் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலேமைப் பொறுப்பை ஏற்ருர். 1976 வரை தொடர்ந்து சுமார் இருபத்து மூன்று ஆண்டுகள் அதன் தலேவராக இருந்து பணியாற்றினுர். சென்னையில் எழுப்பிவரும் வள்ளலார் மாணவர் இல்லத்துக்காக ரூ. 5000 நன்கொடை அளித்ததோடு அந்நிதிக்குப் பெரும் பொருள் சேர்த்தும் கொடுத்தார்.

அரசியல் பணி :

திருப்பத்தூர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டியில் தலேவராகப் பல ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி வந்தார். இவர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டியின் தலேவராக இருந்த காலத்தில் 18—2—1934 இல் காந்தியடிகள் இந்நகருக்கு வருகை தந்தார்கள். ஷண்முகரின் தலேமையில் அமைந்த வரவேற்புக்குழு ஹரிஜன நிதிக்காகப் பொருள் வசூல் செய்து காந்தியடிகளிடம் ஒரு பண முடிப்பை அளித்தது. 1937 இல் மாநிலச் சட்டப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தாலுக்கா காங்கிரஸ் கமிட்டித் தலேவர் பதவியிலிருந்து இவர் விலகிக் கொண்டார்.

மிட்டாதார் :

1947 இல் நாடு சுதந்தரம் பெறுவதற்கு முன்னர், இந்தப் பகுதியில் மிட்டாதார்கள், ஜமீன்தார்கள் என்போர் மிகச்


செல்வாக்குடன் விளங்கி வந்தார்கள். அவர்களின் ஆடம்பரச் செலவுகளினால் சீரழிந்த குடும்பங்களும் உண்டு. அத்தகையோர் தங்கள் மிட்டாக்களை விற்கத் தொடங்கினார்கள். செல்வம் படைத்த சிலர் இவற்றை வாங்க முனைந்தனர். ஆனால், அதில் முதலீடு செய்கின்ற தொகைக்குத் தக்க வருவாய் கிடைக்காது. இருப்பினும், 'மிட்டாதார்' என்ற பட்டத்தையும், அதனால் வரக்கூடிய செல்வாக்கையும் விரும்பி, சிலர் மிட்டாக்களை வாங்கினர். ஷண்முகரும் 1933இல் அண்ணாண்டபட்டி மிட்டாவை வாங்கினார். 1934 இல் கிராமப்பிரவேசம் என்ற விழாவை மிகச் சிறப்பாகச் செய்து, ஏழை மக்கள் நூற்றுக் கணக்கானவருக்கு அன்னதானம் செய்தார். அதன் பின்னர் தாத்தவள்ளி மிட்டா இவருக்குக் கோர்ட்டு மூலம் வந்து சேர்ந்தது. சுதந்தரத்துக்குப் பின்னர் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தினால், இந்த மிட்டாக்களும் மறைந்தன.

கோவை மில் தொடர்பு :

1924 இல் கோயமுத்தூரில் ஸ்ரீரங்கவிலாஸ் மில் தொடங்கியபோது, ஷண்முகரும் அவருடைய மைத்துனர் குடியேற்றம் திரு. மா. ஆ. வேலாயுத முதலியாரும் தாமாகச் சென்று அந்த மில்லில் பங்குத் தொகை முதலீடு செய்தார்கள். இவர்கள் அம் மில்லில் செய்த முதலிட்டைக்கருதி இவர்களுக்காக ஒரு டைரக்டர் ஸ்தானத்தை அக்கம்பெனியார் வழங்கினார்கள். அன்று முதல் பல ஆண்டுகள் ஷண்முகர் அம்மில்லின் டைரக்டராக இருந்து வந்தார். அந்த மில்லின் மானேஜிங் ஏஜெண்டாக விளங்கிய திரு. பி. எஸ். ஜி. கங்கா நாயுடு அவர்களுக்கும் ஷண்முகருக்கும் நெருங்கிய நட்பு வளர்ந்தது. திரு. கங்கா நாயுடு அவர்கள குடும்பத்தார், பின்னர், தொடங்கிய பயனிர் மில்லிலும் ஷண்முகர் டைரக்டராகப் பதவி வகித்தார்.

திருப்பூர் மில் தொடர்பு :

திருப்பூரில் ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை மில் தோன்றிய போது, அதன் மானேஜிங் ஏஜெண்டுகளான திரு. எஸ். குள்ளிச் செட்டியார் & பிரதர்ஸ் அவர்கள், ஷண்முகரை நாடி வந்தார்கள். இவரும், திரு. மா. ஆ. வேலாயுத முதலியாரும் அந்த மில்லில்



ஷண்முகர் – தம் தம்பி திரு காளியப்ப முதலியார் அவர்களுடன்
(1965)

பெரும் பங்கு முதலிடு செய்ததும் அல்லாமல், இந்தப் பகுதியில் பலரிடமிருந்து பங்குகள் வசூலித்துக் கொடுத்தார்கள். அந்த மில்லிலும், இவர் தொடக்கம் முதல் பல ஆண்டுகள் டைரக்டராக இருந்து பணியாற்றினார்.

நூல் விற்பனை ஏஜென்சி :

குடியேற்றம் எம். ஏ. வேலாயுத முதலியார், கே ஏ. ஷண்முக முதலியார் என்ற விலாசத்தில் கோயமுத்தூர் ஸ்ரீ ரங்க விலாஸ் மில், பயனீர் மில், திருப்பூர் சூடாம்பிகை மில் முதலான மில்களிலிருந்து நூல்களைப் பெருமளவில் வாங்கி குடியேற்றம், காஞ்சீபுரம், நகரி, சென்னை ஆகிய நகரங்களில் விற்பனை செய்யும வாணிபத்தை இவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

பருத்தி அறவை ஆலை :

குடியேற்றத்தின் சுற்றுப்புறங்களில் உள்ள விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பருத்தியைத் திருப்பூர் அல்லது கோயமுத்தூரில் கொண்டுபோய் விற்றுக்கொண்டிருந்தார்கள். இவர்கள் கொண்டுபோகும் பருத்திக்கு அந்தஊர் வியாபாரிகள் தக்கவிலை கொடுக்காமல் அலைக்கழித்து வந்தார்கள். குடியேற்றத்திலேயே ஒரு பருத்தி அறவை ஆலை (Ginning Factory) தொடங்கினால், அப்பகுதியில் பருத்தி விளைவிப்போருக்கு உரிய விலையும் கிடைக்கும், தொழிலும் நடக்கும் என்று எண்ணி அவ்வூரில் உள்ள சில பெரியவர்கள், 1935 ஆம் ஆண்டில் குடியேற்றத்தில் " கலைமகள் பருத்தி அறவை ஆலை " என்னும் பெயரில் அறவை ஆலையைத் தொடங்கினார்கள். அவர்களில் ஷண்முகரும் ஒருவராய் இருந்து பங்கு முதலீடு செய்தார்.

நூற்பு ஆலை :

பருத்தி அறவை ஆலை தொடங்கி வேலைசெய்வதற்கு முன்னரே, அந்தப் பெரியவர்கள், குடியேற்றத்தில் நூற்பு ஆலை ஒன்றைத் தொடங்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். குடியேற்றம் ஒரு பெரிய கைத்தறித் தொழில் நகரமாகும். மாதந்தோறும் நூற்றுக்கணக்கான நூல் பேல்கள் அந்த நகருக்குத் தேவைப்பட்டன. ஆகவே, நூற்பு ஆலைக்கு அங்கு நல்ல வாய்ப்பு உள்ளதென்று அவர்கள் கருதினார்கள்.

திருமகள் மில்ஸ் :

கோயமுத்தூரிலும், திருப்பூரிலும் உள்ள நூற்பு ஆலை களில் ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்த ஷண்முகரின் அனுபவமும், நுண்ணறிவும் அவர்களுக்குப் பெரிதும் பயன் பட்டன. குடியேற்றத்தில் நூற்பு ஆலை ஒன்றை நிறுவுவ தென்றும், அதற்குத் "திருமகள் ஆலை" என்று பெயரிடுவ தென்றும் முடிவு செய்தார்கள். 1937ஆம் ஆண்டில், ஏழு லட்சம் முதலீட்டுக்கான "திருமகள் மில்ஸ் லிமிடெட்" கம்பெனி பதிவு செய்யப்பட்டது.

இந்தக் கம்பெனியில் கூட்டாகச் சேர்ந்த பெரியவர்களில் சிலர் ஊர் ஊராகச் சுற்றிப் பங்குத் தொகை சேர்த்தார்கள். நூற்பு ஆலை என்பது இத்தப் பகுதிக்கு ஒரு புதிய முயற்சியாக இருந்ததால், பங்குத் தொகை கொடுப்பதற்கு எவரும் எளிதாக முன்வரவில்லை. கம்பெனியை நடத்துவதற்காக முன் நின்ற பெரியவர்களின் தனிப்பட்ட செல்வாக்கினாலேயே பெரும்பாலோர் முதலீடு செய்தார்கள். இம் முயற்சியில் ஈடுபட்டவர்களில் திரு. பு. கா. கங்காதர முதலியார், திரு. வெ. முனிசாமி முதலியார், திரு. வ சின்னப்பமுதலியார், திரு. பு. கா. கோவிந் தப்ப முதலியார், திரு. அ. ப. முனிரத்தின முதலியார், திரு. ரா. மு. கணபதி முதலியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள்.

ஒன்றரை லட்ச ரூபாயில் கட்டடம் உருவாயிற்று. ஐந்து லட்ச ரூபாய்க்கு மெஷினரிகள் ஒப்பந்தம் செய்தார்கள். கோயமுத் தூர் திரு. பி. எஸ். ஜி. கங்கா நாயுடு, திரு. ஜி. வி. துரைசாமி நாயுடு ஆகியவர்களின் ஆலோசனைப்படியும், உதவியுடனும் இங்கிலாந்து, பர்மிங்ஹாம், மெசர்ஸ் பிளாட்பிரதர்ஸ் என்ற கம்பெனியாருக்கு மெஷினரி ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது.

1939 சூன் திங்களில் ஆலையை ஓட்டத் தொடங்கி னார்கள். தொடக்கம் முதலே ஷண்முகர் இதன் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1937இல் கம்பெனியைப் பதிவு செய்தது முதல் 1939 சூன் திங்களில் ஆலையை ஓட்டத் தொடங்கும் வரையில் எவ்வித ஊதியமும் பெறுமல் பணியாற்றி

வந்தார். 1939 முதல் இவருக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. லட்சக்கணக்கில் முதலீடு செய்து, பல லட்சங்கள் வரவு-செலவு செய்யும் இக் கம்பெனியை நிருவாகம் செய்வதற்காக இவர் பெற்ற ஊதியம் மிக மிகக் குறைவே. தொடங்கிய வேலையை நல்ல முறையில் நடத்தி வெற்றிபெற வேண்டுமென்பதே குறிக்கோளாக அமைந்து விட்டதால், ஊதியநோக்கம் பின்னணிக்குச் சென்று விட்டது.

ஷண்முகரின் அனுபவ அறிவினுலும், நுண்ணறிவினுலும், ஓயாத உழைப்பினுலும், செயல் திறமையினுலும், திருமகள் அருள் நோக்கினுலும் கம்பெனி தொடங்கிச் சிலஆண்டுகளிலேயே பெரு வளர்ச்சியடைந்தது. இக் கம்பெனியில் பங்குத் தொகை முதலீடு செய்தவர்கள் ஆண்டுதோறும் நல்ல ஈவுத் தொகை பெற்று மகிழ்ந்தார்கள்.

ஷண்முகர் திருமகள் மில்லின் நிருவாகத் தலைவராக இருந்த இருபத்தெட்டு ஆண்டுகளில், திருமகள் மில்லில் பங்கு போட்டவர்களுக்கு ஒன்றுக்குப் பத்தாக ஈவுத் தொகை கிடைத்தது. 1965இல் அவர் நிருவாகப் பொறுப்பிலிருந்து விலகியபோது கம்பெனிச் சொத்தின் மதிப்புப் பல மடங்காக உயர்ந்திருந்தது.

1937 முதல் 1965 வரையிலான ஷண்முகரின் வாழ்க்கை திருமகள் மில்லின் வளர்ச்சியோடு ஒன்றிவிட்டிருந்தது. நல்ல தரமான பஞ்சியையே வாங்குவது, உயர்ரகப் பாவு நூலை உற்பத்தி செய்வது, மார்க்கட்டில் நல்ல மதிப்பையும் உயர்வான விலையையும் பெறுவது என்பதே அவருடைய செயல் முறையாக இருந்தது. குடியேற்றம், திருப்பூர், கோயமுத்தூர், சென்னை, பம்பாய் ஆகிய நகரங்களில் உள்ள வங்கிகளில் திருமகள் மில் கணக்கு வைத்திருந்தது. ஒவ்வொரு நாளும் அந்த வங்கிகளில் இருப்புத் தொகை எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு அந்தப் புள்ளிகளைத் குறித்த அட்டையைத் தம் கையிலேயே ஷண்முகர் வைத்திருப்பார்.

நூல் உற்பத்திக் கணக்குகள் அவருக்கு மனப்பாடமாக இருந்தன. எந்தப் பஞ்சியை என்ன விலைக்கு வாங்கினுல்,

என்ன லாபம் கிடைக்கும் என்ற கணக்கு அவர் தம் விரல் நுனியிலேயே வைத்திருந்தார். பஞ்சி நோட்டம் பார்த்து அதன் தரத்தை நிர்ணயிப்பதில் அவர் வல்லுநராக இருந்தார். நூற்பு ஆலை நிருவாகிகளில் ஒரு சிலரே இந்த ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். பெரும்பாலான நிருவாகிகளுக்குப் பஞ்சின் தரத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. பஞ்சின் தரம் தெரிந்த நிருவாகிகளாக இருந்தால், அந்த ஆலை செழிப்பாகவே வளர்ச்சி பெற்று வரும்.

கோயமுத்தூரில், தென்னிந்திய ஜவுளி ஆலைச் சொந்தக்காரர்களின் சங்கம் செயல்பட்டு வருகிறது. ஆலைச் சொந்தக்காரர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் பல பிரச்சினைகளை அங்கு ஆலோசித்துப் பரிகாரம் காணுவார்கள்; முக்கிய பிரச்சினைகள் எவையானாலும், குடியாத்தம் ஆலைக்காரரின் கருத்து என்ன என்று கேட்டு அறிவதில் ஆர்வம் காட்டுவார்கள். அப்போது அங்கே ஷண்முகர் சொல்லும் கருத்தினை மற்றவர்கள் கேட்டு ஏற்றுக்கொள்வார்கள்.

திருமகள் மில் கோயில் :

1937ஆம் ஆண்டு முதல் ஷண்முகர் பெரும்பாலும் குடியேற்றத்தில் தங்கியிருக்கலானார். கலைமகள் பருத்தி அறவை ஆலைக்காக, முதன் முதலில் கட்டப்பெற்ற அலுவலக அறையில் ஷண்முகர் தங்கியிருந்தார். திரு. பு. கா. கங்காதர முதலியார் வீட்டில் இவர் சாப்பிடுவார்; வாரத்திற்கு ஒருநாள் அல்லது இரண்டு நாள் மட்டுமே திருப்பத்தூருக்கு வந்து குடும்ப வேலைகளைக் கவனித்து விட்டுச் செல்வார். 1939 இல் மில்லை ஓட்டத் தொடங்கிய பின்னர், மானேஜிங் டைரக்டருக்காக ஒரு தனி வீடு திருமகள் மில்லில் கட்டினார்கள். அந்த வீடு கட்டி முடிந்த பின்னர், ஷண்முகர் அதில் குடியேறினார். அதன் பின்னர் மில் சிப்பந்திகளுக்காகப் பல வீடுகள் அங்கே கட்டப் பெற்றன. மில் தொழிலாளிகளுக்காகவும் பல வீடுகள் கட்டினார்கள். அந்தத் திருமகள் மில் காலனியில் சுமார் 100 குடும்பங்கள் வசிக்கலாயின. இந்தக் காலனிக்குத் 'திருநகர்' என்று பெயரிட்டார்கள்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா" என்பது முதுமொழி. ஆகையினால், இந்தத் திருநகரில் ஒரு கோயில் கட்ட வேண்டும் என்று ஷண்முகர் எண்ணினார். மில் நிருவாக அங்கத்தினர்களும் அதனை வரவேற்றனர். திருமகளுக்கும் விநாயகருக்கும் அங்குக் கோயில் எழுப்பினார்கள். இந்த இரு தெய்வங்களின் திருமேனிகளும் கருங்கல்லினால், சிலை வடிவமாகச் செய்யப் பட்டவை. இவை மிக அழகாக மூர்த்திகளையுடன் அமைந்துவிட்டன. இவைகளைச் செய்து கொடுத்த சிற்பி திருவண்ணாமலை ஸ்ரீ வைத்தியநாத ஸ்தபதி ஆவார். இந்தக் கோயிலும் மிக அழகாக அமைந்திருக்கிறது. கருங்கல்லினால் மிக நயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. 1951 தூலைத் திங்களில் இக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கோயிலில் இருவேளையும் பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இக்கோயிலுக்குப் பின்புறத்தில், பூசனைக்குத் தேவையான மலர்களுக்காக ஒரு சிறு நந்தவனம் வைக்கப்பட்டு இருக்கின்றது.

கற்களுக்கும் உணர்வு உண்டு என்று அறிவியல் வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். அவைகள் நாக்கும் பெற்றுப் பேசும் ஆற்றல் பெறக் கூடுமானால், திருமகள் ஆலைக் கட்டிடத்தில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கல்லும் ஷண்முகர் நாமத்தை வாழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

குடியேற்றம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்:

குடியேற்றம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்காகக் கட்டடம் கட்டுவதற்குத் தொடங்கி இருபது ஆண்டுகள் வரையில், "பேஸ்மெண்ட்" அளவிலேயே நின்றுவிட்டிருந்தது. ஷண்முகர் திருமகள் ஆலையின் நிருவாகத் தலைவராக இருந்த காலத்தில்தான் அந்தக் கட்டடம் எழும்பி முழு உருவத்தை அடைந்தது. திருமகள் ஆலையிலிருந்து ரூ. 25000-மும் தம் சொந்தப் பணத்தில் ரூ. 5000-மும் நன்கொடை வழங்கினார். அந்தக் கட்டடத்திற்கு வேண்டிய செங்கற்கள் முழுவதும், இருவருடைய மேற்பார்வையில், திருமகள் ஆலையின் பின்புறத்தில் சூளை போடப்பட்டன. மரச் சாமான்கள் எல்லாம்

திருமகள் ஆலையின் மரத்தடியில் இவருடைய ஆலோசனைப் படியே செய்யப்பட்டன. இவரே கொல்லத்துக்குச் சென்று மரத்திம்மைகளை வாங்கி வாள்பட்டறைகளில் அளவுப்படி அறுத்துக் கொண்டு வந்தார்.

திருமகள் கல்விச் செல்வம் :

ஷண்முகர் திருமகள் நூற்பு ஆலையின் நிருவாகத் தலைவராக இருந்த காலத்தில், ரூ. 1,25,000/- நன்கொடை அளித்துக் கல்வியின் மேம்பாட்டுக்கெனத் "திருமகள் கல்விச் செல்வம்" ஏற்படுத்தப்பட்டது; நூற்றுக் கணக்கான ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது.

திருமகள் கலைக் கல்லூரி :

இவருடைய நிருவாக காலத்தில், குடியேற்றத்தில், திருமகள் ஆலைக் கல்லூரி ஏற்பட்டது. ஷண்முகர் திருமகள் கல்விச் செல்வத்தின் செயலாளராக இருந்தபோது, அக்கல்லூரியைக் குடியேற்றத்தில் அமைப்பதற்காக அதன் நிதியிலிருந்து ஐந்து லட்ச ரூபாய் அரசிடம் வழங்கப்பட்டது.

வடநாட்டுப் பயணம் :

1937 பிப்ரவரியில் இந்திய நாடு முழுவதிலும் உள்ள மாநிலங்களின் சட்ட மன்றங்களுக்கு முதன்முறையாகத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள் அனைவரையும் காங்கிரஸ்மேலிடத்தார் புது தில்லிக்கு வருமாறு அழைத்தார்கள். காந்தியடிகளின் ஆலோசனையின் பேரில் இந்த தில்லிக் கூட்டம் (Delhi Convention) கூட்டப் பெற்றது. திருப்பத்தூர் சட்ட மன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நின்று வெற்றி பெற்ற ஷண்முகரும் தில்லிக்குப் பயணமானார். அம்பலூர் திரு. டி. கரிய கவுண்டர் அவர்களும், கிருஷ்ணபுரம் திரு டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும் ஷண்முகருடன் பயணமாயினர். ஷண்முகர் நேராக தில்லிக்குச் சென்று தில்லிக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்த தில்லிப் பயணத்தை வாய்ப்பாகக் கொண்டு வட நாட்டிலுள்ள பல இடங்களையும் சென்று

பார்க்க வேண்டுமென்று ஷண்முகர் திட்டமிட்டார். அதன் படி வடமதுரை, பிருந்தாவனம், கோவர்த்தன மலை, ஆயப்பாடி, அயோத்தி, நைமிசாரணியம் ஆகிய புண்ணியத் தலங்களை ஷண்முகர் சேவித்தார். ஆக்ராவுக்குச் சென்று உலகப் புகழ் பெற்ற தாஜ்மஹாலைப் பார்த்தார்; காசிக்குச் சென்றார்; கங்கையில் முழுகினார்; அலகாபாத்துக்குச் சென்று திரிவேணி சங்கமத்தில் குளித்தார்; ஆனந்தபவனத்தைச் சுற்றிப் பார்த்தார்; அங்கிருந்து கல்கத்தா நகருக்குச் சென்று அப்பெருநகரைச் சுற்றிப் பார்த்து அதன் பரப்பினை வியந்து பாராட்டினார். ஷண்முகர் தில்லி நகருக்குப் பயணமாகிய போது படுக்கை முதல் யாவும் கதர்த் துணியிலேயே தைத்து எடுத்துக் கொண்டு சென்றார்; இந்தப் பயணம் முழுவதும் இரயில் வண்டியிலேயே செய்து முடித்தார்.

பம்பாய்ப் பயணம் :

குடியேற்றம் திருமகள் மில்லுக்கு, வெளிநாட்டுப் பஞ்சுத் தேவைகளைப் பல பெரிய கம்பெனிகள் விற்பனை செய்து வந்தன. அந்தக் கம்பெனிகளின் தலைமை அலுவலகங்கள் பம்பாயில் இருந்துவந்தன. பஞ்சு வாங்கியதில் சில கம்பெனிகளுடன் வழக்கு நேரிட்டது. கடிதங்கள் எவ்வளவு எழுதியும் பல மாதங்களாக இந்த வழக்குகளில் சில தீராமல் இருந்து வந்தன. அவைகளை நேரில் பேசித் தீர்த்துக் கொள்வதற்காக 17—4—1960இல் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்று 25—4—1960இல் ஷண்முகர் திரும்பினார். அவருடன் உதவிக்காகத் திருமகள் மில் அலுவலர்கள் திரு. கே. ஜி. துரைசாமி செட்டியார், திரு. கே. ஏ. ஆர். நீலகண்ட முதலியார், திரு. கண்ணன் ஆகியோரும் சென்று வந்தனர். வழக்குகள் அனைத்தும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளப் பட்டன. இவர்கள் பம்பாய்க்குச் செல்லும்போது இரயிலிலும், அங்கிருந்து திரும்பும்போது ஆகாய விமானத்திலும் பயணம் செய்தார்கள்.

சமய நெறி :


ஷண்முகர் சிறு வயது முதலே கடவுள் பக்தி மிக்கவராக விளங்கி வந்தார். ஸ்ரீ ராமபிரானிடத்தில் அவருக்கு

என்றும் நீங்காத அன்பு உண்டு. எனினும் பிற தெய்வங்களை யும் வழிபடுவதில் அவருக்கு வெறுப்புக் கிடையாது. தமிழ்க் கடவுள் என்று போற்றப்படும் முருகனையும் அவர் வழிபடுவது உண்டு.

பஜனை மன்றம் :

ஷண்முகர் சிறு வயதில் திருப்பத்தூர் நகரில் உள்ள அரி பஜனைக் கூடங்களுக்குச் சென்று, அங்குப் பாடுவோர் களுடன் கலந்துகொண்டு பாடுவது உண்டு. அந்தக் கலை இவரை மிகவும் கவர்ந்திருந்தது. தாமும் ஒரு பஜனை மன் றத்தைத் தொடங்கி நடத்தவேண்டுமென்ற எண்ணம் இவருக்கு உண்டானது. தம்முடைய வீட்டுத் திண்ணையில் ஒரு பஜனை மன்றத்தை இவர் இளமையிலேயே நிறுவியுள்ளார். அது சிறப்பாகவும் நடந்து வந்தது. வீட்டுத் திண்ணையிலுள்ள பஜனை மன்றத்துக்காக ஒரு பெரிய கூடம் கட்ட வேண்டு மென்ற எண்ணம் இவருக்குத் தோன்றியது. சிறு வயதி லிருந்தே இவர் சில்லறைக் காசுகளைச் சேமித்து வைத்து வந்தார்.

இவர் தந்தையார் திரு. அருணாசல முதலியார் அவர் களிடம் ஆதியூர், கொரட்டி, செலந்தம்பள்ளி ஆகிய சுற்றுப்புற கிராமங்களிலும், மற்றும் அய்யம்பேட்டை-உள்ளூரிலும் இருந்த செங்குந்த நெசவாளர்களில் சிலர் கூலிக்குத் தறி நெய்து வந்தார்கள். ஒவ்வொரு தறிக்கும் ஒரு பாவுக்கும், ஊடைக்கும் வேண்டிய நூல்களைக் கொடுத்து, அவர்கள் நெய்த சேலைகளை அதற்குரிய கூலியைக் கொடுத்துப் பெற்றுக்கொள்வது வழக் கம். திங்கட்கிழமை இங்கு வாரச் சந்தை நாளாகையால், அன்று பெரும்பாலான தறிக்காரர்கள் வந்து நெய்த சேலை களைக் கொடுத்துவிட்டு நூல் வாங்கிக்கொண்டு போவது வழக்கம். அதனால் அன்று வேலை அதிகமாக இருக்கும். ஷண்முகர் சிறுவராகப் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த காலத்திலும், அவருடைய தந்தையார் திங்கட்கிழமை பிற் பகலில் ஷண்முகரைப் பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்தித் தம் தொழிலில் உதவிக்காக வைத்துக் கொள்வார்.



ஷண்முகர் - ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகளுடன் (6-4-1971)

ஷண்முகருக்குத் தம் படிப்பின்மேல் நாட்டமிருப்பினும், தந்தையாரின் சொல்லுக்கு மாறுபடாமல் இருந்ததுடன், தமக்கிட்ட பணியை ஊக்கத்துடன் செய்து வந்தார். இதனை உணர்ந்த தந்தையார் மனம் நெகிழ்ந்து, நூல் பேல்களின் மேல் சுற்றி வரும் கித்தான் (சணல் துணி), தகடு ஆகியவைகளை விற்றுக் கிடைக்கும் சில்லறைக் காசுகளை ஷண்முகரிடம் தனியே கொடுத்து விடுவார். சில்லறைக் காசுகளானாலும் அவைகளைப் போற்றிக் காக்கும் பழக்கம் ஷண்முகருக்குச் சிறு வயது முதலே ஏற்பட்டுவிட்டது. தமக்களிக்கப்பட்ட காசுகளை அவர் செலவழிக்கவில்லை; அவைகளைத் தனியே ஓர் உண்டிகையில் போட்டுச் சேமித்து வந்தார்.

தெருக்களில் விற்கும் தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிடும் பழக்கம் ஷண்முகருக்குச் சிறு வயதிலும் கிடையாது. ஒரு முறை, தீபாவளியின் போது வீட்டுக்கு வந்த மாப்பிள்ளை, இவருக்குப் பட்டாசு, மத்தாப்பூ முதலானவைகளை வாங்கிக் கொடுத்தார். பிற சிறுவர்களைப் போல இவர் அவைகளைக் கொளுத்தி அவற்றின் ஒளியிலும், ஓசையிலும் மகிழாமல் தெருத் திண்ணையில் உட்கார்ந்து அவைகளை விற்றுப் பண மாக்கிக் கொண்டார். இந்தப் பணமும் இவருடைய உண்டிகை யில் சேர்ந்தது.

ஸ்ரீ ராம நிலையம் :

உண்டிகையில் சேர்ந்து வந்த பணம் ஒரு தொகையாக உருவானபோது அதனை வட்டிக்குக் கொடுத்து வாங்கி வளர்த்து வந்தார். இது குடும்பக் கணக்கில் சேராமல் தனியே வளர்ந்து வந்தது. வீட்டுத் திண்ணையில் இருந்துவந்த பஜனை மன்றத் துக்காக ஒரு தனிக் கூடம் கட்டவேண்டுமென்ற ஷண்முகரின் உள்ளத்தில் பல ஆண்டுகளாக இருந்து வந்த எண்ணத்துக்கு இப்போது ஒரு வழி பிறந்தது. உண்டிகைப் பணத்தைக் கொண்டு "ஸ்ரீ ராம நிலையம்" என்னும் அரிபஜனைக் கூடத்தைக் கட்டி 1925இல் அதற்குச் சம்புரோட்சணம் செய்துவைத்தார்; உண்டிகைத் தொகை ரூ. 4000/- இதற்குப் போதாமல் மேற் கொண்டு குடும்பப் பணத்தையும் செலவிட்டார். தினசரி இரு

வேளைகள் பூஜைகள் நடப்பதற்கும், காலையில் நைவேத்யத் துக்கும் ஏற்பாடு செய்தார்; வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பஜனை நடைபெற்றுவரச் செய்தார்; சித்திரை மாதம் வளர் பிறை நவமி தொடங்கி ஸ்ரீராம நவமி உற்சவமும், சீதா கல்யா ணம், ஸ்ரீராம பட்டாபிஷேகம் ஆகிய விழாக்களும் தொடர்ந்து நடைபெற்றுவர வழி செய்தார். திருவாடிப்பூரம், ஸ்ரீ ஜெயந்தி, புரட்டாசி நடு சனிக்கிழமையில் பந்த சேவை, மார்கழி முப்பது நாளும் காலையில் பூஜை, பிரசாத விநியோகம் ஆகியவைகளும் நடைபெற்று வருகின்றன. இவைகள் எல்லாம் குடும்ப நிதி யிலிருந்தே செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ ராம நிலையத்தில் வைத்துள்ள எல்லாப் படங்களும் ஆயில் பெயிண்டிங் என்ற முறையில் வரையப்பட்டவையாகும். இவைகள் அனைத்தும் மதுரை சித்திரசாலா ஓவியர் என். எஸ். ராமசாமி நாயுடு அவர்களால் எழுதப்பட்டவை. நடுவில் வைத் திருக்கும் ஸ்ரீராமர் பட்டாபிஷேகப் படம் திரு. ராமசாமி நாயுடு அவர்கள் தம் கைத்திறன் அனைத்தையும் கொண்டு எழுதியது என்று ஷண்முகர் சொல்லுவார். அந்தப் படத்தில் உள்ள எல்லோருடைய கண்களும் கொலுவிற்றிருக்கும் ஸ்ரீ ராமனையே நோக்கிக் கொண்டிருப்பதாக எழுதப்பட்டவை. ஸ்ரீ ராம பிரானுக்கு சுமார் 32 வயது அமையும்படி எழுதப்பட்டுள்ளது.

தென்புறமுள்ள திருமகள் படமும் வடபுறமுள்ள ஸ்ரீ கண்ணன் படமும் ராமசாமி நாயுடு அவர்களின் தந்தையார் திரு. என். சுப்பைய நாயுடு அவர்கள் எழுதியவை. இவைகள் தவிர 12 ஆழ்வார்கள், உடையவர், மணவாள மாமுனிகள், கலைமகள், அஷ்டலட்சுமி, கண்ணன் ஆகிய படங்களும் வைக்கப்பட்டுள்ளன. இராமாயணக் காட்சியைக் கொண்ட பத்துப் படங்களும், ஷண்முகர் குடும்பத்தின் ஆசாரியர் படமும், ஷண்முகரின் தாய் தந்தையர், சிற்றப்பன்மார் இருவர் படமும், இந்தப் படங்களையெல்லாம் வரைந்த திரு. என். எஸ். ராமசாமி நாயுடு அவர்களின் படமும் அங்கு இடம் பெற்றுள் ளன. ஷண்முகர் இயற்றிய நளாயினி வெண்பாவின் காவியத் தலைவி நளாயினி, மௌத்கலிய முனிவர் இருவருடைய படமும்,

அருந்ததி படமும் அங்கே வைக்கப்பட்டுள்ளன. முதலாழ்வார்கள் திருமாலைச் சேவித்த காட்சியும், கணிகண்ணன் பின்னே பெருமாள் சென்ற காட்சியும், ஆளவந்தார் பாண்டியன் அவையில் வாதம் செய்த காட்சியும் வரைந்து வைக்கப்பட்டுள்ளன.

கல்வி நன்கொடைகள் :

ஷண்முகர் செய்த அறங்கள் பல; அவற்றுள் குறிக்கத் தக்கன சில. திருப்பத்தூர் செங்குந்தர் தெருவில், சிறுமிகள் கல்வி கற்பதற்காக நகராட்சித் தொடக்கப்பள்ளி ஒன்றினை அமைக்கவேண்டுமென்று 1935இல் இவர் பெருமுயற்சி செய்தார். அதற்கான இடம் கிடைக்காமையால், தம்முடைய ஸ்ரீராம நிலையத்தைச் சேர்ந்த மடப்பள்ளியைப் பல ஆண்டுகள் வாடகை எதுவுமின்றிக் கொடுத்திருந்தார். அது ஸ்ரீராம நிலைய பள்ளிக்கூடமென வழங்கலாயிற்று. அப்பள்ளிக்கு வேண்டிய பெஞ்சுகள், பலகைகள் முதலானவற்றையும் தம் செலவில் செய்து கொடுத்திருந்தார். பின்னர்த் தம் வீட்டுக்கு எதிரிலுள்ள பல ஆயிரம் மதிப்புள்ள மாடிக் கட்டடத்தை அந்த ஸ்ரீராம நிலைய பள்ளிக்கூடத்துக்காக 1958இல் தானமாகக் கொடுத்தார்.

திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கென ஒரு பெரிய கட்டடம் கட்டுவதற்காக 1955இல் ரூபாய் 5000/- நன்கொடை வழங்கினுர். அப்போதிருந்த சென்னை மாநில அரசு, நகராட்சிகள் பத்தாயிரம் கொடுக்குமானுல் அரசு பத்தாயிரம் கொடுத்து உதவும் என்று அறிவித்திருந்தது. நகராட்சி தன் பங்கான ரூ. 10,000/- கொடுப்பதற்கு தூண்டுதலாக இவர் ரூ. 5000 கொடுக்க முன்வந்து அப்பணி நிறைவேற உதவினுர். நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் அக்கட்டடம் இவர் பெயரால் விளங்குகிறது. அந்தக் கட்டடம் 'கா. அ. ஷண்முக முதலியார் ஹால்' என்று பெயரிடப்பட்டு, அப்போது தமிழக முதல்வராக இருந்த திரு. கே. காமராஜ் அவர்களால் 26-5-1958 இல் திறந்துவைக்கப்பட்டது.

அது போலவே, இந்நகரில் உள்ள மற்ருெரு பள்ளியான இராமகிருஷ்ணு உயர்நிலேப் பள்ளிக்கும் கட்டட நிதியாக 1968இல் ரூ. 5000/- நன்கொடை வழங்கிஞர். கஜ்ஜல் நாய்க்கம்பட்டி இஜாராதார் திரு. சி. ஏ. வெங்கடப்ப நாயுடு அரசு உயர்நிலேப் பள்ளியின் கட்டட நிதிக்காக ரூ. 5001ம், மடவாளம் அரசு ஆண்கள் உயர்நிலேப் பள்ளிக்காக ரூ. 2500ம் வழங்கிஞர்.

சென்னேயில், அனேத்துக் கல்லூரி மாணவர்களுக்கான கவிதைப் போட்டி ஆண்டு தோறும் நடத்தி, வெற்றி பெறும் கல்லூரிக்கு வழங்குவதற்காக, "திருப்பத்தூர் க. அ. ஷண்முக முதலியார் சுழற்கேடயம்" என்ற பெயரில் 1975ஆம் ஆண்டில் சுமார் ஓராயிரம் மதிப்புள்ள கேடயம் ஒன்று, சென்னே பச்சை யப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இதர நன்கொடைகள் :

ஷண்முகரின் மணி விழாவின் போது 1945இல் திருப்பத்தூரில் காந்தியடிகளின் நிர்மாண வேலேகளே நிறை வேற்ற "காந்தி நிலேயம்" என்னும் பெயரில் ஒரு பொதுக் கட்டிடம் எழுப்புவதற்காகக் காங்கிரஸ் மைதானத்தை வழங்கி ஞர்.

திருப்பத்தூர் கோட்டை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் திருப்பணிக்காக ரூ. 5001-ம் செங்குந்தர் தெரு ஸ்ரீ தண்டபாணி சுவாமி கோயில் திருப்பணிக்காக ரூ. 5001-ம் வழங்கிஞர்.

திருப்பதி திருமலேயில் சங்குமிட்டா குடில் :

திருப்பதி-திருமலே தேவஸ்தானத்தார் யாத்ரீகர்கள் மலேமேல் வந்து தங்குவதற்காகப் பல சிறு சிறு குடில்களேக் கட்டிஞர்கள். இந்தக் குடில் ஒவ்வொன்றின் மதிப்பீடும் ரூபாய் 12,000 ஆனது. இத்தொகையில் ஒரு பாதியைக் கொடுத்தால் மற்ற பாதியைத் தேவஸ்தான நிதியிலிருந்து போட்டுக் குடில் களேக் கட்டும் ஒரு திட்டத்தை அவர்கள் வெளியிட்டார்கள். இவ்வாறு ஒரு பாதித் தொகையை நன்கொடையாக அளிப்பவர்

கள் ஒவ்வோர் ஆண்டிலும் அறுபது நாளுக்கு அதிகப்படாமல் அந்தக் குடில்களில் வந்து தங்கியிருக்கலாம். அவ்வாறு தங்கு வதற்கு வாடகை எதுவும் இல்லை. ஆனால் கட்டட உரிமை முழுவதும் தேவஸ்தானத்துக்கு ஆகும். அந்தக் குடில்களை பராமரித்து வரும் பொறுப்பும் தேவஸ்தானத்தையே சாரும். இந்தத் திட்டத்தை அறிந்த ஷண்முகர் தம் குடும்பத்தாரின் பெயரில் அத்தகைய குடில் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று விரும்பினர். தம்முடைய தந்தையார் திரு. அருணாசலமுதலியார் அவர்கள் நினைவாக இக் குடில் நிறுவப்பட்டது. திருமலை திருவேங்கடவன் கோயிலுக்குத் தென்புறமாக உயர்வான மேட்டில் இக் கட்டடம் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த இடத்தைச் " சங்குமிட்டா தெற்கு " என்று குறிப்பிடுகிறார்கள். திரு. அருணாசல முதலியாரின் நினைவாக எழுந்த இக் குடில் அந்த வரிசையில் முதல் கட்டடமாகும். இக் கட்டடத்திலிருந்து திருவேங்கடவனின் தங்க விமானத்தை நன்கு தரிசிக்கலாம்.

ஷண்முகர் இயற்றி வெளியிட்டவை :

1. நளாயினி வெண்பா :-

ஷண்முகர் தம் இருபத்தோராவது ஆண்டில் தமிழாசிரியர் திரு. ஆ. கு. முருகைய முதலியாரிடம் பாடம் கேட்டு முடிந்த பின்னர் வேறு யாரிடமும் சென்று பயிலவில்லை. ஓய்வு நேரங் களில் தாமாகவே நூல்களைப் படித்து வந்தார். அரிச்சந்திர புராணம், நள வெண்பா, வில்லி பாரதம், கம்ப ராமாயணம் ஆகிய நூல்களைப் படித்தார். நள வெண்பாவும் கம்பர் காவிய மும் இவரைக் கவர்ந்த நூல்களாகும். நள வெண்பாவைக் கற்ற போது அந்த வெண்பா யாப்பு இவரை ஈர்த்தது. தாமும் அவ்வாறே ஒரு நூலை யாக்க வேண்டுமென்ற எண்ணம் இவர் உள்ளத்தில் தோன்றி வளர்ந்தது.

1. பாரதத்தில் வரும் நளாயினியின் கதையைக் கேட்டறிந் தார். அக் கதையினையே தம் வெண்பா புனையும் ஆற்றலுக் குரிய கதையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். பகலில் தமக் குரிய தொழில்களைச் செய்தல், இரவில் 9 மணிக்குமேல் நூலை

இபற்றுதல் என்று காலவரையறை செய்து கொண்டார். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் உழைத்தார். 411 வெண்பாக்களைக் கொண்ட நூலாக "நளாயினி வெண்பா" அமைந்தது. குடியேற்றம், வேதாந்தத் தருக்க போதகாசிரியர் திருவாளர் கா. ஆ. செங்கல்வராய முதலியார் அவர்கள் இந்த நூலை அச்சிடுவதற்குப் பெரிதும் உதவினுர்கள். அக் காலத்தில் வாழ்ந்திருந்த பெரும் புலவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், உயர்திரு. ரா. இராகவையங்கார், உயர்திரு. மு. இராகவையங்கார், உயர்திரு. கோ. வடிவேலு செட்டியார் போன்றவர்களெல்லாம் அந்த நூலுக்கு வாழ்த்துக் கவிகள் வழங்கி அணி செய்தார்கள். 1929இல் அந்த நூல் அச்சேறியது. போளுர் திருவாளர் ஆ. தா. அரங்கசாமி நாயகர் ஸ்ரீராம நிலயத்தில் இந் நூலை அரங்கேற்றம் செய்தார்கள். இந் நூலின் இரண்டாம் பதிப்பு 1967இல் அச்சிடப்பட்டது.

2. திருமால் போற்றி அகவல் :

பெருந்தேவனுர் இயற்றிய "பாரத வெண்பா" என்னும் நூலை ஷண்முகர் 1942இல் பார்த்தார். திருமாலைக் குறித்து அந்த நூலில் வரும் சொற்ருெடர்கள் இவரைக் கவர்ந்தன. அந்தச் சொற்ருெடர்களைக்கொண்டு திருமாலைப் போற்றிச் செய்யும் அருச்சனைப் பா ஒன்று யாத்தார். இது நேரிசை ஆசிரியப் பாவினுல் அமைந்தது. ஒரு நூற்றெட்டுப் போற்றியுடன் இருநூற்றுப் பதினுறு அடிகளில் இது யாக்கப்பெற்றது. சென்னை டாக்டர் மு. வரதராசன் அவர்கள் இந் நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். இந்த நூல் 1943இல் அச்சேறியது. இதன் இரண்டாம் பதிப்பு 1951லும், மூன்ரும் பதிப்பு 1959லும் பதிக்கப் பெற்றன.

3. இராகவன் புகழ் அறுபது :

1945 அக்டோபர் 31இல் ஷண்முகருக்கு அறுபது ஆண்டுகள் நிறைவெய்தின. அதனை முன்னிட்டு அவர் தம் மனத்துக்கினியவனுன இராமபிரான் மேல் அறுபது துதிப் பாடல்களை எழுதி வெளியிட வேண்டுமெனத் திட்டமிட்டார். தில்லை நகர் திருச்சித்திர கூடத்தில் எழுந்தருளியுள்ள

பெருமாளை இராம காதையோடு இணைத்துப் பாடிய குலசேகர ஆழ்வாரின் அடியொற்றி, அவர் போலவே எண்சீர் ஆசிரிய விருத்தப் பாவினால் இவரும் பாடினார். மணிவிழா நிகழ்ச்சிக்குச் சில மாதங்கள் முன்பாகவே இப்பணியினைத் தொடங்கி, இராமா யணக் கதையினைக் கம்பர் வாக்குப்படி ஒவ்வொரு பாவிலும் அமைத்து இறுதியில் இராகவனைத் துதிப்பதாகப் பாடி முடித் தார். இந்த நூல், ஷண்முகரின் மணிவிழாவன்று மாலையில் ஸ்ரீராம நிலையத்தில், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் தலைமையில், திரு. சுந்தர உடையார் என்பவரால் அரங்கேற்றம் செய்யப்பெற்றது.

4. திருமால் அவதாரம் :

அதன் பின்னர் 1946இல் திருமாலின் அவதாரம் ஒவ்வொன்றின் சிறப்பினையும் ஒவ்வொரு வெண்பாவில் வைத்துப் பாடினார். பத்து அவதாரத்துக்குப் பத்து வெண்பாவும், பாயிர வெண்பா ஒன்றும் ஆகப் பதினொரு வெண்பாவினால் ஆனது "திருமால் அவதாரம்" என்னும் பதிகம். 1947 பிப்ரவரித் திங்களில் இது தனித்தாளில் அச்சிடப்பெற்றது.

5. திருவேங்கட மாலை :


ஷண்முகரின் குடும்பத்தினர் ஆதியில், 'செங்குந்தரின் குலதெய்வம்' என்று போற்றப்படும் முருகப் பெருமானை வழி படுவோராயினும், நான்கு ஐந்து தலை முறைக்கு முன்னரே வைணவ ஆச்சாரியரை அடுத்துப் பஞ்ச சமஸ்காரங்களைப் பெற்றுத் திருமாலை வழிபடும் மரபினர் ஆயினர்; திருமாலை வழி பட்டு வந்தாலும் முருகப் பெருமானையும் வழிபடத் தயங்குவ தில்லை. குழந்தைகளுக்கு முடி எடுக்க முதலில் பழனிக்குச் சென்று வருவார்கள். சைவ, வைணவப் பெயர்கள் இரண்டினை யுமே தம் மக்களுக்கு இட்டு அழைத்தனர். அருணாசலம், ஆறு முகம், வையாபுரி, ஷண்முகம், பழனிசாமி, சுப்பிரமணியன், குமரகுரு, நீலகண்டன், தாமோதரன், ராமசாமி, வாசுதேவன், வேணுகோபால், கிருஷ்ணசாமி, வரதராஜன், சேஷாசலம், புரு ஷோத்தமன், எதிராஜன் ஆகிய பெயர்கள் இதற்குச் சான்றாகும்.

முன்னோர்கள் சனிக்கிழமை தோறும் திருவேங்கடப் பெருமானுக்கு ஒரு ரூபாய் உண்டிகை செலுத்தி வந்தனர். 'ஏழுமலையான் கனவில் வந்து அழைப்பான்; அப்போது குடும்பத்தார் அனைவரும் கூடித் திருமலைக்குச் சென்று உண்டிகை செலுத்திவர வேண்டு'மென்று எண்ணி இருந்தனர். ஆனால், அவ்வாறு ஏழுமலையான் வந்து இவர்களை அழைக்கவில்லையென்பதால், இவர்கள் அங்குச் சென்று உண்டிகை செலுத்தும் வாய்ப்பினைப் பெறவேயில்லை. அருணாசல முதலியார் திருமலையைச் சென்று சேவிக்காமலேயே பரமபதம் அடைந்துவிட்டார். இந்தக் குறை ஷண்முகர் உள்ளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. ஷண்முகர் தனியாகத் திருமலைக்குச் சென்று சேவித்திருந்தாராயினும், சுற்றத்தாரோடு சென்று தொழ வேண்டுமெனனும் உந்துதல் அவர் உள்ளத்தில் தோன்றியது. அதனையே ஏழுமலையானின் அழைப்பாகக் கொண்டு 1947 மார்ச்சுத் திங்களில் சுற்றத்தார் நூற்றிருபத்தெழுவருடன் திருமலைக்குச் சென்று பிரார்த்தனையைச் செலுத்தி வந்தார்.

திருமலைக்குப் புறப்படுமுன் திருவேங்கடப் பெருமானை வாழ்த்திப் பத்து நேரிசை வெண்பாக்களைப் பாடி "திருவேங்கடமாலை" என்னும் அந்தாதி நூலை அருளினர். இதுவும் தனித்தாளில் அச்சிடப் பெற்றது.

6. நூற்றெட்டுத் திருப்பதி போற்றி அகவல் :

ஆழ்வார்களின் அருளிச் செயல்களான பாசுரங்களை ஷண்முகர் அடிக்கடி படித்து அவற்றில் மனம் ஈடுபடுவது உண்டு. இலக்கிய நயமும், சொல்லாட்சியும் செய்யுள் அமைப்பும் அவரைக் கவரும். பக்திச் சுவையிலும் அவர் மனம் தோயும். அதற்கும் மேலாக, ஆழ்வார்கள் பாடியுள்ள திவ்ய தேசங்களில் (திருப்பதிகள்) எழுந்தருளியுள்ள பெருமான்களை நேரில் சென்று சேவிக்க வேண்டுமென்ற ஆர்வம் அவருள்ளத்தில் எழும். அவ்வாறு சுமார் அறுபது திவ்ய தேசங்களை அவர் சேவித்துள்ளார். மற்றவற்றை நேரில் சென்று சேவிக்கும் வாய்ப்பு அவருக்கு ஏற்படவில்லை. அதனால் அந்தப் பெருமான்கள் அனைவரையும் துதிக்கும் பாடல் ஒன்றை



ஷண்முகர் - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளுடன் (13-4-1978)

இயற்ற விரும்பினார். அந்த விருப்பமே "நூற்றெட்டுத் திருப்பதி போற்றி அகவல்" என்னும் நூலாக மலர்ந்தது. ஒவ்வொரு திருப்பதியிலும் உள்ள பெருமாளை ஆழ்வார்கள் எந்தச் சொல்லினால் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்களோ அந்தச் சொல்லை வைத்தே அந்த அந்தப் பெருமாளை விளித்துப் "போற்றி" என்ற சொல்லை இறுதியில் வைத்து ஒவ்வோர் அடியையும் அமைத்துள்ளார். நூற்றெட்டுத் திருப்பதிக்கு நூற்றெட்டு அடிகளில் "போற்றி, போற்றி" என்று அகவற் பாவினால் இந்த நூல் அமைந்துள்ளது.

இந்த நூற்றெட்டுத் திருப்பதிக்கும் பயணம் போய் வர விரும்புவோருக்கு வழி காட்டியாக ஒவ்வொரு திருப்பதியின் பெயருக்கடியிலும் அந்த ஊருக்குச் செல்லும் வழி, அந்தத் திவ்ய தேசத்தில் எழுந்தருளிய பெருமாளின் தனித் திருநாமம், தாயாரின் திருநாமம், தீர்த்தம் முதலியவற்றைக் குறித்திருப்ப தோடு, ஆழ்வாரின் பாடல் ஒன்று அல்லது இரண்டு உடன் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தத் திவ்ய தேசங்களுக்குச் செல் வோர் அதனைப் பாடி மகிழலாம். இந்த நூல் 1963 இல் அச்சிடப்பெற்றது. சென்னை மகாவித்வான் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

7. திருமால் வெண்பா மாலை :

ஷண்முகர் திருமகள் மில்லை நிருவாகம் செய்து வந்த போது பல்வேறு பிரச்சனைகள் தோன்றும். பெரிய சஞ்சலத்தை விளைவிப்பவை சில. தொழிலாளர் தரும் தொல்லைகள், அரசு செய்யும் கெடுபிடிகள் பஞ்சின் விலை ஏற்றம், அதற்குத் தக்க வாறு நூலுக்கு விலை இல்லாமற் போதல், ஒப்பந்தப்படி நடவாமல் தரக் குறைவான பஞ்சியினையே கொடுத்து வணிகர் கள் ஏமாற்ற முனைதல், நூல் விலைகள் குறையும் போது ஒப்பந் தப்படி நூல் பேல்களை டெலிவரி எடுக்காமல் நூல் வியாபாரிகள் ஏமாற்றுதல் இவை போன்ற பிரச்சனைகள் எழுந்து வேதனை தரும் நாளில் ஷண்முகர் தாம் வணங்கும் திருமாலிடம் அடைக் கலம் புகுவார். இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் திருமாலை

நினைந்து முறையிட்டு ஒரு வெண்பா இயற்றுவார்; ஆறுதல் பெறுவார். அந்தப் பிரச்சினைகளும் ஒரு முடிவுக்கு வரும். இவ்வாறு பல்வேறு நாளில் அவர் நூற்றுக் கணக்கான வெண்பாக்களை இயற்றிவைத்தார். நிருவாகத்தைச் சீர்மையோடு அவர் நடத்திச் செல்ல, இந்தத் துதிப் பாடல்களே அவருக்கு மிக்க ஆற்றலை அளித்தன என்று சொல்லலாம். அவர் இயற்றி வைத்திருந்த இந்தப் பாடல்களில் ஒரு நூறு பாடல்களை மட்டும் அவரே தேர்ந்தெடுத்து 1964 இல் அச்சிட்டார். இந்த நூறு பாடல்களையும் அகர வரிசையில் அமைத்தார். இந்த நூலுக்குத் "திருமால் வெண்பா மாலை" என்னும் பெயர் சூட்டினார்.

8. இராகவன் புகழ் மாலை :

1965 ஆகஸ்டுத் திங்களில் ஷண்முகர் திருமகள் மில்லின் நிருவாகப் பொறுப்பிலிருந்து விலகியபோது, அவருடைய அன்புக்குரியவராக அவரால் வளர்க்கப்பட்டவர்களே அவருக்கு எதிராகக் கட்சி கட்டினார்கள். இந்த மனவேதனையை மறப்பதற்காகக் கம்பராமாயணத்தை ஓயாமல் படித்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் ஆரணி அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிசெய்து வந்த திரு. முத்து சு. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர்த் தம்மிடமிருந்த நூல்களை விற்க முற்பட்டார். அதனை அறிந்த ஆரணி தலைமையாசிரியர் திரு. எஸ். ஆறுமுகம், எம். ஏ., பி. டி. அவர்கள் மாணிக்கவாசகரிடமிருந்த வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் அவர்களின் உரையுடன் கூடிய கம்பராமாயண நூல்களை ஷண்முகருக்கென வாங்கி அனுப்பி வைத்தார். அந்த நூல்களை ஷண்முகர் படிக்கத் தொடங்கினார். ஷண்முகர் இராமாயணச் செய்யுள்களைப் பலமுறை படித்திருந்தாராயினும், உரையுடன் கூடிய நூலைப் படித்தபோது பலப்பல புதுப்பொருள்களை அறிந்து மகிழ்ந்தார். "இராகவன் புகழறுபது" என்ற நூலை இயற்றியது போலவே, இராமகாதையைக் கம்பர் அருளிய சொற்றொடர்களையே கொண்டு அமைத்து மீண்டும் இராகவனைத் துதித்து, எண்சீர்விருத்தப் பாவினால் பாடினார். இது இருநூற்றைம்பத்தைந்து பாடலாக விரிந்தது. "இராகவன் புகழறுபது"

நூலில் உள்ள பாடல்களில் சிற்சில இந்த நூலிலும் இடம் பெற்றன. இதனை "இராகவன் புகழ் மாலை" என்னும் பெயரால் 1968 இல் அச்சேற்றினர். இந்த நூல் ஸ்ரீராம நிலையத்தில் உயர்திரு டி. எஸ். கண்ணபிரான் பிள்ளை அவர்களால் அரங்கேற்றம் செய்யப்பட்டது. காஞ்சீபுரம் ஸ்ரீ பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகளும், காரைக்குடி தமிழ்க் கடல் உயர்திரு. ராய. சொ. அவர்களும், திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகளும், சென்னை வாகீச கலாநிதி உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களும், சென்னை உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களும் இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

அதன் பின்னரும் ஷண்முகர் கம்பராமாயணத்தைத் தொடர்ந்து படித்துக் கொண்டேயிருந்தார். அப்போது, முன அச்சேறிய "இராகவன் புகழ் மாலை"யில் சொல்லாமல் விட்டுப் போன கதைப் பகுதிகளை மீண்டும் அவ்வாறே எண்சீர் விருத்தப் பாவினால் பாடிவந்தார். இவ்வாறு புதியதாகப் பாடிய பாடலும் முன் அச்சேறிய பாடலுமாகச் சேர்ந்து ஐந்நூற்றெண்பத்தாறு பாடலாகப் பெருகின. இந்த நூலையும் அச்சிட வேண்டுமென்று ஷண்முகர் விரும்பினர். ஆனால் தாளின் விலையும், அச்சுக் கூலியும், பிற செலவுகளும் மிகமிக உயர்ந்துவிட்ட காரணத்தினால், அப்போது அந்த நூல் அச்சேறாமல் தடைப்பட்டுவிட்டது. அந்த நூல் அச்சேற வேண்டுமென்னும் ஆர்வத்தினால், ஷண்முகர் தம் "விருப்ப ஆவணத்தில்" [உயில் பத்திரம்] அந்த நூலை அச்சிடுவதற்காகத் தொகை ஒதுக்கி வைத்துள்ளார்.

9. திருவேங்கடப் பெருமான் திருப்பள்ளி எழுச்சி :

திருவரங்கப் பெருமானுக்குத் தொண்டரடிப்பொடியாழ்வார் 'திருப்பள்ளியெழுச்சி' என்னும் பிரபந்தத்தை எண்சீர் ஆசிரிய விருத்தப் பாவினால் பாடியருளியுள்ளார். ஆனால், திருவேங்கடமுடையானுக்கு அத்தகையதொரு திருப்பள்ளியெழுச்சிப் பனுவல் பெரியோர்களால் பாடப்பெறவில்லை. வடமொழியில் உள்ள "ஸ்ரீவேங்கடேச சுப்ர பாதம்" என்னும் பள்ளியெழுச்சிப் பாடலே எங்கும் பரவலாகப் பாடப்பெற்று

வருகின்றது. வடமொழி அறிந்த திருமதி. ஹா. கி. வாலம் அம்மையார் அவர்கள் அதனைத் தமிழாக்கம் செய்துள்ளார்கள். அதனை ஷண்முகர் படித்தார். அதில் உள்ள கருத்துக்கள் அனைத்தையும் உள்ளவாறே உட்கொண்டு, முப்பத்தொரு கலி விருத்தப் பாவினால் " திருவேங்கடப் பெருமான் திருப்பள்ளி யெழுச்சி " என்னும் நூலை இயற்றினார். பள்ளி எழுச்சிப் பாடல் பதினைந்தும், துதிப்பாடல்பதினொன்றும், தாயார் துதி மூன்றும், மங்களப் பாடல் ஒன்றும், வாழ்த்துப்பாடல் ஒன்றுமாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்த நூலை 1969இல் அச்சிட்டபோது, 1947இல் தனித்தாளில் அச்சிட்ட " திருமால் அவதாரம் " என்னும் பதிகத்தைத் " திருமால் தசாவதாரம் " என்னும் தலைப்பிலும் " திருவேங்கடமாலை " என்னும் பதிகத்தைத் " திருவேங்கடப் பத்து " என்னும் தலைப்பிலும் இந்த நூலுடன் இணைத்து அச்சிட்டுள்ளார்.

10. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி :

இவ்வாறு பல நூல்களைத் திருமாலின் மீது இயற்றி அச்சிட்டு வந்தபோது, ஷண்முகரின் இளைய தம்பி திரு. காளியப்ப முதலியார் அவர்கள், " பகவானைப் பற்றிய பல நூல்களைச் செய்துள்ளீர்கள். அவன் அடியார்களைப் பற்றி ஒன்றிரண்டாகிலும் செய்ய வேண்டும் " என்று வேண்டினார்கள். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ ஆண்டாளின் சரிதத்தைக் கற்பனையளாவிச் " சூடிக் கொடுத்த சுடர்க்கொடி " என்ற பெயரில் இயற்றி வெளியிட்டார். இது தொண்ணூறு எண் சீர்விருத்தப் பாவினால் ஆகியது. 1971 இல் இந்நூல் அச்சிடப்பட்டது. காஞ்சீபுரம் ஸ்ரீ பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகளின் திருமாளிகையில் அவருடைய முன்னிலையில் 6—4—1971இல் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. காஞ்சீபுரம் உயர்திரு. பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகளும், ஸ்ரீ பெரும்புதூர் ஸ்ரீ ஆசூரி நரசிம்மாசாரிய சுவாமிகளும், சென்னை உயர்திரு. மே. வி. வேணுகோபாலப் பிள்ளை அவர்களும், சென்னை உயர்திரு. ந. ரா. முருகவேள் அவர்களும்

திருப்பத்தூர் திரு. பொ. சுந்தரமூர்த்தி நாயனுர் அவர்களும் இந் நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள்.

11. திருமால் அருச்சனை நூல் :

"திருமால் போற்றி அகவல்", "நூற்றெட்டுத் திருப்பதி போற்றி அகவல்" ஆகிய இரு நூலையும் இணைத்து 1972இல் வெளியிட்டார்; இந்த இரு நூலும் மலர் வழிபாட்டுக்கு (அருச்சனை) ஏற்றவையாகலின் அவ்வாறு இணைத்து வெளி யிட்டார். ஸ்ரீராம நிலையத்தில் நிகழும் சீதா கல்யாணம், ஸ்ரீராம பட்டாபிஷேகம் போன்ற விழாக்களில் இந்த இரு நூலும் மலர் வழிபாட்டுக்குப் பயன்பட்டு வருகின்றன.

12. புத்தாண்டு வாழ்த்துக்கள் :

தமிழ்ப் புத்தாண்டு நாளிலும், தைப் பொங்கல் நாளிலும் ஷண்முகர் வாழ்த்துப்பா எழுதிப் பல்லாண்டுகளாக அச்சிட்டு வழங்கி வந்துள்ளார். சுமார் 1930ஆவது ஆண்டு முதல் தமிழ் வருஷப் பிறப்பன்று பூஜைகள் முடிந்தபின் வாழ்த்து எழுதுவது அவரது வழக்கம். அந்த வாழ்த்துப் பாக்களை நண்பர்களுக்கு எழுதி அனுப்புவார். சில ஆண்டுகள் கழித்து வருஷப் பிறப் பிற்காக முன்னதாகவே வாழ்த்து எழுதி அச்சிட்டு வழங்கத் தொடங்கினுர். குடியேற்றம் திருமகள் மில்லுக்குச் சென்ற பின்னர் மில்லின் பெயரால் இந்த வாழ்த்துக்கள் வெளியிடப் பட்டன. 1947க்குப் பிறகு சுதந்தர ஆர்வம் காரணமாகத் தமிழ் நாட்டில் தைப் பொங்கல் வாழ்த்து வழங்கும் வழக்கம் பெருகியது. அப்போது ஷண்முகரும் தைப் பொங்கல்வாழ்த்து எழுதி அச்சிட்டு வழங்கலானுர். அது முதல் ஒவ்வோர் ஆண்டிலும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்தும், தைப் பொங்கல் வாழ்த்தும் தவருமல் அச்சிட்டு வழங்கி வந்தார்.

ஷண்முகர் செய்துவைத்த திருமணங்கள் :

ஷண்முகருக்கு முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் வழியாக ஆண்மக்கள் இருவரும், பெண்மக்கள் மூவரும் பிறந் தனர். அவர்கள் எதிராஜ முதலியார், ஜானகி அம்மாள், சொர்ணம்மாள், பத்மநாபன், கமலநாயகி ஆகிய ஐவரும் ஆவர்.

இரண்டாவது மனைவி திருமதி பழனியம்மாள் வழியாகப் பிறந்த முதல் நான்கு மகவும், பிறந்த சில ஆண்டுகளிலேயே இறந்து விட்டன. திருத்தணிகைப் பெருமானுக்கு வேண்டுதல் செய்து கொண்டார்கள். அதன்பின் ஓர் ஆணும், பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு பெண்ணும் பிறந்தனர். அவர்கள் ரகுநாயகன், செல்வநாயகி ஆகிய இருவரும் ஆவர்.

திரு. பத்மநாபனுக்கு மூன்று ஆண்மக்களும், மூன்று பெண் மக்களும் பிறந்துள்ளார்கள். அவர்கள் இந்திரை, மணவாளன், திருமலை, கோமேதகம், அச்சுதன், அஞ்சுகம் ஆவார்கள். இவர்கள் அனைவருக்கும் ஷண்முகர் திருமணம் செய்து மகிழ்ந்தார்.

ஷண்முகர் தம் குடும்பத்தில் தம்பி காளியப்ப முதலியார் மக்கள், தம் மக்கள், தம்பி பழனிசாமி முதலியார் மக்கள், தம் பேரன், பேத்தியர்கள் ஆகியவர்களுடைய திருமணங்களை (இருபத்தைந்து திருமணங்களைச்) செய்துள்ளார்.

சுற்றத்தாருக்கு உதவுதல் :

இவைகள் தவிர, தாயாதியர்களின் குடும்பத்தில் நடைபெறும் பெரும்பாலான திருமணங்களுக்கும் உதவிசெய்துள்ளார். தயாதியர் வீட்டில் ஆண் மக்களுக்குத் திருமணம் என்றால் கூறையும் தாலியும் கொடுப்பது வழக்கம்; பெண்களுக்குத் திருமணமாகும்போது ஏதாவது ஒரு நகை செய்து போடுவது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

மணி விழா :

ஷண்முகரின் மக்களும் அவர் தம்பி பழனிசாமிமுதலியார் மக்களும் சேர்ந்து ஷண்முகரின் 60 ஆண்டு நிறைவு விழாவினை 1945 அக்டோபர் 31இல் (பார்த்திப, ஐப்பசி, பூரம்) திருப்பத்தூரில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். நட்சத்திரக் கலசங்கள் 27, திதி கலசங்கள் 15, நவக்கிரகக் கலசங்கள் 9, அஷ்டதிக்குப் பாலர் 8, லட்சுமிநாராயணன் 2, பரிவார கலசங்கள் 12, ஆகிய கலசங்கள், இரண்டு நாள் முன்னதாகவே முறைப்படி வைத்து மூன்று வேளையும் பூஜை நடத்தினார்கள். விழா அன்று காலை

ஷண்முகரையும் அவருடைய துணைவியார் எல்லம்மாளையும் அவருடைய மக்களும் உற்றூர் உறவினர்களும், நண்பர்களும் கலச நீராட்டினார்கள். ஷண்முகர் எல்லம்மாளுக்கு அறுபதாம் ஆண்டு மாங்கலிய தாரணம் செய்தார். அதன் பின்னர் வயதில் மூத்தவரும் குலப் பெரியோருமாகிய திரு. பா. வெ. சென்ன மூர்த்தி முதலியார் தம்பதிகளுக்கு ஷண்முகர் தம்பதிகள் பாத பூஜை செய்தார்கள். அது முடிந்த பின்னர் ஷண்முகரின் மக்கள் பெற்றோருக்குப் பாதபூஜை செய்து வணங்கினார்கள். ஷண்முகருக்கு வயதில் இளையவர்கள் அனைவரும் வணங்கினார்கள். பெரியோர்கள் வாழ்த்தினார்கள். இந்த மணிவிழாவினை யொட்டி ஏழைகளுக்கு வஸ்திர தானமும் அன்னதானமும் வழங்கப்பட்டன. பல்வேறு பொது நிலையங்களுக்கு நன்கொடை வழங்கினார்கள். மணிவிழாவைக் காண வந்திருந்த பெருமக்களில் கோவை திரு. பி. எஸ். ஜி. கங்கா நாயுடு அவர்களும், திருவாரூர் தி. நா. ச. சபாபதி முதலியார், சென்னை செங்குந்த மித்திரன் ஆசிரியர் திரு. நடராஜ முதலியார், வாலாஜாபாத் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் ஆகியோரும் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

80 நிறைவு விழா :

ஷண்முகரின் இளைய மனைவி பழனியம்மாள் 1937 சனவரியில் காலமாய்விட்டார்கள். 1945இல் ஷண்முகர் மணிவிழா கொண்டபோது மூத்த மனைவி எல்லம்மாள் மட்டுமே உடனிருந்து மணவினை கொண்டார்கள். எல்லம்மாளும் 1950 செப்டம்பரில் காலமாய்விட்டார்கள். 1965 அக்டோபரில் ஷண்முகரின் எண்பது ஆண்டு நிறைவு விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

பொன்னீராட்டு விழா ;

ஷண்முகரின் மகன் வயிற்றுப் பேரன் மணவாளனுக்கு 1967 டிசம்பர்த் திங்களில் ஆண் மகவு பிறந்தது. நான்கு தலை முறையினர் ஒரே காலத்தில் ஒருசேர வாழ்ந்திருத்தல் ஓர் அரிய சேர்க்கை என்பதனால், இதனை ஓர் அரிய நிகழ்ச்சியாகக் கொண்டாட நூல்களில் வகை செய்துள்ளார்கள். இது சொர்ணாபி

ஷேகம் (பொன்னிராட்டு விழா) என்று போற்றப்படுகிறது. மணவாளனுடைய மகன் இராகவன் தன் தந்தையின் தாத்தா வான ஷண்முகருக்கு 22–5–68இல் பொன்னிராட்டினான். இந்த நிகழ்ச்சியும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பெற்றோருக்குச் செய்த கடன் :


ஷண்முகர் தம் பெற்றோரிடம் மிக்க அன்பும் மரியாதையும் உடையவர்; அதுபோலவே தம் பெரிய தாயாரிடமும் அன்புடையவர்; தந்தையாருக்கு அறுபத்து நான்கு திதியும், ஒன்றுகூடத் தவறாமல் அவர் செய்து வந்துள்ளார். தந்தையாரின் இறுதி நாளில் ஷண்முகரும் அவருடைய தம்பி பழனிசாமி முதலியாரும் பத்தொன்பது நாள் இரவு பகலாக மாறி மாறிக் கண் விழித்து அருகே இருந்தனர்; தந்தையின் ஆவி பிரியும் போது மக்கள் செய்ய வேண்டிய கிரியைகளைத் தவறாமல் செய்து முடிக்க அவ்வாறு காத்திருந்தனர்.

ஷண்முகருக்கு மக்கள் ஆற்றிய கடன் :

ஷண்முகர், தம் தந்தையாரின் இறுதி நாளில் அவர் கையினால் பசு தானம் முதலானவற்றைச் செய்வித்தார். தாயார் இறப்பதற்கு முன்னால், அவர்களுக்குப் பாதபூஜை செய்து வணங்கினார். தாயின் அன்பைப் போற்றி மனம் நெகிழ்ந்து, "அன்னை திருவடி போற்றி" என்னும் பாடல்கள் இயற்றி அச்சிட்டு வழங்கினார். இவற்றையெல்லாம் சொல்லக் கேட்டிருந்த ஷண்முகரின் மக்களும் தம் தந்தையாருக்கு அவ்வாறே செய்ய ஆவல் கொண்டனர். 1–9–1977இல் [பிங்கள, ஆவணி, 16 வியாழன்] தம் தந்தையார் கையினால் பசு தானம் வழங்கச் செய்தார்கள்; அடுத்த நாள் ஷண்முகருக்குப் பாத பூஜை செய்தார்கள்; "திருவடி போற்றி" என்னும் நூலை அச்சிட்டு வழங்கினார்கள்.

மூத்த மகன் எதிராஜரின் குடும்பம் :

1941 ஜூன் திங்களில் தம்முடைய மூத்த மகன் எதிராஜ முதலியார் இறந்தபோது, ஷண்முகர் கதறி அழுதார். முப்பத்தாறு வயதில் தம் மகன் மறைந்தது அவர் உள்ளத்தை உலுக்



ஷண்முகர் - மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன் (1938)

கியது. எதிராஜரின் முதல் மனைவியின் மக்கள் ஒருவரும் இல்லை. இரண்டாவது மனைவி பாலசுந்தரத்திற்கு சீதேவி, குமுதம் ஆகிய இரு பெண்கள் மட்டுமே இருந்தனர். எதிராஜர் இறந்தபோது அவருடைய இரண்டாவது மனைவி கருவுற்றுப் பத்து மாதம் நிறை கர்ப்பிணியாக இருந்தார்கள். பிறக்கும் குழந்தை ஆணாக இருக்கவேண்டுமே என்று குடும்பத்தினர் அனைவரும் ஏங்கி நின்றனர். எதிராஜர் மறைந்த பத்தாம் நாள் அவர் மனைவி ஆண் மகவை ஈன்றார். அந்த மகிழ்ச்சி எதிராஜரின் மறைவினால் ஏற்பட்ட துன்பத்தைத் தணித்து ஆறுதல் அளித்தது. குலம் விளக்க வந்த அந்த மகவுக்குக் குலசேகரன் என்ற பெயர் வைத்துக் கொண்டாடினார்கள்.

எதிராஜ முதலியாரின் மூத்த மகள் சீதேவியைப் பெங்களூர் திரு. வி. கோவிந்தராஜ முதலியார் மகன், சுப்பிரமணியனுக்கு 1953ஆம் ஆண்டு ஜூன் திங்களில் மணம் முடித்தார்கள். சீதேவிக்குத் திருமூலன், மணிவேல் ஆகிய இரு ஆண் மக்கள் இருக்கிறார்கள். இளைய மகள் குமுதவல்லியைக் குடியேற்றம் மா. ஆ. வேலாயுத முதலியாரின் இளைய மகன் சங்கரன், பி.எஸ்ஸி.,பி.எல். அவர்களுக்கு 6-7-1955இல் மணம் செய்து கொடுத்தார்கள். தேவகி, தேன்மொழி, திருமகள், வத்சலா ஆகிய நான்கு பெண் மக்களும், அமர்நாத் என்ற ஆண் மகவும் குமுதவல்லிக்குப் பிறந்திருக்கிறார்கள். குலசேகரனுக்குக் குடியேற்றம், திரு. மா. ஆ. வே. துரைசாமி முதலியாரின் இளைய மகள் இமயவல்லியை 2-7-1964 இல் மணம் முடித்தார்கள். இந்தத் திருமணமும், திரு. மணவாளனின் திருமணமும், ஒரே நாளில் குடியேற்றம் திருமகள் மில்லில் நடைபெற்றன. மாலழகன், பரத நம்பி, ஸ்ரீதரன் ஆகிய மூன்று ஆண் மக்கள் குலசேகரனுக்குப் பிறந்திருக்கிறார்கள்.

இரண்டாவது மகன் பத்மநாபனின் குடும்பம் :

திரு. பத்மநாபன் 26-3-1920 இல் பிறந்தார். இவருக்கு 18 வயதில் 1-9-1938 (வெகுதானிய, ஆவணி 16) வியாழக்கிழமை திருமணம் நடைபெற்றது. இவருடைய மூத்த

மகள் இந்திரையைத் திருவண்ணுமலை திரு. டி. வி. தேவராஜ முதலியாரின் இளைய மகன் பட்டுசுவாமிக்கு 15-9-1958 இல் மணம் செய்து கொடுத்தார்கள். இந்திரைக்கு அமரேசன், அம்பிகாபதி, குணசேகரன் என்னும் மூன்று ஆண் மக்கள் பிறந்திருக்கிருர்கள். பத்மநாபனின் மூத்த மகன் மணவாள னுக்கு செலந்தம்பள்ளி திரு. திருஞானத்தின் மகள் காந்திமதி யை மணம் செய்து கொண்டார்கள். காந்திமதி பத்மநாபனின் தங்கை கமலநாயகியின் மகளுமாவாள். மணவாளனுக்குக் கோசலை, இராகவன், சீனிவாசன் என்னும் மூன்று மக்கள் பிறந்திருக்கிருர்கள். பத்மநாபனின் இரண்டாவது மகன் திருமலைக்கு பெங்களூர், திரு. பி. டி. செங்கோட முதலியாரின் மகள் வனஜாவைத் திருமணம் செய்துகொண்டார்கள். திருமலைக்கு மாதவன், சுமித்திரை, இலட்சுமணப் பெருமாள் ஆகிய மூன்று மக்கள் பிறந்திருக்கிருர்கள். பத்மநாபனின் இரண்டாவது மகள் கோமேதகத்தைக் குடியேற்றம் புதூர் கோவிந்தப்ப முதலியாரின் பேரனும், திரு. நாராயணசாமி முதலியாரின் மகனுமான வேணுகோபாலனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். இவர்களுக்கு நித்திலம், பூங்குழலி என்னும் இரண்டு பெண் மக்கள் இருக்கின்றுர்கள். பத்மநாப னின் கடைசி மகன் அச்சுதனுக்குத் திருப்பத்தூர், திரு. எ. தண்டபாணி முதலியாரின் மகள் கோமதியை மணம் செய்து கொண்டார்கள். கோமதி, அச்சுதனுக்குத் தாய் மாமன் மக ளாவாள். இவர்களுக்குச் சத்தியபாமை என்னும் பெண் மகவு இருக்கிறது. இரண்டாவதாக ஆண் மகவும் பிறந்திருக்கிறது. ஷண்முகர் காலத்தில் அவருடைய பேரன்மார்களாக வாய்த்தவர் களுள் 'கடைசி பேரன்' என்ற சிறப்பை இந்த ஆண் மகவு பெறுகின்றது. பத்மநாபனின் கடைசி மகள் அஞ்சுகத்தைத் திருப்பத்தூர், பெ. மு. ரத்தின முதலியார் பேரனும், திரு. பழனிசாமி முதலியாரின் மகனுமான டாக்டர் விசாகப்பெரு மாளுக்கு மணம் முடித்தார்கள். விசாகப்பெருமாள் பத்மநாப னின் தங்கை செல்வநாயகியின் மகனுவார். இவர்களுக்கு மேனகை என்னும் பெண் மகவு பிறந்திருக்கிறது.

மூன்றாவது மகன் ரகுநாயகனின் குடும்பம் :

ரகுநாயகன் 8—12—1921 இல் பிறந்தார். 1933 ஆம் ஆண்டு நவம்பரில் செல்வநாயகி பிறந்தாள். ரகுநாயகனுக்குப் பதினைந்து ஆண்டு பூர்த்தியானபோது, 1937ஆம் ஆண்டு ஜனவரியில் தாயார் பழனியம்மாள் காலமாகிவிட்டார்கள். அப்போது செல்வநாயகி மூன்று வயதுக்குழந்தை. செல்வநாயகி பெரிய அக்காள் ஜானகி அம்மாளிடம் வளர்ந்தாள். ரகுநாயகன் தம் பள்ளி இறுதி வகுப்பைக் குடியேற்றத்தில் படித்து 1940ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தேர்வு எழுதினார். பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி பெற்ற பின்னர்த் திரு. மு. வரதராசன் அவர்களின் ஆலோசனையின்படி, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ரகுநாயகன் தமிழ் பி. ஓ. எல். படிப்பதற்கு உடன்பட்டார். 1945-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பி. ஓ. எல். (ஆனர்சு) தேர்வு எழுதி வெற்றிபெற்றார். தம் மகன் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றது ஷண்முகருக்குப் பெருமகிழ்ச்சி அளித்தது. ரகுநாயகன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே, 10—7—1942-இல் திருமணம் நடந்தது; திருப்பத்தூர் பெ. மு. ரத்தின முதலியார் மகள் சரசுவதியை மணம் செய்வித்தார்கள். ஆனால் அதே ஆண்டில் நவம்பர் 22 இல் (கார்த்திகை 6-ஆம் நாள்) சரசுவதி தீப்புண்ணினால் இறந்து விட்டார். பின்னர்ப் போளூர் போர்டு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர், திரு. அ. பாலசுந்தர முதலியார் அவர்களின் மகள் சரசுவதியை 4—2—1944இல் (தைத் திங்கள் 20ஆம் நாள்) இரண்டாவது திருமணம் செய்து வைத்தார்கள். ரகுநாயகனுக்கு சந்ததி ஏற்படவில்லை. ரகுநாயகன் தம் தங்கை செல்வநாயகியின் ஆண் மக்கள் நால்வரையும் சிறுவயது முதல் தாமே வளர்த்து வரலானார். செல்வநாயகியின் மூத்த மகன் விசாகப்பெருமாள் இரண்டாவது வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும்போது, ஷண்முகர் அவனைத் தம்முடன் அழைத்துச் சென்று, குடியேற்றத்தில் படிக்க வைத்தார். செல்வநாயகியின் மக்கள் நால்வரையும் நல்ல முறையில் வளர்த்து உயர்கல்வி அளிக்க

வேண்டும் என்ற ஆர்வத்திஞல் ரகுநாயகன் மற்ற மூவரையும் தம் வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொண்டு வளர்க்க லாஞர்.

மூத்த மகள் ஜானகி அம்மாள் குடும்பம் :

ஷண்முகருக்கு 1902ஆம் ஆண்டு மேத் திங்களில் முதல் திருமணம் ஆனது. 1905ஆம் ஆண்டு சனவரியில் அவருக்குத் தலைமகஞக எதிராஜ முதலியார் பிறந்தார். அதன் பின்னர் மூன்றரை ஆண்டுகள் கழித்து, 24—6—1909 (சவுமிய, ஆனி—11) இல் ஜானகி அம்மாள் பிறந்தார்கள். இந்த இரு குழந்தைகளும் அருணுசல முதலியார் ஜீவ தசை யிலேயே பிறந்து வளர்ந்திருந்த பேரன்மார்கள் ஆனதால் மிகவும் செல்வாக்குடன் வளர்க்கப்பட்டார்கள். பேரன், பேத்தி யரிடம் அருணுசல முதலியார் கொண்டிருந்த அன்புக்கு அள வில்லை. ஜானகியம்மாளின் திருமணம் 1923 இல் நடை பெற்றது. செலந்தம்பள்ளி முத்துசாமி முதலியாருடைய மகன் ராமசாமி முதலியாருக்கு ஜானகியம்மாளைக் கன்னிகாதான மாகத் திருமணம் செய்து கொடுத்தார்கள். ராமசாமி முதலி யார் ஷண்முகரின் சிறிய தந்தையார் வையாபுரி முதலியாரின் மகள் வயிற்றுப் பேரன் ஆவார். ஷண்முகர் தலை எடுத்து அவர் மக்களுக்குச் செய்த முதல் திருமணம் ஆனதால் அந்தத் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 5 நாள் வரையில் திருமண விழா கொண்டாடப் பெற்றது. ஜானகியம் மாள் கணவருடன் ஐந்து ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார்கள். திரு. ராமசாமி முதலியார் இளமையிலேயே காலமாகிவிட்டார். ஜானகியம்மாளுக்கு ஆண் மகவு ஒன்று மட்டுமே பிறந்தது. அதற்குத் தியாகராஜன் எனப் பெயரிட்டார்கள். ராமசாமி முதலியார் காலமான பிறகு ஜானகியம்மாள் தாய் வீட்டிலேயே வந்து தங்கிவிட்டார்கள். ஷண்முகரின் குடும்பத்தில் ஏற்பட்ட எல்லா சுகதுக்கங்களிலும் ஜானகியம்மாள் முழுப்பங்கேற்ருர்கள். ஷண்முகர் குடியேற்றம் சென்று திருமகள் நூல் ஆலையை நிருவாகம் செய்து வந்தபோது ஜானகியம்மாள் தந்தையாருடன் இருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்

தார்கள். ஜானகியம்மாளுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி தாய்வீட்டின் வாழ்க்கையோடு இணைந்து விட்டதாகும்.

தியாகராஜனுக்கு, அத்தை பாக்கியம்மாளின் மகள் கமலாவை மணம் செய்து கொண்டார்கள். பாக்கியம்மாளின் கணவர் கண்டவராயன்பட்டி துரைசாமி முதலியார் இளமையில் செலந்தம்பள்ளியில் குடியிருந்தவர். இவர் நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார் ஒருவரின் மேலாளராக ரங்கூனில் பணியாற்றி வந்தார். மகள் கமலாவின் திருமணத்தின்போது இவர் ரங்கூனில் இருந்தார். அப்போது இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பர்மா தேசம் முழுவதும் ஜப்பானியர் கைவசமாகி, திரு. துரைசாமி முதலி யாரைப் பற்றி எவ்விதத் தகவலும் தெரியாமல் இருந்து வந்தது. தியாகராஜனின் திருமணம் 4—2—1944ல் நடைபெற்றது. தியாகராஜனுக்கு மயில்வாகனன், சிந்தாமணி, சூடாமணி, கணநாதன், சோமசேகரன், மதிசேகரன் ஆகிய ஆறு மக்கள் பிறந்து இருக்கிறுர்கள். மயில்வாகனனுக்கு வாணியம்பாடி திரு. ஷண்முக முதலியாரின் மகள் தனலட்சுமியை மணம் செய்து கொண்டார்கள். இவர்களுக்கு பாரிஜாதம், ஓவியம், தேசிகம், விமலன் ஆகிய நான்கு மக்கள் இருக்கிறுர்கள். சிந்தாமணியைக் குடியேற்றம், திரு. ஆர். ஜி. நாகப்ப முதலி யாரின் மகன் வேலாயுதத்திற்கு மணம் செய்து கொடுத்தார்கள். இவர்களுக்கு தேவசேனன், சிவகுமார், ரவிகுமார் என்னும் மூன்று ஆண் குழந்தைகள் இருக்கிறுர்கள். சூடாமணியை ஆம்பூர் திரு. கே. எஸ். உலகநாத முதலியாரின் மகன் சுந்தர மூர்த்திக்கு மணம் முடித்தார்கள். இவர்களுக்குச் செந்தில், சந்திரன் ஆகிய இரு ஆண்மக்கள் இருக்கிறுர்கள்.

இரண்டாவது மகள் சொர்ணம்மாள் குடும்பம் :

ஷண்முகரின் இரண்டாவது மகள் சொர்ணம்மாள், 13—7—1913 (பிரமாதீச, ஆனி 30, ஞாயிறு) இல் பிறந்தார். இவருக்குப் பதினுன்கு வயதில் 1926 சூனில் திருமணம் ஆனது. புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, அம்புஜவல்லி, கார்த்திகேயன், சதானந்தன், இமயவல்லி ஆகிய ஆறு மக்கள் பிறந்திருக்கிறுர்

கள். புவனேஸ்வரியை ஆரணி சைதாப்பேட்டை திரு. சோம சுந்தர முதலியார் மகன் ஆறுமுகத்துக்கு மணம் செய்து கொடுத்தார்கள். இரண்டு பெண் குழந்தைகளை ஈன்ற பின்னர், புவனேஸ்வரி 16-8-1954 இல் காலமாகி விட்டாள். புவனேஸ்வரியின் இரு குழந்தைகளையும் சொர்ணம்மாளே வளர்த்தார்; பெரிய பெண் வைதேகியைத் தம் மகன் கார்த்திகேயனுக்கு மணம் செய்து கொண்டார். இரண்டாவது பெண் மைதிலியைப் பழங்கோயில் பக்தவத்சலத்துக்குக் கொடுத்து, அந்தத் தம்பதிகள் குடியேற்றத்திலேயே வசித்து வருகின்றனர்கள். கார்த்திகேயனுக்குச் செல்வநாதன், செந்தில்நாதன் என்னும் இரு மக்கள் பிறந்திருக்கின்றனர்கள். சொர்ணம்மாளின் இரண்டாவது மகள் இராஜேஸ்வரியை, சேலம், பட்டணம் திரு. இராமசுவாமி முதலியார் மகன், திரு. குமாரசாமிக்கு மணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். இவர்களுக்கு அங்குசபாணி என்ற ஒரு மகன் மட்டும் உண்டு.

மூன்றாவது மகள் அம்புஜவல்லியைக் குடியேற்றம் திரு. சுப்பிரமணியனுக்கு மணம் செய்து கொடுத்தார்கள். இவர்களுக்கு நளினி, ஜெயபாரதி, சித்ரா என்னும் மூன்று மக்கள் இருக்கின்றனர்கள். சதானந்தத்துக்குத் திருப்பத்தூர், மரப்பட்டறை, திரு. எஸ். குப்புசாமி முதலியாரின் மகள் கஸ்தூரியை மணம் செய்து கொண்டார்கள். கடைசி மகள் இமயவல்லியை ஷண்முகர் தம் பேரன் குலசேகரனுக்கு மணம் முடித்துக் கொண்டார்.

மூன்றாவது மகள் கமலநாயகியின் குடும்பம் :

கமலநாயகி, 8—9—1926 இல் பிறந்தவர். கமலநாயகிக்கு குருநாதன், பாரதி, காந்திமதி, பவளவல்லி, ஞானசுந்தரம் என்று ஐந்து மக்கள் இருக்கின்றனர்கள். குருநாதனுக்கு ஊத்தங்கரை திரு. ஷண்முக முதலியாரின் மகள் மேகலையை மணந்து கொண்டார்கள். இவர்களுக்குச் சிவசைலம், கவிதா, எழிலன் ஆகிய மூன்று மக்கள் இருக்கின்றனர்கள். பாரதியை, ஜோலார்பேட்டை திரு. வி. இராமசாமி முதலியாரின் மகன் திரு கிருபாகரனுக்கு மணம் செய்து கொண்டார்கள். இவர்

களுக்கு தயாநிதி, முகுந்தன் என்னும் இரு ஆண்மக்கள் இருக்கிறார்கள். காந்திமதி தன் மாமன் மகன் மணவாளனை மணந்து கொண்டாள். பவளவல்லியைக் குடியேற்றம் திரு. கே. எம். இராமலிங்கம், B A. அவர்களுக்கு மணம் செய்து கொடுத்தார்கள். இவர்களுக்கு அரவிந்தன், ஆனந்தன் ஆகிய இரு ஆண் மக்கள் இருக்கிறார்கள்.

கடைசி மகள் செல்வநாயகியின் குடும்பம் :

செல்வநாயகி, 20—11—1933 (சீமுக, கார்த்திகை-5 திங்கள்) இல் பிறந்தவர். ஷண்முகர் அண்ணாண்டப்பட்டி மிட்டா வாங்கிய அன்றைய தினமே செல்வநாயகி பிறந்தார். செல்வநாயகி பிறந்து சிலநாள் கழித்து தாயாரின் உடல் நலம் குன்றியது. மூன்று ஆண்டுகள் கழித்து, 1937 சனவரியில் தாயார் பழனியம்மாள் காலமாகி விட்டார். செல்வநாயகி சிறு வயது முதல் தமக்கையார் ஜானகி அம்மாளிடம் வளர்ந்தார். இவருக்குப் பதினைந்தாவது வயதில் (1948-சூன்) திருமணம் ஆனது. விசாகப்பெருமாள், சோமநாதன், மகாலிங்கம், கோபாலகிருஷ்ணன் ஆகிய நான்கு ஆண் மக்கள் பிறந்து இருக்கிறார்கள். செல்வநாயகி 1973-சூன் 18 ஆம் நாள் வேலூர், சி. எம். சி. மருத்துவ மனையில் காலமானார். இவருக்குத் திருமணமான இருபத்தைந்தாம் ஆண்டில், அதே சூன்-18 திங்கட்கிழமை இவர் காலமானார்.

ஆல்போல் தழைத்தல் :

ஷண்முகர் வயிற்றில் பிறந்த மக்களின்வழி பேரன் பேத்தியர் எழுபத்து எண்மர் ஆவர். மக்கள், பேரன் பேத்தியர், அவர்வழி பேரக்குழந்தைகள் ஆகியவர்களைப் பெற்று ஷண்முகர் ஒரு மாபெரும் குடும்பத்தின் தலைவராகப் பொலிந்து விளங்கினார்.

ஷண்முகர் கொண்ட உறவுகள் :

ஷண்முகரின் மூத்தமகன் எதிராஜ முதலியாருக்கு, 1925 இல் முதல் திருமணம் நடைபெற்றது. ராயக்கோட்டை கோட்டியப்ப முதலியார் மகள் பாக்கியத்தை மணம் செய்வித்தார்

கள். ஷண்முகரின் சிறிய தந்தையார் வையாபுரி முதலியாரின் மகள் வயிற்றுப் பேத்தி பாக்கியம்மாள். பாக்கியம்மாள் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தார்கள்.


இவருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்து இறந்து விட்டது. இவர் இறக்கும்போதும் ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்திருந்தார்கள். அதுவும் சிலநாளில் இறந்து விட்டது. பாக்கியம்மாள் 1933இல் இறந்தபின்னர்த்திருப்பத்தூர் ''பெங்களூரார்'' என்னும் எம். ஷண்முக முதலியாரின் மகள் பாலசுந்தரத்தை இரண்டாவது மணம் முடித்தார்கள். இந்த பெங்களூரார் ஷண்முகரின் தாய்க்கு உறவினர் ஆவார்.

ஷண்முகரின் இரண்டாவது மகள் சொர்ணம்மாளைக் குடியேற்றம், மாக்காத்தை ஆ. வேலாயுத முதலியார் மகன் துரைசாமி முதலியாருக்கு 1926 இல் மணம் செய்வித்தார்கள். துரைசாமி முதலியார் வேலாயுத முதலியாரின் முதல் மனைவியின் வயிற்றில் பிறந்தவர். ஷண்முகரின் தங்கை தெய்வானையம்மாளை வேலாயுத முதலியார் இரண்டாவது மனைவியாக ஏற்கனவே மணம் செய்து கொண்டிருந்தார்.

ஷண்முகரின் இரண்டாவது மகன் பத்மநாபனுக்குத் திருப்பத்தூர் திரு. பி. வி. சென்னமூர்த்தி முதலியார் பேத்தி (எல்லப்ப முதலியார் மகள்) ஜெயலட்சுமியை 1938 இல் மணம் செய்வித்தார். சென்னமூர்த்தி முதலியார் ஷண்முகருடன் நெருங்கிப் பழகியவர். இத்திருமணத்தின் மூலமாக இவர்களுக்குள் உறவு ஏற்பட்டது.

ஷண்முகர் தம் மூன்றாவது மகள் கமலநாயகியை செலந்தம்பள்ளி திரு. சி. முருகேச முதலியார் மகன் திருஞானத்திற்கு 1942இல் மணம் செய்துகொடுத்தார். முருகேசமுதலியார் குடும்பம் பல்லாண்டுகளாக ஷண்முகருடன் பழகி வந்திருந்தாலும் இப்போதுதான் முதல் முறையாக உறவு ஏற்பட்டது.

ஷண்முகரின் இரண்டாவது மனைவி பழனியம்மாளின் மகன் ரகுநாயகனுக்குத் திருப்பத்தூர் திரு. பி. எம். ரத்தின முதலியார் மகள் சரஸ்வதியை 1942 ஜூலையில் மணம் செய்து



ஷண்முகர் - பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடன் (30—4—1975)

கொண்டார்கள். இந்தப் பெண் அதே ஆண்டில் நவம்பர் மாதத்தில் தீப்புண்ணினால் இறந்து விட்டது. ரத்தின முதலியாரின் குடும்பத்தாருக்கும் ஷண்முகருக்கும் பல ஆண்டுகளாக நட்புறவு உண்டு. ரத்தின முதலியாரின் அண்ணர் முருகப்ப முதலியார் மகன் பழனிசாமி முதலியாருக்கு ஷண்முகரின் சிறிய தந்தையார் ஆறுமுக முதலியாரின் பேத்தியை மணம் செய்து கொண்ட வகையில் இவர்கள் இரு குடும்பத்திற்கும் ஏற்கனவே உறவு ஏற்பட்டிருந்தது. ரகுநாயகனின் முதல் மனைவி சரஸ்வதி இறந்துபோன பிறகு, போளூர் உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு ஏ. பாலசுந்தர முதலியார் மகள் சரஸ்வதியை 1944 இல் இரண்டாவதாகத் திருமணம் செய்வித்தார். இவர்களும் ஷண்முகரின் சிறிய தந்தையார் வையாபுரி முதலியார் மகன் சுப்பிரமணிய முதலியாரின் இரண்டாவது மனைவியின் மூலமாக உறவினர்கள் ஆவார்கள்.

ஷண்முகரின் கடைசி மகள் செல்வநாயகியை ரகுநாயகனின் முதல் மனைவி சரஸ்வதியின் அண்ணன் பழனிசாமிக்கு 1948 இல் மணம் செய்து கொடுத்தார்கள்.

நாள் பார்த்துக் கொடுத்தல் :

குடியேற்றத்தில் பெரியமுனி ஆறுமுக முதலியார் மிகப் பிரபலமாக விளங்கிய ஜோதிடராவார். ஷண்முகர் தொழில் தொடர்பாக அடிக்கடி குடியேற்றம் சென்று வருவதுண்டு. அப்போது ஜோதிடர் ஆறுமுக முதலியாருடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவருடைய பழக்கத்தால் இவரும் சிறிது சிறிதாக நல்ல நாள்களைக் கணிப்பதில் வல்லவரானார். நுண்ணறிவும், கணிதத் திறனும் அவருக்கு நாள்களைக் கணிப்பதில் பெரிதும் உதவின. இவருடைய சுற்றத்தார், இனத்தார் இன்னும் மற்றவர்களும் இவரை அணுகித் தங்களுக்கு வேண்டிய நல்ல நாளைக் கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். இதற்காக இவரிடம் வருபவர் பலராவர். திருமணம், தொழில் ஆரம்பித்தல், கட்டடங்களுக்குக் கடகால் போடுதல், புதுமனை புகுதல் ஆகிய சுபகாரியங்களுக்கு இவரிடம் வந்து

நாள்கேட்டு அதன்படி செய்தல் தங்களுக்கு நலமுடையதாகும் என்று அவர்கள் நம்பினுர்கள். மிகவும் தெரிந்தவர்கள், இவரே நேரில் வந்து செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுவார்கள். இவரும் அவர்களுடைய விருப்பத்தை மறுக்காமல் சென்று, அவ்வாறே செய்து கொடுப்பது வழக்கம்.

கோவில்களும் கும்பாபிஷேகமும் :

ஸ்ரீ தண்டபாணி கோவில் :

திருப்பத்தூரில் வாழும் செங்குந்தர்கள், பாவு தோயும் பாவடிக்கு அருகில் உள்ள திடலில் வேல் ஒன்றை நாட்டி, அதனை வழிபட்டு வந்தார்கள். அது "வேல் கோவில்" என வழங்கிவரலாயிற்று. சில ஆண்டுகள் கழிந்த பின்னர், அங்கு வேலுக்குரிய முருகன் சிலையையும் நிறுவிக் கோவில் கட்ட வேண்டுமென விரும்பினுர்கள். அப்போதிருந்த பெரியவர்கள், திரு. ஆ. கு. குமாரசாமி முதலியார், திரு. காளத்தி முதலியார், திரு. சிவசண்முக முதலியார், திரு. வேடியப்ப முதலியார் ஆகியவர்களுடன் கூடி ஷண்முகரும் கோயில் கட்டும் திருப்பணியில் ஈடுபடலானுர்.

திருப்பத்தூருக்கு மேற்கே எட்டுக்கல் தொலைவில் உள்ள சந்திரபுரம் மலையில் கோயில்கட்டி வழிபடுவதற்காக ஒருவர் ஸ்ரீ பழனியாண்டவரின் கையில் தண்டு ஏந்திய தண்டபாணிச் சிலையை வடித்து வைத்திருந்தார். அதனைச் சென்று கண்ட ஷண்முகர், அந்தச் சிலையின் அழகினைப் பார்த்து அதனை மிகவும் விரும்பினுர்; அதனையே தாங்கள் கட்டிக்கொண்டிருக்கும் புதிய கோயிலில் நிறுவ வேண்டுமென்று விரும்பினுர். அந்தச் சிலைக்கு உரிய பெரியவர், தாம் எடுத்த வேலையை முடிப்பதற்கு வேண்டிய பொருள் இல்லாமையால் தாம் வடித்து வைத்திருந்த ஸ்ரீ தண்டபாணிச் சிலையைத் திருப்பத்தூர் செங்குந்தர்களுக்குக் கொடுக்க முன்வந்தார். அந்தச் சிலையின் திருமேனியிலேயே ஸ்ரீ பழனியாண்டவர் எழுந்தருளி இப்போது அருள் பாலித்து வருகிருர். இந்தக் கோயிலைக் கட்டி முடித்து ஸ்ரீ தண்டபாணி சுவாமியின் சிலையையும் நிறுவி 20-5-1921இல் கும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்தார்கள்.

1921ஆம் ஆண்டுக்குப் பிறகும், வேடிசாமியார் என்று அழைக்கப்பட்ட திரு. கே. எ. வேடியப்ப முதலியார் அவர்கள் மற்றும் சிலரையும் சேர்த்துக்கொண்டு, பலரையும் அணுகி நன்கொடைகள் பெற்றுக் கோவில் சுற்றுச்சுவர், வெளிமண்டபம் இராஜகோபுரம் முதலிய திருப்பணிகளைத் தொடர்ந்து சிறிது சிறிதாகச் செய்து வந்தார். 1971இல் ஷண்முகர் தலைமையில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. விமானத்தையும், கோபுரத்தையும் புதுப்பித்தார்கள்; கர்ப்பக்கிரகத்தை மாற்றி அமைத்துக் கட்டினார்கள். ஏற்கனவே இருந்த விநாயகர், சுப்பிரமணியன், வள்ளி தெய்வானை ஆகிய சிலைகளைத்தவிரப் புதியதாக சிவபெருமான், உமையம்மை, ஐயப்பன், திருமால், சீதேவி, பூதேவி, துர்க்கை, நவக்கிரகங்கள், நவவீரர்கள், வீரபாகு, இடும்பன் ஆகிய சிலைகளை அமைத்தார்கள்; மற்றும் ஏற்கனவே தனியாக இருந்த விநாயகர் கோவிலையும் முழுவதுமாகப் புதுப்பித்துக் கட்டினார்கள். வேறுபல திருப்பணிகளும் செய்து, ஷண்முகர் குறித்துக் கொடுத்த நல்ல நாளில் 1974ஆம் ஆண்டு சூலை முதல் நாளன்று இவைகளுக்கு இரண்டாவது முறையாகக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது; ஷண்முகர் முன்னிலையில் இக்கோயிலின் கும்பாபிஷேகம் சிருடனும், சிறப்புடனும் செய்யப்பட்டது.

ஸ்ரீ ராம நிலையம் :

திருப்பத்தூர், செங்குந்தர் தெருவில் ஷண்முகர் தம் வீட்டுக்கருகில், 'ஸ்ரீ ராம நிலையம்' என்னும் ஹரிபஜனைக்கூடத்தை முழுவதும் தம் குடும்பப் பணத்தைக்கொண்டு கட்டி, 1925ஆம் ஆண்டில் சம்ப்ரோட்சணம் செய்தார்; இந்த பஜனைக்கூடத்தின் தெற்கே மடப்பள்ளியையும், முன்பக்கத்தில் வீதிக்கும் கிழக்கே பிருந்தாவனம் என்னும் நந்தவனத்தையும் ஏற்படுத்தினார்.

குடியேற்றம் திருமகள் மில் கோயில் :

ஷண்முகர் குடியேற்றம் திருமகள் மில்லின் நிருவாகத் தலைவராக இருந்தபோது, அந்த மில் அமைந்துள்ள திருநகரில் திருமகளுக்காகவும், செல்வ விநாயகருக்காகவும் இரட்டைக் கோயில் எழுப்பி, 1951இல் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்.

குடியேற்றம் ஈஸ்வரன் கோயில் :

ஷண்முகர் திருமகள் மில் நிருவாகத்தை ஏற்றுக்கொண்டு குடியேற்றம் சென்ற பின்னர் நல்லூர்பேட்டை ஈஸ்வரன் கோயிலுக்கு அடிக்கடி சென்று வழிபடும் வழக்கத்தை மேற் கொண்டார். அவருடைய ஜன்ம நட்சத்திரமாகிய பூரத்தில் ஈஸ்வரனுக்கு அபிஷேகமும், சகஸ்ரநாம அர்ச்சனையும் செய்து வழிபடுவது வழக்கமாயிற்று. 1957ஆம் ஆண்டில் இக் கோயிலுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத் திருப்பணிக் குழுவிற்குத் தலைவர்கள் மூவரில் இவரும் ஒருவராய் விளங்கி னர். 1957 ஆம் ஆண்டு சூலை 15ஆம் நாள் தமிழக அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் முன்னிலையில் இக் கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

கரகப்பட்டி ஜோதி விநாயகர் கோயில் :

திருப்பத்தூருக்கு மேற்கே ஏழுகல் தொலைவில், கந்திலிக்கு அருகே கரகப்பட்டி உள்ளது. கரகப்பட்டியில் இஜாராதார், திரு. சி. எ. வேங்கடப்ப நாயுடு வாழ்ந்திருந்தார். அவர் சிறந்த பக்தர். தம் வீட்டுக்கு அருகே, தம்முடைய இடத்தில் ஒரு விநாயகர் கோவில் அமைக்க வேண்டுமென விரும்பிக் கோவில் கட்டினர். ஆனால் பல்லாண்டுகளாக, அதில் விநாயகர் சிலையை நிறுவிக் கும்பாபிஷேகம் செய்யாமலேயே இருந்தது. திரு. வேங்கடப்பர் காலமான பின்னர், அவருடைய துணைவியார் திருமதி. கே. வி. பாப்புஅம்மாள், கணவரின் கனவாகிய இந்தக் கோயில் திருப்பணியை நிறைவு செய்ய வேண்டுமென்று விரும்பி ஷண்முகரை அணுகி ஆலோசனை கேட்டார். திருவண்ணாமலையில் வைத்தியநாதஸ்தபதியின் குமாரர் திரு. ரமணன் அவர்களிடம் விநாயகர் சிலை செய்ய ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. கும்பாபி ஷேகத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் ஷண்முகரின் ஆலோசனைப்படி செய்யப்பட்டன. 1963 மார்ச்சுத் திங்களில் ஷண்முகர் முன்னிலையில் கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்யப் பட்டது.

கோட்டை ஸ்ரீ பிரம்மேசுவரர் ஆலயம் :

திருப்பத்தூர் கோட்டையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபிரம் மேசுவரர் ஆலயம் மிகப் பழமையானது. அது மிகவும் பழுதடைந்து, பக்தர்கள் சென்று வழிபட இடையூருக இருந்தது. 1950ஆம் ஆண்டுஅளவில் இக் கோயிலுக்காகத் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. பல்வேறு திருப்பணிகள் நடை பெற்றன. திருப்பணிக் குழுவினர் ஷண்முகரை அணுகியபோது அவர் ஒரு பெருந் தொகையை வழங்கினுர். ஷண்முகரின் ஆலோசனைப்படி 8—2—1954இல் கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்யப்பட்டது.

மடவாளம் ஸ்ரீ அங்கநாதீசுவரர் கோயில் :

திருப்பத்தூருக்குக் கிழக்கே நான்கு கல் தொலைவில் மடவாளம் என்னும் சிற்றூர் இருக்கின்றது. 'மடவளாகம்' என்னும் சொல் மடவாளம் என்று திரிந்து வழங்குகின்றது போலும். இது பழமையான ஊர். இங்கு அங்கநாதீசுவரர் கோயில் இருக்கிறது. 1960ஆம் ஆண்டு அளவில் இக்கோயி லுக்கு மாடப்பள்ளி ஆசிரியர் திரு. டி. எம். மாணிக்க கவுண்டர் அவர்கள் அறங்காவலர் குழுத் தலைவராக வந்தார். அவருடைய முயற்சியினுல் இக் கோயிலுக்குப் பிச்சனூர் பி. கோ. கிருஷ்ண சாமி கவுண்டர் அவர்கள் தலைமையில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது. பல திருப்பணிகள் செய்யப்பட்டன. ஷண்முகரின் ஆலோசனைப்படியும், அவர் குறித்துக் கொடுத்த நல்ல நாளிலும் இக் கோயிலுக்கு 6—3—1963இல் கும்பாபி ஷேகம் செய்யப்பட்டது. ஷண்முகர் இதனை முன்னின்று நடத்திக் கொடுத்தார்.

வாணியம்பாடி விநாயகர் கோயில் :

வாணியம்பாடி அம்பூர்ப்பேட்டையில் வாழும் செங் குந்தப் பெருமக்கள் ஒரு விநாயகர் கோயிலைக் கட்டினுர்கள். அந்தக் கோயிலுக்கும் கும்பாபிஷேகம் செய்வதற்காக ஷண்முகரை அணுகி ஆலோசனை கேட்டார்கள். ஷண்முகரும் கும்பாபிஷேகத்திற்குச் செய்ய வேண்டிய எல்லா ஏற்பாடுகளை

யும் செய்துகொடுத்து, அதற்குரிய நல்ல நாளையும் குறித்துக் கொடுத்தார். அதன்படி ஷண்முகரின் முன்னிலையில் 2—9—1971இல் இந்த விநாயகர் கோயிலுக்குக் கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது.

ஆதியூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் :

ஆதியூர் பாவடித் தோப்பில் பழமையான ஸ்ரீசுப்பிரமணியர் ஆலயம் ஒன்று இருந்து வந்தது. ஆதியூரில் உள்ள செங்குந்தப் பெருமக்கள் இந்தக் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்யவேண்டுமென்று விரும்பி ஷண்முகரிடம் வந்து ஆலோசனை கேட்டார்கள். ஷண்முகர் ஒரு நாள் அங்கு நேரில் சென்று எல்லாவற்றையும் பார்வையிட்டுத் திருப்பணி செய்ய வேண்டியவைகளைக் குறித்து ஆலோசனை சொன்னார். ஆதியூர் செங்குந்தர்கள் திருப்பணிக்குழு ஒன்று அமைத்து ஷண்முகரின் ஆலோசனைப்படி திருப்பணிகளைச் செய்து முடித்தார்கள். ஷண்முகர் குறித்துக் கொடுத்த நல்ல நாளில் இக்கோயிலுக்கு அவர் முன்னிலையில் 9—2—1973இல் கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்யப்பட்டது.

ஊத்தங்கரை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் :

ஊத்தங்கரையில் செங்குந்தர்களுக்குப் பொதுவான ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் ஒன்று இருக்கிறது. இது மிகச் சிறிய கோயில். இதற்குத் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்று அந்த ஊர் மக்கள் விரும்பினார்கள். அவர்கள் ஷண்முகரிடம் வந்து ஆலோசனை கேட்டார்கள். திருப்பணிக்குரிய ஆலோசனைகளை ஷண்முகர் சொன்னார். பின்னர்க் கும்பாபிஷேகத்திற்குரிய நாள் குறித்துக் கொடுத்தார். ஷண்முகர் முன்னிலையில் 13—9—1963இல் கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்யப்பட்டது.

கோட்டை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் :

திருப்பத்தூர் கோட்டையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கஜேந்திர வரதராஜப் பெருமாள் கோயிலில் இருந்த மண்டபங்களும் கோபுரங்களும் பழுதடைந்து விட்டிருந்தன. இக்

கோயிலைச் சுற்றி வாழ்ந்திருந்த இந்துக்கள் எல்லோரும் ஐம்பது ஆண்டுகளில் வெளியேறி விட்டார்கள். நாளடைவில் நகரிலிருந்து இங்கு வந்து பெருமாளை வழிபடுவோரின் தொகையும் குறைந்து விட்டது. மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி தினத்தில் மட்டுமே திரளான மக்கள் வந்து வழிபடுவது வழக்கமாக இருந்தது. மற்ற நாள்களில் இக்கோயில் கவனிப்பாரில்லாமல் பழுதடைந்த நிலையில் இருந்தது. இக்கோயிலின் நிருவாக அறங்காவலராக இருந்த எ. கந்தசாமி செட்டியார் அவர்களின் முயற்சியால் 1966ஆம் ஆண்டில் இக்கோயிலுக்குத் திரு. சி. கே. துரைசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினர் ஷண்முகரை அணுகி ஆலோசனை கேட்டார்கள். அவர் ரூபாய் ஆயிரம் நன்கொடை மனமகிழ்ச்சியுடன் அளித்ததோடு அல்லாமல் திருப்பணிக்குரிய திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தார். திருப்பணி நடந்து வருகையில் பொருள் மேலும் தேவைப்பட்டபோது, மேலும் ரூபாய் 4000 நன்கொடை அளித்தார். திருப்பணி வேலைகள் எல்லாம் முடிந்த பின்னர் அக்கோயிலின் சம்ப்ரோட்சணத்திற்காக நாள் குறித்துக் கொடுத்தார். 24—5—1973இல் ஷண்முகரின் முன்னிலையில் சம்ப்ரோட்சணம் சிறப்பாகச் செய்யப்பட்டது.

ஸ்ரீ சுந்தரவீர ஆஞ்சநேய சுவாமி கோயில் :

இக்கோயில் பழமையானது. ஜோலார்பேட்டை சாலையில் உள்ள தாழைமடுவில் இந்த ஆஞ்சநேயரின் திருமேனி கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்வார்கள். 1940ஆம் ஆண்டுக்குப் பிறகு திரு. டி. எம். பொன்னுசாமி கவுண்டர் அவர்களின் முயற்சியினால் திருப்பணி செய்து இக்கோயில் செப்பனிடப்பட்டது. தமிழ் நாட்டில் உள்ள ஆஞ்சநேயர் திருவுருவங்கள் எல்லாவற்றையும் விட இது அழகான உருவம். இந்த ஆஞ்சநேயர் பக்திப் பரவசத்தோடு ஸ்ரீ ராமனை நினைந்து கைகூப்பி நிற்கின்றார். இவர் மிகவும் சக்தி உள்ளவர். இவருக்குப் பக்தர்கள் அதிகம். வருடம் முழுவதும் பக்தர்கள் ‘வடமாலை’ சாற்றிக் கொண்டிருப்பார்கள். பக்தர்கள் சிலர்கூடி

இந்தக்கோயிலில் ஸ்ரீ ராமபிரானுக்கும் ஒரு சன்னிதி அமைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் ஸ்ரீ சீதாப்பிராட்டி, ஸ்ரீ ராமபிரான், ஸ்ரீ இளையபெருமாள் ஆகிய மூவருக்கும் பஞ்ச லோக சிலை வடிக்க ஏற்பாடு செய்தார்கள். திரு. எஸ். பி. மணவாளன் இக்கோயிலுக்கு அறங்காவலர் குழுத் தலைவராக இருந்தபோது இந்தச் சிலைகளை நிறுவுவதற்கான சன்னிதி கட்டப்பட்டது. வேறு சில திருப்பணிகளையும் செய்தார்கள். இக்கோயிலுக்கும் ஷண்முகர் முன்னின்று, நாள் குறித்து, **7—5—1975**இல் சம்ப்ரோட்சணத்தைச் சிறப்பாகச் செய்து வைத்தார்.


ஷண்முகர் இவ்வாறு கோயில் கும்பாபிஷேகங்களுக்காக நாள் குறித்துக் கொடுத்தவையும், முன்னின்று செய்தவையும் பலப்பலவாகும். அவற்றில் ஒரு சில மட்டுமே இங்கே குறிக்கப்பட்டுள்ளன.

திரு. சேஷய்யர் :

திருப்பத்தூர் திரு. சேஷய்யர் என்பவர் ஒரு சாதாரணப் பத்திரம் எழுதும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர். இவர் நாள் முழுவதும் ஜில்லா முன்சீப் கோர்ட்டில் இருந்துகொண்டு அங்கே வரும் வழக்குகளை எல்லாம் மிகவும் உன்னிப்பாய்க் கவனித்து வருவார். அதனால் பல சட்ட நுணுக்கங்களெல்லாம் அவருக்குத் தெளிவாக இருந்தன. திரு. சேஷய்யர் அவர்கள் ஷண்முகரிடம் அடிக்கடி வருவதுண்டு. அப்படி வரும்போது கோர்ட்டுகளில் வரும் புதிய வழக்குகளைப் பற்றியும் சட்ட நுணுக்கங்களைப் பற்றியும் ஷண்முகரிடம் கூறுவார். இப்படியே ஷண்முகரின் சட்ட அறிவும் வளர்ந்தது. பத்திரங்கள் எழுதுவதற்கும் இவர் சேஷய்யரிடம் பழகிக் கொண்டார்.

திரு. இராகவேந்திராச்சார் :

இந்த நகரில் பிரபல வழக்கறிஞராக விளங்கிய திரு. பி. இராகவேந்திராச்சார் அவர்களிடம் ஷண்முகர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஸ்ரீ சுந்தர வீர ஆஞ்சநேயர் கோயிலில் விஷ்ணு கார்த்திகை அன்று எந்த நேரத்தில் தீபம்



ஷண்முகர் - தமிழ்க்கடல் ராய. சொ. அவர்களுடன் (1968)

ஏற்ற வேண்டும் என்ற வழக்கு கோர்ட்டில் 1913இல் வந்த போது, இந்த நகரில் வழக்கறிஞர்களாக இருந்த எவரும் கோயிலின் சார்பில் கோர்ட்டில் ஆஜராக முன்வரவில்லை. அப் போது திரு. பி. இராகவேந்திராச்சார் கோயிலின் சார்பில் வாதாடினர். இவர் அது முதல் பிரபலமடைந்தார். கோயி லின் சார்பில் வழக்கை நடத்தியவர்களில் ஒருவராயிருந்த ஷண்முகருக்கும், திரு. இராகவேந்திராச்சார் அவர்களுக்கும் அது முதல் நட்பு ஏற்பட்டு வளர்ந்து வந்தது. வழக்குகள் சம்பந்தமாக மட்டுமே அல்லாமல் வேறுபல விஷயங்களிலும் ஷண்முகர் திரு. இராகவேந்திராச்சார் அவர்களுடன் ஆலோசனை கேட்பதுண்டு. குறிப்பாக ஐந்து சாஸ்திரங்கள் சம்பந்தமாக எல்லா விஷயங்களிலும் தமக்கு எழும் ஐயங்களை ஷண்முகர் திரு. இராகவேந்திராச்சார் அவர்களிடம கேட்டுத்தெரிந்து கொள் வார். 1944இல் ஷண்முகர் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டபோது, திரு இராகவேந்திராச்சார் அவர்கள் எல்லா வற்றையும் சுமூகமாக முடித்து வைத்தார்.

ஜோலார்பேட்டை வி. வரதராஜ முதலியார் :

ஜோலார்பேட்டை, திரு. வரதராஜ முதலியார் இரயில்வே காண்டிராக்ட் தொழில் செய்து வந்தார். இவர் தம் ஓயாத உழைப்பினுலும், பல்லாண்டுகளாகத் தொழில் செய்து வந்த அனுபவத்தாலும் பெரும் பொருள் சேர்த்தார்; நிலபுலன்கள் நிறைய வாங்கினுர். இவர் இளமையில் செல்வராக இருக்க வில்லை. குடிப் பழக்கத்தால் இவர் குடும்பம் நலிவுற்றிருந்தது. பின்னர் நல்லவர் சேர்க்கையினுல் நலம் பல பெற்ருர். குடிப் பழக்கம் ஒழிந்தது. கடவுள் பக்தியில் சிறந்தார்; சாதுக்களை யும், துறவிகளையும் போற்றி வணங்கினுர். இவர் ஷண்முகரின் தந்தையார் அருணுசல முதலியாரிடம் அடிக்கடி வருவார்; தம்முடைய தொழிலுக்காகப் பணம் கடனுகப் பெற்று, அவ் வப்போது திருப்பிக் கொடுத்துவிடுவார். அருணுசல முதலி யாருக்குப் பின்னர், ஷண்முகரிடமும் இவருடைய நட்புத் தொடர்ந்தது. இருவருடைய குடும்பமும் ஒரே குடும்பம் போல் உறவு கொண்டு இருந்தன. ஷண்முகரை விட வரதராஜ

முதலியார் பல்லாண்டு மூத்தவர். இருப்பினும், வரதராஜ முதலியார் ஷண்முகரிடம் பெருமதிப்புக்கொண்டிருந்தார். அது போலவே ஷணமுகரும் அவரைத் தம்முடைய சிறிய தந்தையார் போல் எண்ணிப் போற்றினர். வரதராஜ முதலியாருக்குப் பின்னுலும், இரு குடும்பத்திற்கிடையே தொடர்பு நீடித்து வரு கிறது.

டாக்டர் ஜேசுதாசன்-பேற்றன் :

டாக்டர் ஜேசுதாசன் சவரிராயன், டாக்டர் பாரஸ்டர் பேற்றன் என்னும் இரு பெரிய மருத்துவ நண்பர்கள் 1920ஆம் ஆண்டில் திருப்பத்தூரை நோக்கி வந்தார்கள். ஏழை மக்க ளுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்னும் தெய்வீகத் தூண்டுதலால் உந்தப்பெற்று அவர்கள் இந்த ஊரை நாடி ஞர்கள். முதன் முதலில் அவர்களைச் சந்தித்த இந்த ஊர் மக்கள் அவர்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் ஏதோ மதப் பிரச்சாரத்திற்கும், மக்களை மத மாற்றம் செய் வதற்கும் இங்கு வந்துள்ள பாதிரிமார்கள் என்றே மக்கள் ஐயத் துடன் நோக்கினர்கள். ஆனல் அவர்களின் தொண்டு நோக் கத்தையும், தூய வாழ்வையும், தெய்வீகச் சிந்தனைகளையும் ஒரு சிலரே உணர முடிந்தது. அவ்வாறு உணர்ந்தவர்களில் ஷண்முகரும் ஒருவராவார். அவ்வாறு உணர்ந்த ஷண்முகர், அப்பெரியார்களின் தொண்டுக்கு உதவியாக நின்றூர்; மக்க ளிடத்தில் நிலவிய அறியாமையைப் போக்கி, அப்பெரியவர் களின் தொண்டுகளைப் போற்றிப் பேசலானுர்; நாள் செல்லச் செல்ல அவர்களைப் பற்றிய தவருன எண்ணங்கள் சிறிது சிறிதாக விலகிச் சென்றன.

டாக்டர் ஜேசுதாசன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். அவர் ஒரு தமிழர்; தாய்மொழிப் பற்று மிக்கவர். தொடக்கத் திலிருந்தே அவர் ஷண்முகரிடம் தொடர்பு கொண்டிருந்தார். ஷண்முகர் தமிழ்ப் புலமை உடையவராய் இருந்ததால் அவர் களிடையே நட்பு வளர வாய்ப்பு மிகுதியாயிற்று. ஜேசுதாசன் ஷண்முகரின் குடும்ப நண்பராய் விளங்கினர்.

டாக்டர் பேற்றன் ஸ்காத்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர், இங்கு வந்த பின்னர்த் தமிழ் மொழியை முறையாகக் கற்றுக் கொண்டார். தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள அவர் தமிழாசிரியர் திரு. ஆ. கு. முருகைய முதலியாரை நாடினர். ஷண்முகருக்கும், திரு. முருகைய முதலியார் அவர்களே தமிழாசிரியராவார். முருகைய முதலியார் இல்லத்தில் டாக்டர் பேற்றன் அவர்களும், ஷண்முகரும் அடிக்கடி சந்திக்க வாய்ப்பு நேர்ந்தது. ஷண்முகரிடம் பேற்றன் அவர்களும் கொச்சைத் தமிழில் பேசி அவருடைய நண்பரானர்.

இந்த மருத்துவ நண்பர்கள், திருப்பத்தூரில் கிறிஸ்து குல ஆசிரமத்தை நிறுவி, ஏழை எளிய மக்களுக்கு மருத்துவத் தொண்டு ஆற்றிய கதை, ஒரு மாபெரும் வரலாருகும். அவர்கள் தொண்டினுல், இப்பகுதியில் வாழும் மக்கள் பெற்ற நன்மையை அளவிடமுடியாது. காலரா முதலான தொத்து நோய் பரவியபோதெல்லாம், அப்பெரியவர்கள் இரவு பகல் கருதாது, உணவைப் பற்றியும் கவலையில்லாமல், கிராமங் களுக்குச் சென்று ஆற்றிய தொண்டுகள், கேட்பவர் உள்ளத்தை நெகிழச் செய்வன. ஏழை நெசவாளர்கள் பலர் வாழும் ஆதி யூர் என்னும் கிராமத்தில் பரவியிருந்த ஒரு பொல்லாத காய்ச்சல், தொடர்ந்து பல மாதங்கள் அந்த ஊர் மக்களை வாட்டி வதைத்தது. உதவியற்ற அந்த மக்களுக்கு டாக்டர் பேற்றன் நாள்தோறும் சைக்கிளில் சென்று ஆற்றிய மருத் துவ உதவியை, அந்த ஊர்மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். ஆதியூர் மக்களின் அவதியைக் கேள்வியுற்ற ஷண்முகர், குடியேற்றத்திலிருந்து அங்கு வந்து ஒவ்வொரு குடும்பத்தின ருக்கும் தனித்தனியே பண உதவி செய்தார். டாக்டர் பேற்றன் அவர்களின் சலியாத சேவையை நேரில் கண்ணுற்று வியந்து பாராட்டினர்.

கிறிஸ்து குல ஆசிரமத்தை ஸ்தாபித்த நாற்பதாவது ஆண்டில் விழா கொண்டாடினர்கள். அப்போது ஷண்முகர் அவ்விழாவில் கலந்துகொண்டு, ஆசிரமத்தின் தொண்டுகளைப் பாராட்டி வாழ்த்துப்பா பாடி வழங்கினர்.

மிஸ். ஹோம்ஸ் அம்மையார் :

திருப்பத்தூர் நகரில் கோஷா ஆஸ்பத்திரி என்று வழங்கிய அரசினர் பெண்கள் மருத்துவமனையில் 1900ஆம் ஆண்டுக்கும் 1928ஆம் ஆண்டுக்கும் இடையில் மிஸ். ஹோம்ஸ் அம்மையார் டாக்டராகப் பணி புரிந்து வந்தார். இவர் ஓர் ஆங்கிலோ-இந்தியப் பெண்மணி. எல்லா மக்களிடமும் மிக அன்பாகப் பழகி அவர்கள் உள்ளங்களைக் கவர்ந்திருந்தார். தாம் செய்த பணியில் மிகவும் ஈடுபாடு கொண்டு உழைத்தார். ஷண்முகர் குடும்பத்துப் பெண்கள் உடல் நலம் குறைந்த போதெல்லாம் இந்தக் கோஷா ஆஸ்பத்திரிக்குச் சென்று ஹோம்ஸ் அம்மையாரிடம் சிகிச்சை பெற்று வந்தனர். இப்படி ஷண்முகர் குடும்பத்தினருக்கு இந்த அம்மையார் அறிமுகமானார். பல ஆண்டுகள் இவர் இந்நகரிலேயே இருந்து பணியாற்றி வந்ததால் ஷண்முகர் குடும்பத்திற்கு மிகவும் நெருங்கிய பழக்கமுள்ள டாக்டரானார். ஒரு முறை ஹோம்ஸ் அம்மையாருக்கு அம்மை நோய் கண்டது. இதனைக் கண்டு இவர் அஞ்சினார். அப்போது ஷண்முகரின் தாய்வழிப்பாட்டியார் – 'கும்மஸ்கல்பாட்டி' என்று வழங்கி வந்த சின்னம்மாள் – ஹோம்ஸ் அம்மையாருக்கு உடனிருந்து உதவி செய்தார்; மாரியம்மன் கோயிலுக்குச் சென்று நீர் தெளித்து வந்தார்; வேப்பிலை கொண்டு அம்மையாரின் உடலில் நீர் தெளித்தார். அம்மை நோய் நீங்கிய பின்னர் ஹோம்ஸ் அம்மையார் ஷண்முகர் குடும்பத்தாருடன் உறவினர் போல் பழகி வந்தார். இரயில்வே ஸ்டேஷன் சாலையில் திரு. ஆரிச் செட்டியார் புதிதாகக் கட்டிய பங்களாவை விலைக்கு வாங்கிக்கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார். 1928ஆம் ஆண்டில் ஹோம்ஸ் அம்மையார் ஓய்வு பெற்ற போது தம்முடைய பங்களாவை ஷண்முகர் குடும்பத்திற்கே விற்றுவிட்டு பெங்களூர் சென்று விட்டார்.

டாக்டர் மு. வ. :

இன்று மு. வ. என்ற இரு எழுத்துகளும் தமிழ் மக்கள் பெரும்பாலோருக்கு மிகவும் அறிமுகமான எழுத்துகளாகும். இந்த இரு எழுத்துகளுக்குரிய டாக்டர் மு. வரதராசன்

என்பவர், திருப்பத்தூரில் பிறந்து வளர்ந்து, 1939ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர். இவர் திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி ஏற்ற பின்னர், வித்துவான் இறுதித் தேர்வு எழுதினர். அந்தத் தேர்வில் அவர் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றுத் திருப்பனந்தாள் மடத்தினர் வழங்கும் ஆயிரம் ரூபாய்ப் பரிசுக்கு உரியவரானர். இதனை அறிந்த ஷண்முகர் தம்முடைய நகருக்கு இந்தப் பெருமையைச் சேர்த்த வரதராசனுரைப் பாராட்டவேண்டுமென்று எண்ணினர். அப்போது நகர் மன்றத்தின் தலைவராக இருந்த திரு. எம். விஸ்வநாத முதலியாருடன் இணைந்து ஸ்ரீ மீனுட்சி திரை அரங்கில் பாராட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்தார். ஷண்முகர் தாமே வாழ்த்துப்பா இயற்றி அந்த மேடையில் படித்துச் சிறப்புச் செய்தார். இது ஒரு மாபெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அது முதல் மு. வ. அவர்கள் அடிக்கடி ஷண்முகரிடம் வந்து பேசிப் பழகுவார். மு. வ. அவர்கள் இறுதி நாள்வரை ஷண்முகரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார்.

காரைக்குடி தமிழ்க்கடல் ராய. சொ. :

காரைக்குடி ராய. சொக்கலிங்கம் அவர்கள் இளமையில் தீவிர தேசியவாதியாகத் திகழ்ந்தவர்; காந்தி பக்தர்; காரைக்குடியில் குடியேறி வாழ்ந்திருந்த 'கம்ப நாடர்' ஆசிரியர் மோகனூர் வே. கோவிந்தராஜ அய்யங்கார் அவர்களிடம் கம்பராமாயணத்தைப் பாடம் கேட்டவர். இவருக்குக் கம்பரிடத்தில் ஆழ்ந்த பற்றுதல் ஏற்படுத்தியவர் கோவிந்தராஜ அய்யங்கார் அவர்களே ஆவார். ராய. சொ. அவர்கள், காந்தி பிள்ளைத் தமிழ் எழுதிப் புகழ் பெற்றவர். கம்பராமாயணத்தைப் பட்டிமண்டபம் ஏற்றிப் பாரறியச் செய்த பெருமை இவருடையதேயாகும். பட்டி மண்டபத்துக்குத் தலைமை தாங்க இவர் திருப்பத்தூர் வந்தபோது, ஷண்முகருக்கு அறிமுகமானர். தமிழ்ப் புலமை வாய்க்கப் பெற்ற இவ்விரு பெரியவர்களும் இலக்கிய நயங்களைக் கலந்துரையாடி மகிழ்ந்தனர். ஷண்முகர் இயற்றிய "இராகவன் புகழ்மாலை" என்னும் நூலுக்கு, ராய. சொ. அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

மோ. வே. கோவிந்தராஜ அய்யங்கார் :

மோகனூர் வே. கோவிந்தராஜ அய்யங்கார் அவர்கள் கம்ப ராமாயணத்தில் ஆழ்ந்த புலமையும் பற்றுதலும் கொண்டவர். வடமொழியில் ஆதிகாவியமாக விளங்கும் வால்மீகி இராமாய ணத்தைக் காட்டிலும் அதன் வழிநூலாகிய கம்பர் இயற்றிய "இராம காதை' பலவகையிலும் சிறந்தது என்பது இவருடைய உறுதியான கோட்பாடாகும். இதனை வலியுறுத்தி நிலைநிறுத் துவதற்காக இவர் " கம்ப நாடர் " என்னும் திங்கள் இதழைத் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தி வந்தார்கள். ஒரு திங்கள் இதழை நடத்துவதற்குத் தேவையான ஆற்றலும், மனவுறுதியும் இவரிடம் இருந்தன என்றாலும், கடவுள் அதற்கு வேண்டிய பொருள் வளத்தை இவருக்கு அளிக்கவில்லை. எனவே, தம்மை ஆதரிக்கும் புரவலர்களை நாடி இவர் காரைக்குடிக்குச் சென்று அங்கேயே குடியேறி விட்டார். இவர் எழுத்தில் வல்லவராக இருந்தது போலவே, பேச்சிலும் வன்மை மிக்கவர். கம்பராமா யணப் பிரசங்கத்தை இவர் மிகவும் சுவைபட நிகழ்த்துவார். இந்தப் பெரியவர் இருமுறை திருப்பத்தூருக்கு வந்து, ஸ்ரீராம நிலையத்தில், இராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். இவரிடத்தில் ஷண்முகருக்குப் பெருமதிப்பு உண்டு. இவர் கம்பரைப் போற்றிப் புகழும் பண்பை, ஷண்முகர் வியந்து பாராட்டுவார்.

ஸ்ரீ பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள் :

காஞ்சிபுரம் ஸ்ரீ பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகளி டத்தில் ஷண்முகருக்கு நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. பல்லாண்டுகளாக ஆசாரிய சுவாமிகளை ஷண்முகர் அறிவாராயி னும், அவரிடம் இவருக்கு இந்தப் பதினைந்து ஆண்டுகளா கவே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1963 இல் ஷண்முகர் தாம் வெளியிட்ட " நூற்றெட்டுத் திருப்பதி போற்றி அகவல் " என்னும் நூலை ஆசாரிய சுவாமிகளுக்கு அனுப்பி வைத்தார். அதனைக் கண்ட சுவாமிகள் "அது மிக்க பயனுள்ள நூல்" என்று பாராட்டி எழுதினர். அது முதற்கொண்டு இவர்களிடையே நட்புப் பெருகி வளர்ந்தது. அடிக்கடி கடித வாயிலாகத் தங்கள்

அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள். 1971இல் சுவாமிகளுக்கு எண்பது ஆண்டு நிறைவுவிழா நிகழ்ந்த போது ஷண்முகர் காஞ்சிக்கு நேரில் சென்று சுவாமிகளை வணங்கி வாழ்த்தினார். சுவாமிகள் ஷண்முகரை நேரில்கண்டு பெருமகிழ்வு எய்தினார். அன்று (6—4—1971) ஷண்முகர் வெளியிட்ட "சூடிக் கொடுத்த சுடர்க் கொடி" என்னும் நூலை ஸ்ரீ சுவாமிகளின் திருமாளிகையில் அரங்கேற்றம் செய்தார்கள். அப்போது அம்மாளிகையில் எழுந்தருளியிருந்த பாகவதோத்தமர்களிடையே இந்நூலின் சிறப்பைப் பற்றி சுவாமிகள் எடுத்துரைத்து ஷண்முகரின் பக்தியையும் தமிழ்ப் புலமையையும் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

குடும்பத்தின் ஆசாரிய சுவாமிகள் :

கர்னாடக மாநிலம், கோலார் ஜில்லா, சீனிவாசபுரம் தாலுக்கா, கொப்பவாருபல்லி அக்ரஹாரத்தில் உள்ள ஸ்ரீநரசிம்ம பட்டர் அவர்களின் பெரியோர்கள் ஷண்முகரின் மூதாதையர்களுக்குப் பஞ்ச சமஸ்காரம் செய்து வைத்தார்கள். ஸ்ரீநரசிம்ம பட்டர் இடத்திலும் அவருடைய திருக்குமாரர் ஸ்ரீ சுதர்சன பட்டரிடத்திலும் ஷண்முகரின் குடும்பத்தினர் பஞ்ச சமஸ்காரம் செய்துகொண்டு பக்தியுடன் இருந்து வருகிறார்கள்.

இந்த ஆசாரிய குடும்பத்தினர்களுக்குத் தமிழ்மொழி தெரியாது. அவர்கள் சிஷ்யர்களைக் காண்பதற்கு நேரில் வருவது அரிதாக இருந்து வந்தது. இவர்கள் இருக்கும் இடத்துக்குப் போக்கு வரத்தும் எளிதாக இல்லை. இந்த காரணங்களினால் தம்பி திரு. காளியப்ப முதலியாரின் ஆலோசனைக்கு இணங்க, ஸ்ரீ பெரும்புதூரில் உள்ள ஸ்ரீ ஆசூரி நரசிம்மாசாரிய சுவாமிகளிடம், ஷண்முகர் குடும்பத்தின் தற்போதுள்ள சிறுவர்களுக்குப் பஞ்ச சமஸ்காரம் செய்து வைத்தார்கள். தற்போது இவரையும் ஷண்முகர் குடும்பத்தினர் ஆசாரியராக ஏற்றுக் கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

திருமுருக கிருபானந்தவாரியார் :

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் சிறு வயது முதலே திருப்பத்தூருக்கு வந்து பழக்கமானவர். அவருடைய

தந்தையார் திரு. மல்லையதாஸ் பாகவதர் ஆண்டுதோறும் மகா சிவராத்திரி அன்று இந்நகரிலுள்ள ஸ்ரீ தண்டபாணி சுவாமி கோவிலில் இசைச்சொற்பொழிவு நிகழ்த்துவார். அப்போது சிறுவராக இருந்த வாரியார் சுவாமிகளும் தந்தையாருடன் வந்து சேர்ந்து இசைபாடிப் பயிற்சி பெறுவார். அதனால் இந்நகரில் செங்குந்தர் குலப்பெருமக்கள் பலருக்கு வாரியார் சுவாமிகள் நன்கு தெரிந்தவராவார். ஷண்முகர் வயதில் மூத்தவர் என்பதினாலும், தமிழ்ப் புலமை பெற்றவர் என்ற முறையிலும், வாரியார் சுவாமிகளுக்கு ஷண்முகரிடம் பெருமதிப்பு உண்டு. திருப்பத்தூர் வரும்போதெல்லாம் அவர் ஷண்முகரைக் கண்டு, பேசி மகிழத் தவறுவதில்லை. ஷண்முகர் இயற்றிய ''இராகவன் புகழ் மாலை'' என்னும் நூலுக்கு, வாரியார் சுவாமிகள் சாற்றுக் கவி அளித்துச் சிறப்பித்துள்ளார்.

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் :

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியாருடன் ஷண்முகருக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததில்லை. இருவரும் ஒரே ஒரு முறைதான் சந்தித்திருக்கிறார்கள். அது மறக்க முடியாத சம்பவமாகும். குடியேற்றத்தில் ஒரு கல்லூரி ஏற்பட வேண்டுமென்று விரும்பி முயற்சி செய்தபோது ரூபாய் ஐந்துலட்சம் அரசாங்கத்திடம் டெபாசிட் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி, திருமகள் கல்விச் செல்வத்திலிருந்து அந்தத் தொகையைச் செலுத்திவிட்டார்கள். சென்னைப் பல்கலைக் கழகம், கல்லூரி தொடங்க அனுமதி வழங்க வேண்டும். அதற்காக அப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்களை நேரில் சென்று பார்க்கவேண்டுமென்று ஷண்முகர் விரும்பினார். அவரைப் பேட்டி காண்பதற்காகக் கடிதம் எழுதினார். ஒரு குறித்த நாளில் பிற்பகல் 4-00 மணிக்குமேல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தம்மை வந்து காணலாம் என்று டாக்டர் முதலியாரிடமிருந்து பதில் வந்தது. பேட்டிக்காகக் குறிப்பிட்டிருந்த நேரம் ஐந்து நிமிடம் மட்டுமே ஆகும். ஷண்முகர் பேட்டி காண்பதற்காகச் சென்னைக்குப் புறப்பட்டார். குடியேற்றம் ஸ்ரீலட்சுமி



ஷண்முகர் - திருவாரூர் வள்ளல்

திரு. தி. ந. சபாபதி முதலியார் அவர்களுடன் (1947)

சரஸ்வதி பஸ் உரிமையாளர் திரு. பி. இராஜகோபால் நாயுடு, எம். எல். ஏ. அவர்களும் ஷண்முகருடன் சென்றார். 4-00 மணி ஆனபிறகு ஷண்முகரைத் துணைவேந்தர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். ஷண்முகர் தம் கையில் கொண்டு சென்ற விண்ணப்பத்தைத் துணைவேந்தரிடம் கொடுத்தார். "எங்கள் ஊருக்கு எப்படியாகிலும் கல்லூரி வருவதற்குத் தாங்கள் அனுமதி வழங்கவேண்டும்" என்று ஷண்முகர் துணைவேந்தரிடம் கேட்டுக்கொண்டார். அப்போது டாக்டர் ஏ. இலட்சுமண சாமி முதலியார் அவர்கள் சிரித்துக்கொண்டே, "உங்கள் ஊரில் கல்லூரி அமைப்பதற்கான தீர்மானத்தை சிண்டிகேட் சபை நிறைவேற்றிவிட்டது. தாங்கள் நேரில் வருவதாகக் கடிதம் வந்ததால், எங்கள் அனுமதி வழங்கும் கடிதத்தைத் தங்களுக்கு அனுப்பாமல் நிறுத்திவைக்கச் சொன்னேன்" என்று டாக்டர் முதலியார் சொன்னார். இதற்குள் பேட்டிக்காகக் கொடுக்கப் பட்டிருந்த ஐந்து நிமிட நேரம் முடிந்து விட்டது, ஷண்முகர், டாக்டர் முதலியாருக்குத் தம்முடைய நன்றியையும், மகிழ்ச்சி யையும் சொல்லிவிட்டு விடைபெறுவதற்காக எழுந்து நின்றார். அப்போது டாக்டர் முதலியார் "பெரியவரே, உட்காருங்கள். உங்களை நேரில் பார்ப்பதற்காகவே நான் எங்கள் உத்தரவை அனுப்பாமல் நிறுத்திவைத்தேன். ஐந்துலட்ச ரூபாயையும் நன்கொடையாகக் கொடுத்துவிட்டுக் 'கல்லூரி நிருவாகத்தில் எங்களுக்கு எவ்விதப் பங்கும் வேண்டாம்' என்று எழுதிய பெரியவரை நேரில் காணவேண்டுமென்ற விருப்பத்தினாலேயே இவ்வாறு செய்தேன். இந்தக் காலத்தில் இப்படி யார் செய்வார் கள்? தங்களைப் பார்த்ததில் எனக்குப் பெரிய மகிழ்ச்சி" என்று உள்ளம் நிறைந்து கூறினார். அதன் பின்னர் ஏறக்குறைய இருபது நிமிடங்கள்வரை டாக்டர் முதலியார் ஷண்முகருடன் பேசிக் கொண்டிருந்தார்.

டாக்டர். இராஜேந்திர பிரசாத் :

டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் அகில இந்திய காங்கிரஸின் தலைமையை ஏற்ற பின்னர்த் தென்னாட்டில் சுற்றுப் பயணம் வந்தார். அப்படி வருகையில் அவர் திருப்பத்தூருக்கும்

வந்தது குறிப்பிடத்தக்கதாகும். அகில இந்திய காங்கிரஸ் தலைவராயிருந்து இந் நகருக்கு வந்த வடநாட்டுத் தலைவர் அவர் ஒருவரேயாவார். அவருக்குத் திருப்பத்தூர் மக்கள் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். ஷண்முகர் அப்போது திருப்பத்தூர் தாலுக்கா காங்கிரஸ் தலைவராய் இருந்தார். எனவே, அகில இந்தியகாங்கிரஸ் தலைவரை வரவேற்கும் வாய்ப்பு ஷண்முகருக்கு ஏற்பட்டது. டாக்டர் பிரசாத் அவர்கள் திருவண்ணுமலையிலிருந்து இந் நகருக்கு வருகை தந்தார்கள். எனவே வரவேற்புக் குழுவினர் திருவண்ணுமலைச் சாலையில், நகருக்குள் நுழையும் இடத்தில் தலைவருக்குச் சிறப்பான வரவேற்பினைக் கொடுத்தார்கள்; அங்கிருந்து அவரை மேளதாளங்களுடன் ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். ஷண்முகரின் வீட்டில் அகில இந்திய காங்கிரஸ் தலைவருக்குத் தேனீர் வழங்கப்பட்டது. அம் மாபெரும் தலைவர், சூழ்ந்திருந்த மக்களுடன் முகமலர்ந்து பேசிய மொழிகள் எல்லோருடைய உள்ளத்தையும் நெகிழச் செய்தன.

டாக்டர் ப. சுப்பராயன் :

டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் சென்னை மாநில ஆளுநர் குழுவில் முதல் உறுப்பினராக இருந்தார்; அப்போது திருப்பத்தூர் நகர் மன்றத்திற்கு ஷண்முகரை ஒரு கவுன்சிலராக நியமனம் செய்தார். இது 1927இல் நிகழ்ந்தது. அதுமுதல் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஷண்முகருக்கு அறிமுகமானவரானுர். 1937இல் ஷண்முகர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சென்னை மாநிலச் சட்டமன்றத்திற்கு ஒரு வேட்பாளராக நின்றபோது, டாக்டர் சுப்பராயன் தேர்தல் பிரச்சாரத்திற்காகத் திருப்பத்தூருக்கு வந்தார். 1937இல் ஷண்முகரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, டாக்டர் சுப்பராயன் அவர்கள் குடியேற்றம் வந்து திருமகள் மில் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினுர். அவருடைய நல்ல கைராசியினுல், அந்த மில் கட்டடங்கள் பலப் பலவாகப் பெருகி வளர்ந்தன. டாக்டர் அவர்கள் இறுதிவரையில் ஷண்முகருடன் தொடர்பும் நட்பும் கொண்டுஇருந்தார்.

மூதறிஞர் இராஜாஜி :

சுதந்தர இயக்கத்தில் ஈடுபட்டிருந்த அனைவரும் இராஜாஜியை நன்கு அறிந்திருந்தார்கள். ஷண்முகரும் காந்தியடிகளிடத்தில் பக்தியுடையவராய்ச் சுதந்தரம் பெறுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். அந்த வகையில் இராஜாஜியினிடத்தில் ஷண்முகருக்குப் பெருமதிப்பு உண்டு. 1934இல் டில்லி சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்றது. கோயமுத்தூர், சேலம், வட ஆர்க்காடு ஆகிய மூன்று ஜில்லாக்களும் ஒரு தொகுதியாய் அப்போது இணைந்து விளங்கின. இந்தத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் கோவை திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களும், ஜஸ்டிஸ் கட்சி சார்பில் சேலம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களும் போட்டியிட்டார்கள். திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியாரை ஆதரித்து இந்தப் பகுதியில் ஷண்முகர் வேலை செய்தார். திரு. செட்டியார் அந்தத் தேர்தலில் வெற்றிபெற்றார். தேர்தல் வெற்றியைக் கொண்டாடுவதற்காக, சேலம் ஓரியண்டல் திரையரங்கில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அந்த விழாவிற்கு ஷண்முகரும் அழைக்கப்பட்டார். அந்தக் கூட்டத்தில் இராஜாஜி அவர்களும், திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திலிருந்து வந்து கலந்து கொண்டார். அந்த இடத்தில் ஷண்முகர் முதன் முதலாக இராஜாஜியை நேரில் கண்டு மகிழ்ந்தார். அது முதல் இராஜாஜி இடத்தில் ஷண்முகருக்குப் பழக்கம் ஏற்பட்டது. 1937இல் இராஜாஜி சென்னை மாநிலத்தில் அமைச்சரவை அமைத்தபோது அந்தச் சட்டமன்றத்தில் ஷண்முகரும் ஓர் அங்கத்தினராக இடம் பெற்று இருந்தார். அப்போது இராஜாஜி இடத்தில் நெருங்கிப் பழக ஷண்முகருக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இராஜாஜியின் செயல்கள் பலவற்றில் ஷண்முகருக்குக் கருத்து மாறுபட்டு இருந்தும், ஷண்முகர் அவரிடம் பெருமதிப்புக்கொண்டிருந்தார். இராஜாஜியின் அறிவாற்றலும், செயல் திறனும் ஷண்முகரைக் கவர்ந்தன. இராஜாஜியைப் போன்ற பேரறிஞரைக் காண்பது அரிதென ஷண்முகர் உறுதியாய் நம்பினார். 1945இல் ஷண்முகர் வெளியிட்ட "இராகவன் புகழறுபது" எனும் நூலைப் பெற்று மகிழ்ந்த இராஜாஜிஅவர்கள் ஷண்முகரைப்பாராட்டி ஒருகடிதம் எழுதினார்.

பெருந்தலைவர் காமராஜ் :

1940இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பதவிக்குத் திரு காமராஜ் அவர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றதுமுதல், காமராஜ் தமிழ் நாட்டின் தனிப் பெருந்தலைவராக வளரத் தொடங்கினர். அவருடன் கருத்து மாறுபட்டவர்கள் எல்லாம் அவருடைய தூய அரசியல் வாழ்வை வியந்து பாராட்டினர். 1954இல் காமராஜ் அவர்கள் முதன் மந்திரி பதவி ஏற்ற போது, அவர் சென்னைச் சட்டமன்றத்தின் இரு சபைகளில் எதிலும் உறுப்பினராக இடம் பெற்றிருக்கவில்லை. ஆகவே அவர் ஏதாவதொரு தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வரவேண்டியதாயிற்று. காமராஜ் அவர்களைப் பல தொகுதியினர் தங்கள் தங்கள் தொகுதியில் நிற்குமாறு அழைத்தனர். அதுபோலவே, குடியேற்றம் மக்களின் சார்பில் ஷண்முகரும் காமராஜ் அவர்களைக் குடியேற்றம் தொகுதியில் தேர்தலில் நிற்குமாறு அழைத்தார். அப்போது குடியேற்றம் தொகுதிக்குரிய இடம் காலியாகவும் இருந்தது. காமராஜ் அவர்களும் ஷண்முகரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, குடியேற்றம் தொகுதியில் தேர்தலில் நின்றார். குடியேற்றம் தொகுதித் தேர்தலை முன்னின்று நடத்தும் பொறுப்பு ஷண்முகருடையதாயிற்று. தேர்தல் வேலைகள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக நடந்தன. ஷண்முகர் தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நல்ல முறையில் முடிக்க வேண்டும் என்று கருதி, இரவு பகல் ஓயாமல் உழைத்தார்; ஊர் ஊராகச் சென்று தேர்தல் வேலைகளைச் செய்தார். முதலமைச்சர் என்ற முறையில் காமராஜ் அவர்களின் தேர்தலில் ஆர்வம்கொண்ட நூற்றுக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் தமிழ்நாடெங்கிலும் இருந்து குடியேற்றம் வந்து குவிந்தனர். அவர்கள் அனைவருக்கும் உணவளிக்கும் பொறுப்பினையும், இருக்கை இடவசதி செய்து கொடுக்கும் பணியினையும் ஷண்முகர் ஏற்றுக்கொண்டார். இந்தத் தேர்தலில் ஷண்முகர் ஆற்றியபங்கினைத் தமிழ்நாடெங்கிலுமுள்ள காங்கிரஸ் அன்பர்கள்—தலைவர்கள் முதல் தொண்டர்வரை—அனைருவம் புகழ்ந்து பாராட்டினார்கள். அதுமுதல் காமராஜ் அவர்களுக்கும்

நட்பும் பெருகி வளர்ந்தது. காமராஜ் அவர்கள் குடியேற்றத்திற்கும் திருப்பத்தூருக்கும் வந்த பொழுதெல்லாம் ஷண்முகரை நேரில் வந்து காணத் தவறியதில்லை. காமராஜ் அவர்கள் ஷண்முகரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார். தமிழ் நாட்டில் காங்கிரஸ் அன்பர்கள் காமராஜ் அவர்களைப் "பெரியவர்" என்று மிக்க மரியாதையுடன் குறிப்பிடுவது வழக்கம். அந்தப் பெரியவர், ஷண்முகரைப் "பெரியவர்" என்று அன்புடன் குறிப்பிடுவார். அவரைக் காமராஜ் அவர்கள் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் எழுந்து நின்று வரவேற்பார்.

காக்கங்கரை அப்துல் மஜீத் சாயபு :

திரு. அப்துல் மஜீத் சாயபு அவர்கள் ஷண்முகரின் தந்தையார் திரு. அருணாசல முதலியார் அவர்களின் நண்பராவார். காக்கங்கரைச் சந்தையை இவர் ஏலத்தில் எடுப்பார். அருணாசல முதலியாருக்குப் பின்னும் இவர் நெடுங்காலம் வாழ்ந்தார். ஷண்முகரிடம் இவர் பழைய நட்புரிமையோடு அடிக்கடி வந்து பழகுவார். ஷண்முகர் 1937 இல் மாகாண சட்டசபைத் தேர்தலில் நின்றபோது, இவர் காக்கங்கரை வட்டத்தில் அயராது உழைத்து ஷண்முகரின் வெற்றிக்குப் பெரிதும் பாடுபட்டார்.

சின்னகரகப்பட்டி சி. வெ. சின்னப்ப நாயுடு :

சின்னகரகப்பட்டி திரு. சி. வெ. சின்னப்ப நாயுடு அவர்கள் பெரியகுடியில் பிறந்தவர். நிலபுலன்கள் நிறைய உண்டு. நல்ல தரும குணம் படைத்தவர். பல ஆண்டுகளாக இவர் ஷண்முகருக்கு அறிமுகம் ஆனவர். 1933இல் ஷண்முகர் தாலுக்கா போர்டு தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, திரு. சின்னப்ப நாயுடு தாலுக்கா போர்டு உறுப்பினராக இருந்தார். 1937 இல் கந்திலியில் ஒரு தொடக்கப்பள்ளிக்காகத் திரு. சின்னப்ப நாயுடு ஒரு கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தார். திரு. சின்னப்ப நாயுடு தம் இறுதிநாள் வரையில் ஷண்முகரிடம் அன்பும் மரியாதையும் மிக்கவராய் இருந்தார்.

பெரியகரகப்பட்டி இஜாராதார் சி. எ. வேங்கடப்ப நாயுடு :

திரு. சின்னப்ப நாயுடு அவர்களைப் போலவே இஜாராதார் திரு. வேங்கடப்ப நாயுடு அவர்களும் ஷண்முகரிடம் பல்லாண்டுகளாக நெருங்கிப் பழகி வந்தார். இவர் ஷண்முகரிடம் பணம் கொடுப்பல் வாங்கல் செய்து வந்தார். இவரும் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்; "இஜாரா" என்று வழங்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்துக்கு உரிமை பெற்றிருந்தார். இவை தவிர வேறு நிலபுலன்களையும் தோப்புத் துரவுகளையும் இவர் சம்பாதித்தார். இவர் எளிய வாழ்வும் உயரிய நோக்கமும் கொண்டு வாழ்ந்தார். இவர் அன்னதானத்தில் பெரும் பற்றுடையவர்; இவருடைய வீட்டில் பண்ணை ஆட்களுக்கும் சாதுக்களுக்கும், ஏழைகளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் நாள்தோறும் உணவு படைப்பதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் காலத்துக்குப் பின்னரும் இவருடைய துணைவியார் திருமதி கே. வி. பாப்பு அம்மாள் அவர்கள், இந்தத் தருமங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றார். கஜ்ஜல்நாய்க்கம்பட்டியில் அரசு உயர்நிலைப்பள்ளி, இஜாராதார் திரு. சி. எ. வேங்கடப்ப நாயுடு அவர்கள் பெயரில் இயங்கி வருகிறது. இந்தக் குடும்பத்தினர் இப்போதும் ஷண்முகர் குடும்பத்தோடு தொடர்ந்து நட்புரிமையோடு பழகி வருகின்றனர். இஜாராதார் வயது முதிர்ந்த காலத்தில் தமக்குப் பேரன்முறை தூரத்து உறவினர் திரு. கே. கதிரிநாயுடு என்பவரைத் தம்மிடம் அழைத்து வைத்துக்கொண்டார். வேங்கடப்ப நாயுடுவிடம் திரு. கதிரி நாயுடு நல்ல பயிற்சி பெற்றுக்கொண்டார். இப்போதும் அவர்கள் குடும்ப வேலைகளைத் திரு. கதிரி நாயுடு அவர்களே செம்மையாக நிருவகித்து வருகின்றார்.

பள்ளத்தூர் சின்னத்தாய் அம்மாள் :

புதிய வீடு கட்டிய பிறகு 1908ஆம் ஆண்டு முதல் ஷண்முகர் சந்தைகளுக்குப் போவதை நிறுத்தி விட்டார்; வீட்டிலேயே இருந்து மற்ற குடும்பத் தொழிலைக் கவனித்து

வந்தார். 1908 முதல் 1930 வரையில் ஷண்முகரின் தம்பி திரு. பழனிசாமி முதலியார் சந்தைகளுக்குப் போய் வியாபாரம் செய்து வந்தார்; திங்கட்கிழமை திருப்பத்தூர் சந்தை, செவ்வாய்க்கிழமை மட்டறப்பள்ளிச் சந்தை, வெள்ளிக்கிழமை காக்கங்கரைச் சந்தை, ஞாயிற்றுக் கிழமை போச்சம்பள்ளிச் சந்தை — ஆக வாரத்தில் நான்கு சந்தைகளுக்குப் போய் வருவார். சந்தைகளில் நாணயமாக நல்ல சரக்குகள் விற்பதை இவர்கள் கொள்கையாகக் கடைபிடித்தவர்கள். இதனுல் கிராமங்களிலுள்ள பல மேட்டுக் குடிகள் பழக்கமாயினர். இவ்வகையில் திரு. பழனிசாமி முதலியாருக்குக் காக்கங்கரைச் சந்தையில் சின்னத்தாயம்மாள் பழக்கமானுர். சின்னத்தாயம்மாள் பல குடும்பத்தாரைத் தம்முடன் அழைத்துவந்து திரு. பழனிசாமி முதலியாரிடமிருந்து நல்ல சேலைகளாக எடுத்துக் கொடுப்பது வழக்கம். நாளடைவில் சின்னத்தாயம்மாள் திருப்பத்தூருக்கும் வந்து ஷண்முகர் குடும்பத்தோடு நெருங்கிப் பழகி வந்தார். பணம் கொடுப்பல் வாங்கலும் நடைபெற்றது. இவர்கள் மூலமாக சின்னகரகப்பட்டி திரு. சி. வெ. சின்னப்ப நாயுடு அவர்களும், பெரியகரகப்பட்டி இஜாராதார் திரு. சி. எ. வேங்கடப்ப நாயுடு அவர்களும் ஷண்முகருக்கு அறிமுகம் ஆனவர்கள். சின்னத்தாயம்மாள் குடும்பத்தாருடன் ஷண்முகர் குடும்பத்தாருக்கு ஏற்பட்ட நட்புறவு நீண்டகாலமாக நிலைத்து வருகிறது.

கஜ்ஜல்நாயக்கம்பட்டி கே. வி. இராமசாமி செட்டியார் :

திரு. கே. வி. இராமசாமி செட்டியார் அவர்களை "ஊர் செட்டியார்" என்று அழைப்பார்கள். இவர் தம்முடைய சொந்த உழைப்பால் முன்னேறி, பெரிய செல்வராக விளங்கியவர்; கொடுப்பல் வாங்கலில் நாணயத்தைப் பெரிதும் போற்றியவர். இவருடைய உற்ருர் உறவினர்க்கும், நண்பர்களுக்கும் தொழில் நடத்துவதற்காக மூலதனமாகப் பணம் கொடுத்து உதவுவார். இவர் ஷண்முகரிடம் தம்முடைய இறுதிநாள்களில் மிக நெருக்கமாகப் பழகிவந்தார்; மிகப் பெரிய அளவில்

ஷண்முகரிடம் கொடுப்பல் வாங்கல் செய்து வந்தார். இவருடைய மக்கள் திரு. கே. வி. ஆர். சென்னு செட்டியார், திரு. கே. வி. ஆர். கோவிந்த செட்டியார் ஆகிய இருவரும் ஷண்முகர் குடும்பத்தோடு நெருங்கிப் பழகி வருகின்றனர்.

கஜ்ஜல்நாயக்கம்பட்டியில் திரு. கே. சி. குப்பு செட்டியார், திரு. கே. எம். வரதப்ப நாயுடு, திரு. போ. ல. வடிகி செட்டியார் ஆகியவர்களும் ஷண்முகரிடம் நெருங்கிப் பழகிக் கொடுப்பல் வாங்கல் செய்தவர்கள் ஆவார்கள்.

ஷண்முகரின் நண்பர்கள் :

ஷண்முகரின் சிறிய தகப்பனுர் ஆறுமுக முதலியாரின் மூத்த குமாரர் தாமோதர முதலியாராவார். இவர் அருணுசல முதலியார், ஆறுமுக முதலியார், வையாபுரி முதலியார் ஆகிய மூவரின் ஆண்மக்களில் எல்லோரையும்விட வயதில் மூத்தவர். இவருடைய தந்தை இவருக்குப் பாகம் பிரித்துக் கொடுத்துத் தனியே வைத்துவிட்டார். இவர் தருமராஜா கோயில் தெருவில் இப்போது அஞ்சுமன் பள்ளிக்கூடம் உள்ள விட்டை வாங்கிக் கொண்டு அதில் குடியிருந்து வந்தார். இவர் மிகவும் நல்லவர்; சந்தைகளில் ஜவுளி வியாபாரம் செய்து தொழில் நடத்தி வந்தார்; ஷண்முகரிடத்தில் மிகுந்த அன்பும், பரிவும் உடையவர். இவரைவிட ஷண்முகர் வயதில் மிகவும் இளையவர். இருப்பினும் எந்த விஷயத்திலும் ஷண்முகரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பார்.

திருப்பத்தூரில் திரு. சி. மு. சு. ஆறுமுக செட்டியார், திரு. டி. எஸ். ஆரி செட்டியார், திரு. டி. எஸ். அருணுசல அய்யர், திரு. டி. என். தீர்த்தகிரி அய்யர், திரு. என். கோபால அய்யர் ஆகியோரிடம் ஷண்முகர் நண்பராய்ப் பழகி வந்தார். மேலும் திரு. நாராயண இராமநுசதாசர், திரு. தாதப்ப முதலியார், கோட்டை திரு. மு. ஆறுமுக முதலியார், "பெரிய வாணியம் பாடியார்" என்கிற திரு. முனிசாமி முதலியார், ஜுட்டான் என்கிற ஆறுமுக முதலியார், திரு. க. அ. வேடியப்பமுதலியார், தருமகர்த்தா திரு. ஆறுமுகமுதலியார் ஆகியோரிடம் ஷண்முகர் இளமை முதல் நெருங்கிப் பழகி வந்தார்.

திரு. தாமோதர முதலியார் ஷண்முகரின் நெருங்கிய நண்பர்; திரு. தாதப்ப முதலியார் அவர்களின் மூன்றுவது குமாரர். திரு. தாமோதர முதலியார் சிறுவயதில் ஷண்முகர் கடையில் குமாஸ்தாவாக இருந்து ஷண்முகரிடம் பயிற்சி பெற்றுர். தாமோதர முதலியார் சிறு வயதிலேயே கணக்கு வேலைகளில் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். பின்னர் இவர் உடல் நலிவுற்றதால் ஷண்முகர் கடையிலிருந்து விலகி சொந்தமாகத் தொழில் செய்யத் தொடங்கினுர். இவர், தம் இறுதிக் காலம் வரையில் ஷண்முகரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டு அவ்வப்போது ஆலோசனைகளைக் கேட்டு வந்தார்.

திரு. டி. என். ஆர். கோவிந்தசாமி முதலியார் ஷண்முகரின் சித்தி கௌரி அம்மாளின் மகனுவார். திரு. கோவிந்தசாமி முதலியார் பஞ்சாங்கம் பார்த்துச் சொல்வதிலும் நாள்களைக் கணிப்பதிலும் பயிற்சி பெற்றிருந்தார். உற்றுர் உறவினர் குடும்பங்களில் நடைபெறும் விசேஷங்களில் இவர் முதன்மையாக இருந்து அலுவல்களைக் கவனிப்பார். ஷண்முகர் குடியேற்றத்திலிருந்து திருப்பத்தூர் வந்தபின் உடல் தளர்ச்சியுற்றிருந்தபோது முகூர்த்தங்களைக் கணிப்பதிலும், ஜாதகக் குறிப்புகள் எழுதுவதிலும் ஷண்முகருக்கு இவர் உதவியாக இருந்து வந்தார்.

செலந்தம்பள்ளி திரு. சி. முருகேச முதலியார், திரு. பழனிசாமி முதலியார், திரு. சி. கந்தசாமி முதலியார், திரு சி. திருவேங்கடசாமி முதலியார், மடவாளம் ஆசிரியர் திரு. எம். குப்புசாமி முதலியார், அய்யம்பேட்டை திரு. ப. நாராயணசாமி முதலியார், ஆதியூர் திரு. க. முருகப்ப முதலியார் ஆகியோருடனும் ஷண்முகர் பழகி வந்தார்.

ஷண்முகரின் தமக்கையார் வள்ளியம்மாளின் மூத்த மகன் முருகைய முதலியாராவார். முருகைய முதலியார் ஷண்முகருடன் மிகவும் ஒத்துப்போகும் இயல்புடையவர். முருகைய முதலியாரை ஷண்முகர் அழைத்துவந்து தம்முடைய குடும்பத் தொழிலில் உதவியாக வைத்துக்கொண்டிருந்தார். இவர் எப்போதும் இரவு பகலாக இங்கேயே தங்கியிருப்பார். முருகைய முதலியார் ஜோதிட நூல்களில் வல்லவர்.

அகரம் மணியம் திரு. பழனிசாமி முதலியார், மாடப் பள்ளி திரு. வஜ்ஜிரவேல் கவுண்டர், ஆசிரியர் திரு. டி. எம். மாணிக்க கவுண்டர், சீரங்கப்பட்டி திரு. எஸ். டி. மாணிக்க கவுண்டர், அம்பலூர் திரு. டி. கரிய கவுண்டர், நாட்றம்பள்ளி திரு. ஆர். சி. சாமண்ண கவுண்டர் ஆகியவர்கள் ஷண்முக ரிடம் நண்பர்களாகப் பழகி வந்தவர்கள்.

குடியேற்றம் திரு. கே. எம். மோகனரங்கசாமி முதலியார் அவர்கள் ஷண்முகரின் கடைசி பதினைந்து ஆண்டுகளில் உற்ற நண்பராய் விளங்கினார். இவர் திரு. பு. கா. கோவிந்தப்ப முதலியார் அவர்களின் மருமகனுவார்; திருமகள் மில் தொடங் கிய காலத்திலிருந்து ஷண்முகரின் நிருவாகத் திறமைகளைப் பற்றி நுட்பமாக ஆய்ந்து அறிந்தவர். ஷண்முகரிடம் ஆழ்ந்த பற்றும் பெருமதிப்பும் இவருக்கு எப்போதும் உண்டு.

குடியேற்றம் திரு. எம். ஜி. அமிர்தலிங்க முதலியார் அவர்கள் ஷண்முகரிடம் பேரன்பு கொண்டவர். நான்கு தலைமுறைகளாக இவருடைய குடும்பத்தாருக்கும் ஷண்முகரின் குடும்பத்தாருக்கும் நட்புரிமை தொடர்ந்து வருகிறது. இவ ருடைய முப்பாட்டனார் திரு. சின்னு முதலியார்தான், ஷண்முக ரின் தந்தையார் திரு. அருணாசல முதலியாருக்கு இரண்டாவது திருமணத்தை முன்னின்று நடத்திவைத்தவர்.

குடியேற்றம் திரு. வி. எம். வாசுதேவ முதலியார் ஷண்முகரிடம் நெருங்கிப் பழகிவந்த திருமகள் மில் டைரக்டர் களுள் ஒருவராவார். இவருடைய தந்தையார் திரு. வி. முனு சாமி முதலியார் திருமகள் மில்லைத் தொடங்கிச் சிறப்புற நடத்த வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருந்தவர்; தொடக்க காலத்தில் மில்லுக்குப் பணம் தேவைப்பட்ட போதெல்லாம் தம்முடைய பெரும் பணத்தைக் கொடுத்துப் பேராதரவு தந்து ஊக்கமளித்தவர். திருமகள் மில்லை ஓட்டியபோது, இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். முதன் முதலாக நூற்ற நூல்கட்டு ஒன்றை இவர் படுக்கையிலிருந்தபடியே கையில் வாங்கிப் பார்த்து மகிழ்ந்தார். குடியேற்றத்தில் இவர் குடும்பத்தினருக்கே திருமகள் மில்லில் அதிகப் பங்குகள் உண்டு.

மு. வ. நோக்கில் ஷண்முகர் :

1945இல் ஷண்முகரின் மணி விழா கொண்டாடிய போது, டாக்டர் மு. வ. அவர்கள் எழுதிய வாழ்த்துரையின் பகுதி வருமாறு :-

" பணமே பெரிதெனும் பாசமும் இன்றிப்
புகழே பெரிதெனும் பொய்மையும் இன்றிக்
கல்வியே பெரிதெனும் கருத்தே மலர்ந்த (து);
ஒழுக்கமே விழுப்பமென் றுளியும் பெற்றது;
தொண்டே நன்றெனும் தெளிவும் கண்ட(து);
இயைந்தஇவ் வாழ்வின் இனிமை பயின்றீர்,
நீவிர் பண்படும் நீர்மையும் பெற்றீர்;
இத்தகைப் பேறுதான் இனியும் பல்லாண்(டு)
உமக்குள வாகுக உயர்வெலாம் பெறவே."

திரு. வி. க. நோக்கில் ஷண்முகர் :

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், "அறிஞர் முதலியார் வாழ்க்கை வெற்றியுடையது. எப்படி? அவர் தம் வாழ்க்கையில் கல்விச் செல்வம், பொருட் செல்வம், சேய்ச் செல்வம், பணிச் செல்வம் முதலியன பூத்துள்ளன. 'திருமகள் ஆலை' என்னும் ஓர் அமைப்பும் காய்த்திருக்கிறது. திரு. முதலியார் வாழ்க்கை பூவுடன்-காயுடன் நிற்கவில்லை; அது கனிகளையும் ஈனுகிறது!" என்று புகழ்கிறார். இவ்வாறு பூவும், காயும், கனியும் ஈந்து ஷண்முகரின் வாழ்க்கை நாட்டகத்தே நிற்கும் ஒரு நன் மரமாக விளங்குவதாகும்.

" திரு. ஷண்முக மூதலியார், திரு. கா. அருணசல முதலியாரும் திருமதி. முத்துவேடியம்மாளும் அன்பால் ஒன்றி நடத்திய அற வாழ்க்கையினின்றும் முகிழ்த்த தவச் சேய், தமிழ் மகவு, செங்குந்தச் செம்மல், திருப்பத்தூர் தீபம், அரசியல் அடைவு, அறிவுத் தெளிவு" என்றும் புகழ்வர் அறிஞர் திரு. வி. க.

ஷண்முகரின் மாபெரும் வாழ்வு 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் நாள் [காளயுக்தி ஆண்டு, ஆடி மாதம், முதல் நாள்] திங்கட்கிழமை காலை 7-40 மணி அளவில் முடிவுற்றது. ஷண்முகர் இப்பூவுலகில் 93 ஆண்டுகள் வாழ்ந்து—வாழ்வாங்கு வாழ்ந்து—மறைந்தார்.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. -திருமறை

நலம் ! நலம் ! நலம் !

வெளியிட்டு வழங்கியவர்கள் :

கா. அ. ஷ. பத்மனுபன்,

கா. அ. ஷ. ரகுநாயகன்,

செங்குந்தர் தெரு,

திருப்பத்தூர் - 635601, வ. ஆ.

※ பாரி அச்சகம் தர்மபுரி-1.